# ஓடும் மேகங்களே



இந்துமதி

3 1 MAR 200
CHENNAI

# முன்னுரை

நீண்ட காலத்திற்குப்பின் தேவி நிறுவனம் சார்ந்த கண்மணியில் நான் எழுதிய முதல் மாத நாவல் இந்த 'ஓடும் மேகங்களே.' கண்மணிக்காக நான் எழுதிய முதல் நாவலும் கூட.

இந்த நாவல் எழுதுவதற்குக் காரணமான கவையான சம்பவம் ஒன்று உண்டு.

1980–களில் தேவியில் 'கனவு மனிதர்கள்' என்கிற தொடரை மனோதத்துவ டாக்டர்களான டாக்டர் பீட்டர் பெர்னாண்டஸ், டாக்டர் தயானன், டாக்டர் விஜயகுமார் ஆகியோர் சொன்ன உண்மைச் சம்பவங்களை வைத்து எழுதிய பின்னர் நான் தேவி நிறுவனத்திற்கென்று எதுவும் எழுதவில்லை. கனவு மனிதர்கள் முதற் பதிப்பு புத்தகமாக வந்தபோது நான் முன்னுரை எதுவும் எழுதாத காரணத்தால் இத்தொடர் இந்த பத்திரிகையில் வெளிவந்தது என்பதனைக் குறிப்பிட இயலாமற் போய்விட்டது. எந்தப் பத்திரிகையில் வெளிவந்தது என்பதே தெரியாமல் புத்தகமாக வந்தபோது தேவி ஆசிரியர் திரு. ராமச்சந்திர ஆதித்தன் என்னை அழைத்துப் பேசினார்.

"புத்தகமாக வரும்போது தொடராக வெளிவந்த பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட வேண்டியது மரபு. அந்த மரபை மீறி விட்டீர்களே..." என்றார்.

"முன்னுரை எழுதுதல் என்கிற மரபை நான் மீறியதால் ஏற்பட்ட மரபு மீறுதல் இது..." என்பதை எடுத்துச் சொல்லிவிட்டு வந்தேன்.

ஆனாலும் தேவி நிறுவனத்துடன் இருந்த நட்பில் ஒரு சின்ன கீறல் விழுந்து போயிற்று. கண்ணில் விழுந்த தூசுமாதிரி இந்தக் கீறல் என்னை உறுத்திக்கொண்டே இருந்தது. தூசு அகற்றப்பட்டால்தானே உறுத்தல் நிற்கும்.

நானும் தூசு விழுந்த கண்ணை ஊதி, தூசியை அகற்ற முயலவில்லை. கண்ணும் என்னை ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

இந்தப் பாராமுகமும் உறுத்தலும் பல வருடங்கள் தொடர்ந்தன. 1992 வரை நீடித்தது.

சமீபத்தில் கோவை சென்ட்ரல் எக்ஸைஸ் கலெக்டர் மாணிக்கவாசகம் அழைத்ததன் பேரில் அவர்களது அலுவலகத்தில் சிறப்புரையாற்றச் சென்றிருந்தபோது அங்கிருந்து கூடலூர் சென்றேன். கூடலூரிலிருந்து முதுமலைக்குச் சென்றபோது எதிர்பாராதவிதமாக தேவியின் துணையாசிரியர் ஜேம்ஸ் அவர்களைச் சந்தித்தேன். அவரிடம் மனம்விட்டுப் பேசினேன்.

சென்னை திரும்பிய ஜேம்ஸ் என்னைத் தொலைபேசியில் அழைத்து உடனடியாகக் கண்மணிக்கு ஒரு நாவல் எழுதித் தரும்படி கேட்டார். நீண்டநாள் உறுத்தலும் பாராமுகமும் மறைந்ததில். மிகுந்த உற்சாகத்துடனும், சந்தோஷத்துடனும் நான் எழுதத் துவங்கிய நாவல்தான் இந்த 'ஓடும் மேகங்களே....'

கதை பிறந்த கதை இதுதான். கதையைப் பற்றி நான் சொல்வதைவிட படித்துப் பார்த்து நீங்கள் சொல்வதுதான் முறை.

இந்த நாவலை வெளியிட்ட கண்மணி ஆசிரியர் திரு. ராமச்சந்திர ஆதித்தன் அவர்களுக்கும், உதவி ஆசிரியர் ஜேம்ஸ் அவர்களுக்கும், தற்போது புத்தகமாக வெளியிட்டுத் தந்திருக்கிற பூஞ்சோலைப் பதிப்பகம் திரு. அகிலன் கண்ணன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவி கண்மணியில் படித்துவிட்டுக் கடிதம் எழுதிய வாசகர்களுக்கு என் நன்றி. இப்போது புத்தக வடிவில் படித்து கடிதம் எழுதினால் அந்த வாசகர்களுக்கும் தனியாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வேன்.

சென்னை.

27-12-92

அன்புடன்,

இந்துமதி.

# ஓடும் மேகங்களே

## 1

அரை மணி நேரமாகக் காத்துக் கொண்டு நின்றாள் திவ்யா. காத்திருத்தல் எத்தனைக் கஷ்டமான விஷயம் என்பதை உணர்ந்தாள். கால்மாற்றி மாற்றி நிற்பதென்பதும் அத்தனை சுலபமானதில்லை என்பதையும் புரிந்து கொண்டாள் அதிலும் கல்லூரிக்கு எதிரில் நிற்பது இன்னமும் கஷ்டமான விஷயம். பஸ் ஸ்டாப்பில் பஸ்ஸிற்காகக் காத்துக் கொண்டிருக்கிற மாதிரி நடிப்பதும் சிரமம். அவளோடு காத்திருந்த மாணவிகள் அத்தனை பேரும் கேட்டு விட்டார்கள்.

'என்ன திவ்யா... உன் பஸ் வந்து விட்டதே... போகலையா...?''

''ம்ஹூம்... இன்னிக்கு நான் நேராக வீட்டுக்குப் போகலை. அத்தை வீட்டுக்குப் போயிட்டுப் போகப் போறேன். அதனால் 27Dக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்...''

அத்தனை மாணவிகளும் போயாகி விட்டது. 27D கூட அடுத்தடுத்து இரண்டு பஸ்கள் வந்து போய் விட்டன. அந்த பஸ் ஸ்டாப்பில் நிற்கக் கூடிய அத்தனை எண் பஸ்களும் வந்து நின்று புறப்பட்டு விட்டன. அவளைத் தாண்டி கால் நடையில் போனவர்களெல்லாம் திரும்பித்

திரும்பிப் பார்த்துக் கொண்டு போனார்கள். விடலைப் பையன்கள் அவள் காது பட 'கேஸ்' போல இருக்குடா என்றனர்.

அதைக் கேட்டுப் பற்களைக் கடித்துக் கொண்ட திவ்யா 'பிளடிஃபூல்ஸ்' என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டாள். அத்தனை நேரம் தன்னைக் காக்க வைத்த பிரபுராம் மீது கோபம் வந்தது. சொன்ன நேரத்திற்கு வர இயலாத அவனது இயலாமையின் மீது கோபம் வந்தது. எத்தனைக் கோபமானால் என்ன ? அவனை நேரில் பார்த்தால் அத்தனையும் அடங்கி விடப் போகிறது. முகம் தானாக விளக்கேற்றிக் கொண்டு விகசிக்கப் போகிறது. உதடுகளில் புன்சிரிப்பு ஓடப் போகிறது. கண்களில் காதல் மினுமினுக்கப் போகிறது. நெஞ்சு நெகிழப் போகிறது.

'ஏன் பிரபு இத்தனை நேரம்...?' என்கிற ஒரே கேள்வி அதுவும் கூட குறைவாக, மென்மையாக, குரலினாலேயே அவனை அணைக்கிறாற் போல், வருடிக் கொடுக்கிறாற் போல் கேட்கப் போகிறாள் வேறு என்ன செய்யப் போகிறாள்...? என்ன செய்ய முடியும். அவன் முகம் பார்த்து, குரல் கேட்டு, ஏன் வெறும் பெயரை வேறு யாரும் உச்சரிக்கக் கேட்டே உச்சி குளிர்பவளால் சோபிக்கவா முடியும்? அதுவும் பிரபுராமிற்காக அரை மணி நேரமென்ன ஒரு மாமாங்கமானாலும் காத்திருக்கத் தயாராக இருப்பவளால் வேறு என்ன செய்ய இயலும் ?

அப்பா... இந்தக் காதலுக்குத் தான் என்ன சக்தி..! எத்தனை சக்தி...! இப்படிப் பட்ட உணர்வைப் படைக்க வேண்டுமென்று ஆண்டவனுக்கு எப்படித் தோன்றியது ? காதல் இல்லாவிட்டால் இந்த உலகம் எப்படி இருந் திருக்கும் என்று நினைத்துக் கொண்டாள். சகாரா மாதிரி இருந்திருக்கும் என்கிற பதிலையும் தானே சொல்லிக் கொண்டாள்.

உடனே பிரபுராமைப் பார்க்கா விட்டால் தன்



மனதும் சகாராவாகி விடும் என்று தோன்றிற்று. எப்படியும், எத்தனை நேரமானாலும் அன்று பிரபுராமைப் பார்த்து விடவேண்டும் அவளுக்கு. இல்லாவிட்டால் இன்னும் இருபது நாட்களுக்கு அவனைப் பார்க்க முடியாது அந்த இருபது நாட்களும் அவனைப் பார்க்காமல் எப்படி இருக்கப் போகிறோம் என்பது புரியாமல் உள்ளுக்குள் கலங்கிக் கொண்டிருந்தாள். அதை நினைத்தால் அப்போதே அழுகை வரும் போலிருந்தது.

பிரபுராம் கல்லூரியில் மாணவ மாணவிகளுடன் இருபது நாட்கள் வட இந்தியாவிற்குச் சுற்றுப் பயணம் போகிறான். ஒரிஸா, அஸ்ஸாம், சிக்கிம், நேபாளம் எல்லாம் போகிறார்கள். பிரபுராமுடன் இன்னும் நான்கு புரொஃபசர்கள் போகிறார்கள். கல்லூரி எக்ஸ்கர்ஷன், பாட்டும், அரட்டையும் விளையாட்டும், சந்தோஷமுமாக இருபது நாட்கள் போவதே தெரியாது.

திவ்யாவிற்கும் போக ஆசைதான். அதுவும் பிரபுராம் போவது தெரிந்ததும் இன்னமும் மனது துடித்தது. அவனுக்காகவே போக வேண்டும் போலிருந்தது. ஆனால் அப்பா மறுத்து விட்டார். அப்பா மறுத்தது ஒன்றும் புதிய விஷயமில்லை பள்ளிக்கூட நாட்களிலிருந்து எந்தச் சுற்றுப் பயணத்திற்கும் அப்பா அவளை அனுப்பின தில்லை.

"பொம்பளைப் பொண்ணு ராத்தங்கறதாவது...?" என்று முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவார். இவள் அம்மாவிடம் போய்க் கெஞ்சுவாள்.

'அம்மா ப்ளீஸ்மா எல்லாரும் போறாம்மா... நானும் போறேம்மா... நீ அப்பா கிட்ட சொல் லும்மா...?' கண்களில் கண்ணீர் தளும்பக் கேட்பாள். அம்மா அவளை ஏறிட்டுப் பார்க்கும் பார்வையில் பரிதாபம் இருக்கும். இரக்கம் இருக்கும் இயலாமை இருக் கும் பின் ஒரு ஆழமான பெருமூச்சுடன் சொல்வாள்.

"நான் சொன்னால் கேட்பாரா திவ்யா..? உங்கப்பா கிட்ட யார் பேச முடியும்...? யாருடைய ஆசையை எடுத்துச் சொல்ல முடியும்...? உனக்கு உங்கப்பா குணம் தெரிஞ்சும் என்னைப் போய் சொல்லச் சொல்றியே...? சொல்லி நான் வாங்கிக் கட்டிக் கொண்டு வர்றதுதான் மிச்சம்னு உனக்குத் தெரியாதா...?"

"எம்மா ஸ்கூலோட எக்ஸ்கர்ஷன் போகணும்னு நினைக்கிறது ஒரு பொண்ணோட நியாயமான ஆசை இல்லையாம்மா?"

"நியாயம்தான். எனக்குப் புரியறது. ஆனால் உங்கப்பாவுக்குப் புரியாதே...மனுஷ மனசுக்கோ, உணர்ச்சிகளுக்கோ, நியாய அநியாயங்களுக்கோ கட்டுப்படற மனுஷனா அவர்...? தான் பிடிச்ச முயலுக்கு மூணே கால்னு சாதிக்கிறவர். நாலாவது காலை அதற்காக உடைச்சு மூணாக்கிக் காட்றவர்கிட்ட எதும்மா எடுபடும்...?"

அப்பாவிடம் அம்மா, அவள், அவள் தம்பி ஷ்யாம், அவரது நண்பர்கள் எல்லோருமே எல்லா விஷயங்களுக்கும் தோற்றுப் போயிருக்கிறார்கள். எது சொல்லியும் எடுபடாமல் சலித்துப் போயிருக்கிறார்கள் சில சமயம் அப்பா ஒரு 'சாடிஸ்டோ...' என்று கூட நினைத்திருக்கிறாள் திவ்யா. மற்றவர்களின் ஆசைகளை அழித்து மனங்களைக் கஷ்டப்படுத்திக் குரூரத் திருப்தியடைபவரோ—அதில் அவருக்கு ஒரு சந்தோஷம் ஏற்படுகிறதோ என்கிற சந்தேகமெல்லாம் வந்திருக்கிறது. எந்த சந்தேகம் வந்தாலும் அப்பா அப்படியேதான் இருந்திருக்கிறார்.

அப்பாவை அவள் வெற்றி கொண்டது ஒரே ஒரு விஷயத்தில்தான். ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கின்ற இந்தக் கல்லூரியில் சேர அனுமதி பெற்ற ஒரே விஷயம்தான். முதலில் அப்பா அதற்குச் சம்மதிக்கவில்லை.



"அப்படியாவது நீ படிக்கணும்னு அவசியமில்லை. உன்னை நான் வேலைக்கெல்லாம் அனுப்பப் போறதில்லை, கல்யாணம்தான் பண்ணித்தரப் போறேன். அதனால் இந்த பி.ஏ படிப்பு போறும்.." என்று கூறி விட்டார்.

ஆனால் திவ்யா விடவில்லை. ஒரு வாரம் அழுது அவரது கால்களில் விழுந்து மன்றாடினாள்.

"தயவு செய்து மாட்டேன்னு சொல்லிடாதீங்கப்பா... எம்.ஏ படிக்கணும்ன்றது என்னுடைய கனவுப்பா... அதைக் கலைச்சுடாதீங்கப்பா... ஆண்கள் படிக்கிற கல்லூரியாக இருந்தாலும் நான் நானாகத்தாம்ப்பா இருப்பேன்.. ப்ளீஸ்ப்பா..."

"இப்பவே உனக்கு வரன் பார்த்துண்டு இருக்கேன். கல்யாணம் நிச்சயமானால் என்ன செய்யறது?"

"நிச்சயமானால் நான் படிப்பை நிறுத்திடறேம்ப்பா... இல்லைன்னால் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க சம்மதிச்சால் மேலே படிப்பைத் தொடர்றேம்ப்பா..."

அதன் பின்னரும் நான்கு நாட்கள் அவளை அழ வைத்தார். சிறிதும் அசைந்து கொடுக்காமல் இருந்தாள். பின்னர் நடுக்கூடத்தில் நின்று சத்தம் போட்டார்.

"இதப்பாரு... இந்த மாதிரி அழுது ஆகாத்தியமெல்லாம் பண்ணினால் நான் பயந்துட மாட்டேன். இந்த நீலிக் கண்ணீருக்கெல்லாம் அசைஞ்சு கொடுக்க மாட்டேன். என் மனசுக்குப் பட்டால்தான் செய்வேன். என் மனசுக்குப் படலைன்னால் அந்த ஆண்டவனே இறங்கி வந்தாலும் நடக்காது. அதனால் ஒழுங்கா இந்த ஒப்பாரியெல்லாம் நிறுத்திட்டு போய் இருக்கிற வேலையைப் பாரு..."

அதற்கப்புறமும் அவள் அவருக்குத் தெரியாமல் அழுதாள். குளியல் அறைக்குள் போய்க் குளிக்கிற

சாக்கில் அழுது தீர்த்தாள். கடைசியில் அப்பாவிற்கே என்ன தோன்றியதோ அவளைக் கூப்பிட்டுச் சொன்னார்.

"இதப் பாரு... அந்தக் காலேஜ்ல உன்னைச் சேர்க்க நான் ஏன் ஒத்துக்கறேன் தெரியுமா? எம்.ஏ. படிக்கறான் பொண்ணுன்னு சொன்னால் நல்ல வரன் வரும். நல்ல மாப்பிள்ளையாகக் கிடைப்பான்ற ஒரே எண்ணத்துல தான். பெண் பி.ஏ. படிச்சுட்டு வீட்ல சும்மா இருக்கான்னு சொன்னால் மதிப்பு இருக்காதுன்ற ஒரு காரணத்தைத் தவிர வேற காரணமில்லை. அதனால் காலேஜ் போனோம் வீட்டுக்கு வந்தோம்னு இருக்கணும். அதை விட்டு அது இதுன்னு ஏதாவது கேள்விப் பட்டேனோ...என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது... ஜாக்கிரதை..."

அதை இப்போது நினைத்த போது திவ்யாவின் உள் மனசு பயத்தில் மெல்ல நடுங்கத் தொடங்கிற்று. பிரபுராமைத் தான் காதலிக்கிற விஷயம் அப்பாவிற்குத் தெரிந்தால் என்ன ஆகும் என்று எண்ணிய போதே அடிவயிற்றிலிருந்து பந்தாகச் சுருண்டு வந்து நெஞ்சை அடைத்துக் கொண்டது.

'கடவுளே நீதான் என்னையும் பிரபுராமையும் ஒன்று சேர்த்து வைக்கணும்... அதை எப்படிச் செய்யப் போகிறாயோ... அப்பா மனசை எப்படி மாற்றப் போகிறாயோ... எனக்குத் தெரியாது......'

வேண்டிக் கொண்ட அதே தருணத்தில் பிரபுராம் மனதிற்குள் வந்து நின்றான். வகுப்பு எடுக்கிற நேரங்களில் 'அவன் தன்னை மற்ற மாணவிகளைப் போல் ஒரு மாணவியாக மட்டுமே நினைக்கிற மனப் பக்குவத்தை, மனத்திண்மையை நினைத்துக் கொண்டாள். தன்னால் அந்த மாதிரி அவனை ஒரு ஆசிரியனாக வெறும் புரொபஸராக நினைக்க முடியாததும் புரிந்தது. அவன் எடுக்கிற



ஆங்கில இலக்கியக் காவியங்களில் வரும் கதாபாத்திரங்களில் தன்னையும் அவனையும் கற்பனை செய்து பார்ப்பது வழக்கமாகி விட்டது. அவன் வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கும்போதே அவன் முகத்தையே கண்ணிமைக்காமல் பார்த்தபடி சினிமாக்களில் வருகிற கனவுக் காட்சிகள் மாதிரி அவனோடு கைகோர்த்துக் கவிதை வரிகளில் வலம் வருவாள்.

அதை ஒருநாள் அவனிடம் சொன்னபோது அவன் மிக அழகாகவும், மென்மையாகவும் புன்னகை செய்தான். அவன் அவ்வாறு புன்னகைத்தது என்னவோ போலிருக்கவே சுள்ளென்ற கோபத்தோடு கேட்டாள் அவள்.

"ஏன் சிரிக்கறீங்க பிரபு...?"

"நீ சொன்னதைக் கேட்டுச் சிரிக்காமல் வேறு என்ன செய்ய முடியும்... சொல்லு...?"

"ஏன்... எதுக்குச் சிரிக்கணும்...?"

"நீ ஒரு குழந்தை மாதிரி இருக்கே திவ்யா... உன் வயசுக்குக் குழந்தைத் தனம் அதிகம் இருக்கு. கதைகளும், காவியங்களும் வேறு. வாழ்க்கை வேறு. நான் எடுக்கிற காவியங்களில் வர்ற கதாபாத்திரங்களும், சம்பவங்களும் அப்படியே உண்மையானவை இல்லை, எல்லாமே மிகைப்படுத்திச் சொல்லப்பட்டவைதான்..."

"நோ. இதை நான் ஒத்துக்க மாட்டேன் பிரபு. நடக்காத ஒரு விஷயத்தை, அனுபவித்திருக்காத ஒரு விஷயத்தை அத்தனைத் தத்ரூபமாக எழுத முடியாது பிரபு..."

"நீ சொல்றதில் ஒரு விஷயம் மட்டும் உண்மை. காதல்ன்ற ஒரு விஷயத்தை, ஒரு உண்மையை ஒரு உணர்வை எல்லோரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு வயதில் அனுபவித்திருப்பார்கள். அல்லது அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அதற்காக நினைப்பதை

யெல்லாம் அப்படியே, உணர்ச்சி பூர்வமாகக் கொட்டி விட முடியாது. கொட்டவும் இயலாது. அதனால் எழுதப் பட்டதெல்லாம் உணரப்பட்டது என்று எடுத்துக் கொண்டு விடக்கூடாது திவ்யா. நிஜ வாழ்க்கைக்கும், எழுத்திற்கும் நிறைய வித்தியாசம் இருக்கும். எழுத்து என்பதே கற்பனை கலந்ததுதான். அதை நீ புரிந்து கொள்ள வேண்டும் திவ்யா...''

''இருக்கவே முடியாது. நிஜம்தான் எழுத்தாக வரும். அதிலும் மனதில் அழுத்தமாகப் பதிகிற மறக்க முடியாத தாக இருக்கிற அத்தனை எழுத்துக்களும் சத்தியமாக நிஜமாகத்தான் இருக்கணும். அவற்றை எழுதின எழுத் தாளனுக்கு நேர்ந்த சொந்த உணர்வாகவோ, சொந்த அனுபவமாகவோ இல்லாமற் போகலாம். ஆனால் எங்கேயோ, யாருக்கோ ஏற்பட்ட அனுபவங்கள். உணர்ச்சிகளாக இருக்கும். அவை அவனை மிக ஆழமாகப் பாதித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அப்படி எழுத முடியாது. எழுத வராது. மற்றவர்களின் உணர்ச்சுகளை அப்படியே உள்வாங்கிக்கொள்ள எழுத்தாளன் ஒருவ னால்தான் முடியும்...''

''அதை நான் ஓரளவிற்கு ஒப்புக் கொள்கிறேன் திவ்யா. எழுத்தாளனாலும் முழுமையாக உணரமுடியாது என்பதுதான் என் வாதம். அனுபவிக்கிறவனுக்குத்தான் அதன் நிஜ ஆழம், முழுப் பரிணாமம் எல்லாம் தெரியும்; புரியும். முழுதாகப் புரிந்து கொள்வது என்பது எழுத்தாள னுக்குக் கூட சாத்தியமில்லை...''

''ஏன் சாத்தியமில்லை...? எழுத்தாளர்கள் எழுதிய கதைகளிலும், கவிதைகளிலும், காவியங்களிலும் நம்மை நாம் பார்த்துக் கொள்வதில்லையா...? நேற்று நீங்கள் நடத்தினீர்களே...ரோமியோ அண்ட் ஜூலியட்...அதில் நான் நம்மைத்தான் பார்த்துக் கொண்டேன். எப்போது ஒரு எழுத்தாளன் எழுதிய படைப்பில் நம்மை நாம் பார்த்து. அனுபவித்து, உணர்ந்து கொள்கிறோமோ...



அப்போது அதை எழுதின எழுத்தாளனும் உணர்ந்து கொண்டிருப்பதாகத்தானே அர்த்தம்...?

''சரி...அதை விடு...ரோமியோ அண்ட் ஜூலியட் தவிர வேறு எதிலெல்லாம் நீ உன்னைப் பார்த்துக் கொள் கிறாய்...? ஆண்டனி— கிளியோ பாட்ராவில் கூடவா...?''

''ஆமாம்...''

''அப்படியென்றால் அந்த மாதிரியெல்லாம் இருக்க நீ ஆசைப்படுகிறாய் என்றல்லவா அர்த்தமாகிறது...? அவர்கள் எழுதின கதாபாத்திரங்களிலெல்லாம், நாம் நம்மைக் கற்பனை பண்ணிக் கொண்டால் ஒரு விதமான கனவுகளிலும், மயக்கங்களிலும் வாழ ஆரம்பித்து விடு வோம். நமக்கென்று ஒரு வாழ்க்கை இல்லாமற் போய் விடும் திவ்யா. திவ்யா என்றால் எனக்கு திவ்யா தான். கிளியோபாட்ரா கூட எனக்கு திவ்யாவாக முடியாது. அதனால்தான் சொல்கிறேன் நீ ஜூலியட் இல்லை. நீ கிளியோபாட்ரா இல்லை. நீ டெஸ்டிமோனா இல்லை. நீ போர்ஷியா இல்லை. நீ—நீதான். என் திவ்யா தான். என் திவ்யா மட்டும்தான். அதனால்தான் அத்தனை படித்து அத்தனையும் பாடமாக எடுத்தாலும் நான் கனவுகளில் அமிழ்வதில்லை. கற்பனைகளில் மிதப்பதில்லை. நாம் நாமாக வாழ வேண்டும். யாரையும் பார்த்து, யாரா கவோ நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கமுடியாது. நிழல் நிஜமாகாது. எனக்கு நீ உனக்கு நான் திவ்யா. என் போக்கில் நானாக வாழத்தான் எனக்குப் பிடித்திருக் கிறது. என் வாழ்க்கையில் நடப்பதையோ, என் உணர்ச்சி களையோ, உணர்வுகளையோ வெளிப்படுத்த எனக்குப் பிடிக்காது. அடுத்தவர் அறிந்து கொள்வதையும் நான் விரும்புவதில்லை. என் வாழ்க்கை எனக்கு மட்டும்தான் சொந்தம். வேறு யாரும் அதில் பங்கு போட்டுக் கொள் வது கூட எனக்குப் பிடிக்காது...''

"நான் கூடவா...?"

"நீயும் நானும் தனி நபர்கள் என்று நான் நினைக்கவில்லையே திவ்யா..."

அந்த சம்பாஷணைகளையும், கடைசியாக அவன் சொன்ன பதிலையும் நினைத்த போது அப்போதும் அவளுக்குள் ஓர் சிலிர்ப்பு ஓடிற்று. இது போன்று நிறைய தரம் அவர்களுக்குள் வாக்குவாதம் நிகழ்ந்து விட்டது. 'இலக்கியம்தான் வாழ்க்கை, வாழ்க்கைதான் இலக்கியங்களாகின்றன' என்பாள் திவ்யா. 'இல்லை .. எல்லா இலக்கியங்கள், கதைகள், கவிதைகள் அனைத்தும் மிகைப் படுத்தப்பட்ட விஷயங்கள்' என்பதில் ஆணித்தரமாக இருப்பான். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் இருவரும் ஒத்துப் போவதே இல்லை என்பதை நினைத்து மீண்டும் சிரித்துக் கொண்டாள் அவள்.

"என்ன திவ்யா... நீயே சிரிச்சுக்கறே...?" குரல் கேட்டு திவ்யா திரும்பிப் பார்த்தாள். அவளுடன் படிக்கிற மாணவர்கள் தான்.

"ஒன்று மில்லையே..." சமாளிக்கப் பார்த்தாள் அவள். அவர்கள் விடவில்லை.

"பொய் சொல்லாதே திவ்யா...கொஞ்ச நாட்களாக நாங்களும உன்னைக் கவனித்துக் கொண்டுதான் வரோம்..."

"என்ன கவனிக்கறீங்க...? கவனிக்கும்படி என்னிடம் என்ன இருக்கிறது...?"

"எங்களுக்குத் தெரியாதுன்னு நினைக்காதே... புரொபஸருக்காகத்தானே இங்கே காத்துக்கிட்டு நிக்கற...?"

"சீ... என் பிரெண்ட் வரேன்னு சொன்னதால் காத்துக்கிட்டிருக்கேன்..."



"அந்த பிரெண்ட் யாருன்னு நாங்க தெரிஞ்சுக்கலாமா திவ்யா...?"

"நான் சொல்றேண்டா.." என்றான் ஸ்ரீதரன்.

"எனக்கும் தெரியும்டா, அந்த பிரெண்ட் பேரு பிரபுராம்" என்றான் கிரீஷ்.

"அதான் திவ்யா இல்லைன்றாளே..."

"அவ இல்லைன்னு சொன்னால் நம்மால் நம்ப முடியுமா...? காதலிக்கிறவங்க யாரும் 'ஆமாம் நாங்க காதலிக்கிறோம்'னு ஒத்துக்கிட்டிருக்காங்களாடா...?"

"அவங்க ஒத்துக்கலைன்னாலும் காதல் மல்லிகைப் பூ மாதிரி, வாசனையில் ஊரைக் கூட்டிடும்..."

"சரிடா... திவ்யா இல்லைன்னா இல்லையா...? நாமும் அவ கூடயே காத்துக்கிட்டிருந்து அந்த பிரெண்ட் பிரபுராமா இல்லையான்னு பார்த்துடலாம்..."

"சீ... வேணாம்டா ஸ்ரீராம். இன்னொருத்தருடைய பர்ஸனல் லைஃப்ல புகுந்து பார்க்கிறது ரொம்பத் தப்புடா..."

"இதுல என்னடா தப்பு...? நம்ம பிரெண்டோட காதல், நாம் சேர்த்து வைக்காமல் வேற யார் சேர்த்து வைக்கிறது...?"

"ஹேய்... தூரத்துல பாருடா... புரொபசர் வராரு..."

"இங்கேதாண்டா வருவாரு..."

அதே மாதிரி பிரபு அவர்கள் அருகில் வந்து ஸ்கூட்டரை நிறுத்தினான்.

"ஹலோ பிரெண்ட்ஸ்..." என்று எப்போதும் போல் முகமலர்ந்தான்.

"பிரெண்ட்ஸ்னு ஒட்டு மொத்தமா சொல்றீங்க... நாங்க எல்லோருமே உங்க பிரெண்ட்ஸ்சா சார்...?"

''ஆமாம்... ஏன் கேட்கறீங்க...?''

''திவ்யா கூடவா சார்...?''

அவன் திரும்பி திவ்யாவைப் பார்த்து மிகவும் சகஜமான குரலில் ''ஆமாம்'' என்றான்.

''போங்க சார்... பொய் சொல்றீங்க...''

அவன் சிரித்தான். சிரித்து விட்டுக் கேட்டான்.

''எதுக்குப் பொய் சொல்லணும்...?''

''இல்ல சார்... இது சரியில்லை சார்...''

''எது?...''

''திவ்யாவையும் சேர்த்துப் பிரெண்டுன்னு சொல்றது...''

''திவ்யா உங்களுக்கு வெறும் பிரெண்ட் மட்டும் தானா சார்...?''

அவன் அதைக் கேட்டுப் பேசாதிருந்தான்.

''சொல்லுங்க சார். வெறும் பிரெண்ட் மட்டும் தானா...?''

''சரி... உங்களுக்கு எப்படித் தோணுதோ அப்படின்னே வச்சுக்குங்க..''

''தட் ஈஸ்இட் சார்... நாங்க கேட்டப்போ திவ்யா ஒரு முழு பூசணிக்காயை மறைக்கப் பார்த்தா... இப்போ வசமா மாட்டிக்கிட்டா...''

''திவ்யா...சாரே ஒப்புக்கிட்டாச்சு...இதுக்கு மேலும் நீ பொய் சொல்லக் கூடாது...''

''விடுடா கிரீஷ்'' பாவம்டா...இப்பவே மணி ஆறாயிடுச்சு. அவங்க பேசிட்டுப் போறதுக்குள்ள ஏழு மணிக்கு மேல ஆயிடும். அதுக்குள் திவ்யாவோட அப்பா தேடிக்கிட்டு வந்தாலும் வந்துடுவாரு...''



அது மட்டுமில்ல...புரொபசர் ரூமுக்குப் போய் நுனியெல்லாம் எடுத்துக்கிட்டு ரூக்கு வேற கிளம்பியாகணும்...''

''நீங்களும் வரீங்கன்றதை மறந்துடாதீங்க. நேரா ஸ்டேஷன்ல ஒன்பது மணிக்கு ஆஜராகணும்...''

''ஏன் சார் திவ்யா வரலை...?''

''இது தெரிஞ்ச விஷயம்தானேடா... ஆல் யூஷுவல் அவங்க அப்பா அனுப்பியிருக்க மாட்டாரு...பாவம்டா... சரியான அப்பாடா திவ்யாவுக்கு...''

திவ்யாவின் முகம் வாடுவதை கவனித்த பிரபுராம், ''சரி, நீங்க கிளம்புங்க...'' என்று அவர்களுக்குக் கையசைந்து விடை கொடுத்தனுப்பினான்.

அவர்கள் நகர்ந்ததும் இருவரும் நடந்து போய் சற்றுத் தள்ளி மணலில் வந்து உட்கார்ந்து கொண்டனர்.

அப்பாடா...ஒரு வழியா போனாங்க... இன்னிக்கு இவங்க கிட்ட மாட்டிப்போம்னு நான் நினைக்கவே இல்லை...'' என்றாள் திவ்யா

''ஏன் பொய் சொல்லணும் திவ்யா... அவங்களுக்குத் தெரிஞ்சால் என்ன ...? என்னிக்கிருந்தாலும் தெரியப் போகிற விஷயம்தானே...? எதை மறைச்சாலும் மறைக்கலாம் காதலை மறைக்க முடியுமா ? அதுவும் அவங்கள்ளாம் இதற்கு எதிரிகளா...? நம் நண்பர்கள். என் மாணவர்கள், என் மீது அபரிமிதமான மரியாதை வச்சுக்கிட்டிருக்கிறவங்க... நாம் ஒண்ணு சேரணும்ன்ற நல்ல நெஞ்சம் கொண்டவங்க. அப்படிப்பட்டவங்ககிட்டயிருந்து எதுக்கு மறைக்கணும் ?''

இல்ல. எங்க அப்பாவுக்குத் தெரிஞ்சுடப் போறதேன்ற பயம்தான்...''

'இவங்கள்ள யாரும் போய் சொல்லப் போறதில்லை எத்தனை நான்தான் அப்பாவுக்கு இப்படிப் பயம்

படப் போற...? ஒருநாள் இல்ல ஒரு நாள் அவருக்கும் தெரியத்தானே செய்யும்...?''

''ம்ஹூம்...இப்போ தெரியக் கூடாது. என் படிப்பு முடிகிறவரை தெரியவே கூடாது. படிப்பை முடிச்சு, நான் ஒரு வேலை தேடிண்டுட்டேன்னால் நானே போய் அவர்கிட்ட தைரியமாகச் சொல்வேன் 'நான் என் பிரொபசர் பிரபுராமைக் காதலிக்கிறேம்ப்பா... அவரைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்'னு சொல்லுவேன் அதுக்கு முன்னால் தெரிஞ்சால் எல்லாம் கெட்டுப் போயிடும்

''என்ன கெட்டுப் போயிடும்...?''

''முதல்ல என் படிப்பு நிற்கும் அப்புறம் ஹவுஸ் அரஸ்ட். அதுக்கப்புறம் வேற மாப்பிள்ளை, எங்க ஜாதியில் பார்த்துக் கல்யாண ஏற்பாடு நடக்கும்...''

''நீ ஒத்துக்கொண்டு விடுவாயா திவ்யா...?''

''மாட்டேன். அதனால்தான் படிப்பு முடிஞ்சு வேலை தேடிக்கணும்னு நினைக்கிறேன்...''

''ஸோ...வேலையைத்தான் நீ ஒரு செக்யூரிட்டியாக நினைக்கிறே...இல்லே ?''

''அப்படியில்லை பிரபு. வேலையும், சுயசம்பாத்தியமும் இருந்தால் எங்க வீட்ல எனக்குக் கொஞ்சம் வாய்ஸ் இருக்கும் இல்லையா...?''

''சின்னக் குழந்தைக்குக்கூட நீ சொல்ற வாய்ஸ் உண்டு திவ்யா... தனக்கு ஒரு பொம்மை வேணும்னால் கூட அழுது அடம்பிடிச்சு சாதிச்சுண்டுடும்...''

''இந்த அழுறது, அடம் பிடிக்கிறது இதெல்லாம் எங்கப்பாகிட்ட நடக்காது பிரபு. சின்னக்குழந்தையிலிருந்து இதுவரை எனக்கு நடந்ததில்லை. அவரைப் பத்தி உங்களுக்குத் தெரியாது. யாருடைய எந்த ஆசைக்கும் அவர்கிட்ட இடம் கிடையாது. அவர் சொல்றதை



மீறி யாராலயும் நடக்க முடியாது. நான் பச்சைப் புடவை கட்டணும்னு எடுத்து வச்சால், எதுக்கு இந்த நல்ல புடவையைப் போய் காலேஜுக்குக் கட்டி பாழ் பண்றே...? இந்தா இந்த சிகப்புப் புடவையைக் கட்டிக்கோ போறும்னுவார். அன்னிக்குப் பச்சைப் புடவை கட்டிக்க நினைச்ச என் ஆசை வீணாகும். செத்துப் போன ஹிட்லர் திரும்பி எங்க அப்பாவாகப் பிறந்திருக்கார்னு நினைக்கிறேன்...''

பிரபுராம் ஒன்றும் பேசவில்லை. கைகளால் மணலை அளைந்து கொண்டிருந்தான். அதைப் பார்த்த திவ்யா கேட்டாள்.

''என்ன, பேசாமல் இருக்கீங்க...?''

''ஒண்ணுமில்ல... சொல்லு...'' என்று கை மணல் அவளது கண்களில் பறக்காதவாறு மென்மையாக உதறிக் கொண்டான்.

''சரி...அதெல்லாம் பாக் பண்ணிட்டீங்களா...?''

''இல்லைன்னால் நீ வந்து பண்ணித்தரப் போறியா...?''

தன் இயலாமையை உணர்ந்தபோது திவ்யாவின் முகம் வாடிற்று! அதைக் கவனித்த அவன் சட்டென்று பேச்சை மாற்ற முயன்றான்.

''விளையாட்டுக்குக் கேட்டேன். அது போகட்டும்... நீ ஸ்டேஷனுக்கு வாயேன். யு கேன் ஸீ மீ ஆஃப்...''

''எத்தனை மணிக்கு ரயில்...?''

''பத்து மணிக்கு...''

''ஐயோ...அப்போ எப்படி வரமுடியும்...? அப்பா விட மாட்டாரே...?''

''சொல்லிட்டு வாயேன்...பிரண்ட்ஸ் எல்லாரும் எக்ஸ்கர்ஷன் போறாங்க. நான் ஸ்டேஷன் வரை மட்டுமாவது போய் வழியனுப்பிவிட்டு வரேன்னு கேளேன்...''

''ம்ஹூம்... ராத்திரி பத்து மணிக்கெல்லாம் ஜன்னல் வழியாகக் கூட எட்டிப் பார்க்கக் கூடாது. அவருக்கு அவர் பேச்சை மீறி ஸ்டேஷனுக்கு வந்தால் உங்களுடனேயே அப்படியே ரயிலேறிவிட வேண்டியதுதான்.''

''ஏறிவிடேன்...''

''எனக்கும் அப்படித்தான் இருக்கு. எங்க வீடே பிடிக்கலை. எப்போ உங்க கூட வாழப் போறோம்னு இருக்கு...தனியா சின்னதா வீடு பார்த்து, அழகாகக் குடும்பம் நடத்தி...எப்போ நம்ம ரெண்டு பேர் மனசும் ஒண்ணாயிடுத்தோ அப்பவே கல்யாணம் பண்ணிண்டுடணும் பிரபு. காத்துக் கொண்டெல்லாம் இருக்கக் கூடாது...''

''என்ன திடீர்னு...இந்த மாதிரியெல்லாம் பேசறே திவ்யா... வாட் ஈஸ் ராங் வித் யு...?''

'எனக்கு உங்களை விட்டுப் பிரியறது கஷ்டமாக இருக்கு. உங்களைவிட்டுட்டு என்னால் இருக்க முடியலை''

''எதுக்கு இப்படிப் பயப்படற...?தன் குழந்தைகளின் நடவடிக்கைகளில் ஒரு சின்ன மாற்றம் இருந்தாலும் அம்மாக்களால் கண்டு பிடித்து விடமுடியும்ன்ற சைக்காலஜியை வச்சு சொன்னேன்...''

''அவ்வளவு தானே... எங்கம்மாவுக்குத் தெரிஞ்சால் கூடப் பரவாயில்லை, சமாளிச்சுக்கலாம். ஆனால் எங்கப்பாவுக்குத்தான் தெரியக் கூடாது...''

அவன் மெலிதாகப் புன்னகைக்க அவள் கேட்டாள்.

''எதுக்கு இந்த விஷமச் சிரிப்பு இப்போ...?'

''இல்ல... எனக்கு உங்கப்பா மக்கா, இல்லை நீ சாமர்த்திய சாலியான்னு கண்டு பிடிக்க முடியலை...''

''எப்படி வேணும்னாலும் வச்சுக்குங்க...''

''சரி... ஊர்லேர்ந்து வர்றபோது உனக்கு என்ன வேணும்னு சொல்லு... வாங்கிண்டு வரேன்...''



''எனக்கு ஒண்ணும் வேணாம்... அங்க இருக்கிற பொண்ணுங்களையெல்லாம் சைட் மட்டும் அடிச்சுட்டு வேற எதுவும் பண்ணாமல் சமர்த்தாக என் பிரபுவாகவே திரும்பி வந்தால் போதும்...'

''சைட் அடிக்க மட்டும் பர்மிஷன் உண்டு இல்ல...?''

''அதுக்கு மட்டும்தான், வேறு எதுக்கும் இல்லை...''

''வேறு எதுக்கும்னால்...?''

''எல்லாதுக்கும்தான். அணைச்சுக்கிறது, கிஸ் பண்றது... இப்படி எத்தனை இல்லை...?''

''அந்த மாதிரியெல்லாம் இதுவரை உன்கிட்டேயே நடந்ததில்லையே... வேற யார்கிட்டே நடப்பேன்னு எதிர்பார்க்கிற...? இத்தனை நாள் பழகியும் நீ என்னைப் புரிஞ்சுண்டது இவ்வளவுதானா திவ்யா...?''

''ஐயோ... விளையாட்டுக்குச் சொன்னேன், அதுக்குள்ள கோபமா...?''

''ம்ஹூம். கோபமில்லை, வருத்தம். இந்த மாதிரி ஒரு நாளாவது நான் உன்கிட்ட ஏதாவது பேசியிருக்கேனா...?''

''இல்லை...''

''எனக்கு உன் மேல் இருக்கிற நம்பிக்கை உனக்கு என் மேல் இல்லை பார்...''

அந்தச் சூழ்நிலையின் இறுக்கத்தைக் குறைக்கத் தோன்றியது திவ்யாவிற்கு. விளையாட்டாக எதையாவது சொல்ல வேண்டும் போலிருந்தது. அதனால் சட்டென்று கொஞ்சம்கூட யோசிக்காமல் கேட்டாள்...

"நீங்க என் மேல் வச்சுண்டிருக்கிற அந்த நம்பிக்கையை ஒரு நிமிஷத்துல பொய்யாக்கிக் காட்டட்டுமா...?"

அவனது புருவங்கள் மிக லேசாகச் சுருங்கின. அவள் விளையாடுகிறாள் என்பதைப் புரிந்துகொள்ள முடியாதவனாகக் கேட்டான்,

"என்ன சொல்கிறாய் நீ...?"

"நீங்க ஊர்லேருந்து திரும்பி வர்றதுக்குள்ள நான் வேற ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிண்டு காட்டட்டுமா ?"

"டோண்ட் பி ஸில்லி .. எழுந்திரு... இப்படித்தான் கோவலனும், மாதவியும் விளையாட்டாக ஏதோ சொல்லப் போய் மொத்தமும் வினையாக முடிஞ்சதுன்னு தெரியுமில்ல...?"

அவனது பதிலின் நிஜமும் பரிதவிப்பும் புரியாமல் சொன்னாள் அவள்...

"அட...ஆங்கில இலக்கியம் மட்டும்தான் தெரியும்னு நினைச்சுண்டிருந்தேனே, தமிழ் இலக்கியம் கூட தெரியறதே..."

"இலக்கியம கிடக்கட்டும்... எழுந்திரு... நேரமாகிறது பார்..."—கைகளின் மணலைத் தட்டிவிட்டு எழுந்துகொண்டான் அவன்.

"என்ன இவ்வளவு சீக்கிரம்...? இன்னும் அஞ்சு நிமிஷம் இருக்கலாமே...?"

"ம்ஹூம்... ஐந்து நிமிஷம் போனால் இன்னும் ஒரு ஐந்து நிமிஷம்னு அடம் பிடிப்பாய். உன்னைத் தெரியாதா எனக்கு...?"



"என்ன செய்யறது...? உங்களை விட்டுப் பிரியவே மனசு வரமாட்டேன்றதே...? பேசாமல் உங்க கூடவே இருக்க ஏற்பாடு பண்ணிடுங்களேன்..."

"நான் நாளைக்கே ஏற்பாடு பண்ணத் தயார். நீதான் உங்கப்பாவுக்குப் பயப்படற. படிப்பு முடிந்து, வேலை கிடைச்சு சொந்தக் கால்ல நின்னப்புறம்தான் கல்யாணம்னு சொல்ற... என்னைவிட வேலையைத்தான் செக்யூரிட்டின்னு நினைக்கிற ..".

"அப்படியில்லை பிரபு... அது வந்து..."

"புரியறது. உன் சங்கடம் முழுசும் எனக்குத் தெரியறது. ஒரு பெண் சுயசம்பாத்தியத்தில் சொந்தக் கால்ல நிக்க வேண்டியது ரொம்ப அவசியம் அதை நான் பாராட்டறேன் ஆனால் அதே சமயம், இந்த அளவுக்கு நீ அப்பாவுக்கு பயப்பட வேண்டிய அவசியமில்லைன்னும் தோணுது..."

"நீங்க சொல்றது சரிதான் இப்போ நான் அப்பாவைச் சார்ந்து இருக்கிறதால்தான் பயப்படறேன். அதே சம்பாதிக்க ஆரம்பிச்சு தனியாக இயங்கற சக்தியும், பலமும் வந்துடுச்சுன்னு வச்சுக்குங்க... அப்போ இந்த அடிமைத்தனம, பயம் ரெண்டும் இருக்காது. சுதந்திரமாகச் செயல்படுகிற திறமை, திடம் எல்லாம் வந்துடும்..."

"பார்க்கலாம், கிளம்பு இப்போ ரூமுக்குப் போய் பெட்டி, படுக்கை எல்லாத்தையும் ரெடி பண்ணிண்டு ஒரு ஆட்டோ பிடிச்சு ஸ்டேஷனுக்கு ஓடத்தான் நேரமிருக்கும்..."

இருவரும் மணலில் நடந்து சாலைக்கு வந்தார்கள். ஸ்கூட்டரில் அவன் அவளை அவளது தெருக்கோடியில் இறக்கிவிட்டு பை சொல்லிப் பிரிந்தான்.

அவனது ஸ்கூட்டர் நகர்ந்து கண்ணிலிருந்து மறைகிற வரை காத்திருந்த திவ்யா இன்னும் கால் மணி நேரம் கழித்து பக்கத்து வீட்டிலிருந்தாவது அவனுடைய அறைக்கு போன் பண்ணி ஒரு முறை பேசி விடவேண்டும் என்று நினைத்துக் கொண்டே வீடு நோக்கி நடந்தாள்...

## 2

**வீ**ட்டிற்குள் நுழைந்த போதே "இதோ திவ்யாவே வந்து விட்டாள்..." என்று எழுந்து வந்தார் அப்பா. நடையில் செருப்பைக் கழற்றினபோது நாலைந்து ஜதை செருப்புகள், அவர்கள் வீட்டிற்குச் சொந்தமற்ற அந்நிய செருப்புகள் காணப்பட்டன. வரவேற்பறையிலும் யார் யாரோ உட்கார்ந்திருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. இவள் மெதுவாகத் தன் செருப்பைக் கழற்றினபோது அவளது அப்பா அருகில் வந்து சன்னமான குரலில் கேட்டார். வரவேற்பறையில் உட்கார்ந்திருப்பவர்களுக்குக் காதில் விழக்கூடாது என்ற அக்கறை அவரது குரலில் தொனிப்பதை திவ்யாவினால் புரிந்து கொள்ள முடிந்தது. அதனால் வந்திருக்கிறவர்கள் மிக முக்கியமான மனிதர்களாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தாள்.

"ஏன் இத்தனை நேரம்...?"

"கொஞ்சம் நேரமாகிவிட்டது..."

"அதான் ஏன்னு கேட்டேன்..."

அப்பா சிடுசிடுத்ததும் திவ்யாவின் அடிவயிற்றில் சின்னதாகப் பயம் கிளம்பி நெஞ்சை அடைக்கத் துவங்கியது. என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தடுமாறினாள்.



"இல்...லப்...பா... வந்து... லைப்ரரி..."

"சரி சரி... ஏற்கெனவே நேரமாயிடுத்து, இன்னும் வேற நேரமாக்காதே... அவங்களெல்லாம் ரொம்ப நேரமாகக் காத்துக்கிட்டிருக்காங்க. இப்படியே பின் பக்கமாகக் கொல்லைப் பக்கம் போய் முகம், கைகால் அலம்பிண்டு உன் ரூமுக்குப் போய் நல்ல பட்டுப் புடவையாகக் கட்டிக்கோ. உங்கம்மா எல்லாம் சொல்லுவா... கேட்டுண்டு...அதன்படி நட...ம்... சீக்கிரம் போ..."

அப்பாவின் அதட்டலில் திவ்யாவிற்கு ஒன்றும் புரியவில்லை. லேசாய் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மிக மெதுவாகக் கேட்டாள்.

"எதுக்குப்பா... பட்டுப் புடவையெல்லாம்..."

"ஷ்! பேசாதே... முதல்ல உள்ள போய் டிரஸ் பண்ணிக்கிற வழியைப் பாரு... அதான் அம்மா எல்லாம் சொல்லுவான்னு சொன்னேனில்ல...?"

அதற்கு மேல் வாயைத் திறக்காமல் பின் பக்கம் போனாள். அப்பா சொன்னதையெல்லாம் கேட்டபோது ஏதோ புரிகிறமாதிரி இருந்தது உடனே அடிவயிறு கலங்கிற்று. கூடவே என்ன இது என்கிற பயம் எழுந்து மருட்டிற்று ஆனாலும் முகம் கழுவித் துண்டால் துடைத்துக்கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள். அம்மா மிக அவசரமாகவும், பரபரப்புடனும் பஜ்ஜி போடுவதிலும், பில்டரைத் தட்டி காப்பி டிகாக்ஷன் இறக்குவதிலும் ஈடுபட்டிருந்தாள். ஒரு முறை திரும்பி திவ்யாவைப் பார்த்துவிட்டு அப்பா கேட்ட அதே கேள்வியைக் கேட்டாள்.

"ஏன் திவ்யா இத்தனை நேரம்...? நாலு மணிக்கெல்லாம் காலேஜ் விடறது இல்லை... காலேஜ் விட்டதும் நேராக வீட்டுக்கு வர்றதுதானே...?"

''லைப்ரரிக்குப் போனேன். லேட்டாயிடுத்து.. இன்னிக்கின்னு பார்த்துத்தானா லைப்ரரிக்குப் போகணும்...? கொஞ்சம் சீக்கிரம் வந்திருக்கக் கூடாது...?''

''எம்மா... இன்னிக்கு என்ன விசேஷம்...?''

''வாசல்ல அப்பா சொல்லலை...''

''ம்ஹூம்... சொல்லலை...?''

''ஒன்னுமேவா சொல்லலை...?''

''பின்பக்கமாகப் போய் முகம் அலம்பி அழகான பட்டுப் புடவையாகக் கட்டிக்கச் சொன்னா...''

''சொன்னாரில்ல... அதுலேர்ந்து புரிஞ்சுக்க முடியலை ..? மண்டு... உன்னைப் பொண்ணு பார்க்க வந்திருக்காங்க ..''

''என்ன ..? என்ன ...? என்னம்மா இது ...?'' அதிர்ந்து போனாள் திவ்யா. சற்று முன் பிரபுராமிடம் விளையாட்டாகப் பேசியது, விளையாடுமென்று நினைக்கவில்லை. நெஞ்சு பதறிற்று. என்ன செய்வது எப்படித் தடுப்பது என்பதெல்லாம் புரியாதவளாகத் தடுமாறினாள்.

''எனக்கு இப்போ கல்யாணம் வேணாம்மா... முதல்ல நான் படிப்பை முடிக்கணும்...''

வாணலியிலிருந்து பஜ்ஜியை எடுத்து சம்புடத்தில் போட்ட அம்மா அவளைச் சடாரென்று திரும்பிப் பார்த்தாள்.

''ஏண்டி... காலேஜ் சேர்றபோது சொன்னதை மறந்து போயிட்டியா...? அப்பா எம்.ஏ. சேர்க்க மாட்டேன்னபோது நீ என்ன சொன்னேன்றதை நினைச்சுப் பாரு...''



அப்பாவிடம் சத்தியம் செய்கிற மாதிரி சொன்ன வார்த்தைகள் அனைத்தும் திவ்யாவிற்கு அப்படியே ஞாபகத்திற்கு வந்தன.

''இப்பவே உனக்கு வரன் பார்த்துண்டு இருக்கேன். கல்யாணம் நிச்சயமானால் என்ன செய்யறது...?''

''நிச்சயமானால் நான் படிப்பை நிறுத்திடறேம்ப்பா... இல்லைன்னால் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க சம்மதிச்சால் மேலே படிப்பைத் தொடர்றேம்ப்பா...''

சொல்லித்தான் எம்.ஏ. சேர்ந்தாள். கையிலடிக்கா விட்டாலும் வாயால் செய்த சத்தியம். அந்த சத்தியத்தை நம்பித்தான் அப்பா படிக்கவே அனுப்பினார். இப்போது மாட்டேன் என்று சொல்ல முடியாது. அது சரியில்லை. அப்படியே சொன்னாலும் அப்பா கொன்று போட்டுவிடுவார். என்ன செய்வது...? இப்போது இதிலிருந்து எப்படி தப்பிப்பது...? புரியாமல் அம்மாவிடம் கெஞ்ச ஆரம்பித்தாள்.

''அம்மா ப்ளீஸ்மா... எனக்கு இப்போ கல்யாணமெல்லாம் வேணாம்மா... படிப்பை முடிச்சுடறேம்மா..''

''இதுக்குத்தான் அன்னிக்கே அப்பா காலேஜ் சேர்க்க மாட்டேன்னார். நீதான் கல்யாணம் நிச்சயமானால் படிப்பை நிறுத்திடறதாக வாக்கு கொடுத்து சேர்ந்தே... கொடுத்த வாக்கை மீறக்கூடாது. மீறவும் உங்கப்பா விட மாட்டார். அப்பா குணம் தெரிஞ்சு அடம் பிடிக்காதே... பைத்தியம் மாதிரிப் பேசாதே. எத்தனைப் பெரிய வரன் தெரியுமா... மாப்பிள்ளை வெள்ளை வெளேர்னு உயரமா ரொம்ப அழகா இருக்கான். கலிபோர்னியாவில் வேலையாம், ஏதோ பிஸினஸ் பண்றானாம்... ரொம்ப நல்ல இடம் ..''

''வேண்டாம்மா... எத்தனை நல்ல வரனாக இருந்தாலும் எனக்கு வேணாம்மா...''

''ஏடாகூடமாக ஏதாவது பேசாதே... உங்கப்பா காதுல விழுந்து வைக்கப் போறது...''

''இல்லம்மா... எனக்கு இப்போ கல்யாணம் வேணாம்மா...''

''உன் வயசுல நானும் எங்கம்மாகிட்ட இப்படித்தான் சொன்னேன். கல்யாணமானால் எல்லாம் சரியாகப் போய்விடும், போய் மடமடன்னு டிரஸ் பண்ணிண்டு வா. மாப்பிள்ளை எத்தனை அழகாக இருக்கார்னு வந்து பாரு. அதிர்ஷ்டம் எப்பவும் நம்ம வீட்டுக் கதவைத் தட்டாது. அது வந்து தட்டறபோது திறக்க நமக்குத் தெரியணும்...''

''இதை நான் அதிர்ஷ்டமா நினைக்கலேம்மா.... நான் ஒண்ணு சொல்றேன்... தயவு செய்து கேளும்மா...''

''நீ ஒண்ணும் சொல்லவேணாம். நான் இப்போ எதையும் கேட்கிற நிலையில் இல்லை. இந்த வரனுக்காக உங்கப்பா ஆறுமாசமாக அல்லாடி, பையனுக்கு எழுதி உன் போட்டோவை அனுப்பி, போட்டோ பிடிச்சப் புறம்தான் பையனே அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு வந்திருக்கான். அதனால் எல்லாம் அனேகமாக முடிஞ்ச மாதிரித்தான். வெறும் சம்பிரதாயத்துக்காகத்தான் அவங்க பெண் பார்க்க வந்திருக்காங்களே தவிர வேற எதுக்கும் இல்லை. நேர்ல உன்னைப் பார்த்த கையோடு பாக்கு வெற்றிலை மாற்றி கல்யாண தேதி குறிக்கத் தான் வந்திருக்காங்களே தவிர சும்மா பார்த்துட்டுப் போக இல்லை. அதனால் பேசிண்டே நிற்காமல் போய் டிரஸ் பண்ணிக்கிற வழியைப் பாரு...''



அதற்குள் அப்பா உள்ளே வந்தார். திவ்யா அப்படியே நின்று கொண்டிருப்பதைப் பார்த்து முறைத்தார்.

''இன்னுமா டிரஸ் பண்ணிக்கல... அவங்க அரைமணி நேரத்துக்கும் மேலாகக் காத்துக் கிட்டிருக்காங்க...என்ன விளையாடறியா...?''

''நீங்க போங்க... இன்னும் ஐந்தே நிமிஷத்துல அவளை டிரஸ் பண்ணி நான் கூட்டிக்கிட்டு வர்றேன்...''— அம்மா, அப்பாவை சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு அவள் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு படுக்கையறைக்கு வந்தாள்.

அவளுக்கு மிகவும் பிடித்தமான வைலட் நிறப் பட்டுப் புடவையும், அதே ஊதா நிற மாட்சிங் பிளவுசும் எடுத்து வைத்தாள். பீரோவைத் திறந்து ஜிமிக்கியும், கைகளுக்கு வளையல்களும், கழுத்திற்குக் காசுமாலையும் எடுத்து போட்டுக் கொள்ளச் செய்தாள். தலைவாரி அழகாகப் பின்னலிட்டு, தொங்கத் தொங்க மல்லிகைப்பூ வைத்து விட்டாள், பின்னர்...

''ம்.. சீக்கிரமா புடவை கட்டிண்டு முகத்துக்குப் பவுடர் பூசி பொட்டு வச்சுக்க...'' என்றாள். இப்போது அப்பாவின் அதட்டல் அம்மாவிடம் வந்துவிட்ட மாதிரி தோன்றியது திவ்யாவிற்கு. வேறு வழியின்றி புடவை கட்டிக் கொண்டே மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

''அம்மா... நீ சொல்றியேன்னுதான் இதெல்லாம் செய்துக்கறேன். நான் உனக்கு மதிப்பு தந்து செய்யற மாதிரி நீயும் என்னைப் புரிஞ்சுக்கிட்டு என் எண்ணத்துக்கு மதிப்பு கொடுத்து நான் சொல்றதைக் கேட்டுக்கணும்...''

ஏ்... இப்போ எதுவும் பேச வேணாம்னு சொன்னேன்...''

"இப்போ பேசலேன்னால் அப்புறம் என்னால் வாயைத் திறக்க முடியாது. திறக்கவிடாமல் செய்துடுவீங்க. அதனால் இப்பவே சொல்லிடறேன். காலேஜ்ல எனக்கு இங்கிலீஷ் பொயட்ரி எடுக்கிற புரொபசர் ஒருத்தர் இருக்கார். பிரபுராம்னு பேரு. எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சிருக்கு. அவருக்கும் என்னைப் பிடிச்சிருக்கு. நாங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கிறோம். நான் அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். அதனால் இந்த மாப்பிள்ளை எல்லாம் எனக்கு வேணாம்..."

எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சொல்லிவிட்டாள் அவள். ஆனால் அவளை நிமிர்ந்து பார்த்த அம்மாவின் முகத்தில் அதிர்ச்சி இல்லை. மாறாக, அவள் எதிர்பார்த்த தொருபாவனை தெரிந்தது உடனே திவ்யாவிற்குப் பிரபுராம் சொன்னது சடாரென்று நினைவிற்கு வந்தது.

"இல்ல திவ்யா... நீ தப்பாக நினைச்சுக்கிட்டிருக்கு. உங்க அப்பாவுக்குத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் உங்கம்மாவுக்கு நிச்சயம் தெரிஞ்சிருக்கும்...?"

"எப்படிச் சொல்றீங்க...?"

"தன் குழந்தைகளின் நடவடிக்கைகளில் ஒரு சின்ன மாற்றம் இருந்தாலும் அம்மாக்களால் கண்டுபிடித்துவிட முடியும் என்கிற சைக்காலஜியை வச்சு சொன்னேன்!"

"பிரபு" யு ஆர் கிரேட்...! அம்மா... கண்டுபிடித்து விட்டாயாம்மா.. அப்படியானால் என்னைப் புரிந்து கொள்ளேன்... தயவு செய்து எனக்கு உதவி செய்யேன். இந்த மாப்பிள்ளை பார்க்கிற நாடகத்தையெல்லாம் நிறுத்திவிட்டு என்னை என் பிரபுவோடு சேர்த்து வையேன்..."



மனதிற்குள் மானசீகமாக அம்மாவிடம் அவள் கெஞ்சிக் கொண்டிருந்த போதே அம்மா தழைந்த குரலில் நிதானமாகச் சொன்னாள்...

"எனக்குத் தெரியும். இந்த மாதிரி ஏதோ ஒரு குண்டைத் தூக்கித் தலையில் போடப் போறேன்னு எனக்குத் தெரியும். கொஞ்ச நாளாகவே இந்த சந்தேகம் எனக்குள் ஏற்பட்டுண்டுதான் இருந்தது."

"இருந்ததில்ல... அப்படியானால் போய்ச் சொல்லி முதல்ல இந்தப் பெண் பார்க்கும் படலத்தை நிறுத்தி.."

"என்ன... என்ன... என்ன சொல்ற...?!"

"பெண் பார்க்க வந்திருக்கிற இந்த நாடகத்தை நிறுத்தச் சொல்றேன்."

"எத்தனைத் தைரியம்டி உனக்கு! உங்கப்பா குணம் தெரிஞ்சே இத்தனையும் பேசறியா? வந்தவங்களை எழுந்து போகச் சொல்றியா? அதோட உங்கப்பா உன்னையும், என்னையும் கொன்னுட்டு தானும் அதே கத்தியால் குத்திண்டு சாவார். அவருடைய முரட்டுத்தனம் பிடிவாதம் எல்லாம் தெரிஞ்சுண்டே காலேஜ் புரொபசரைக் கல்யாணம் பண்ணிப்பேன்றியே... அதுக்கு எத்தனை நெஞ்சுத் தைரியம் வேணும்..? என்ன நினைச்சுண்டு இதெல்லாம் பேசற...? எத்தனைப் பெரிய குடும்பம் நம்ப குடும்பம் தெரியுமா? அப்பா எவ்வளவு மானம் மரியாதையாக வாழறவர் தெரியுமா...? நான் போய் நீ புரொபசரைக் காதலிக்கிற விஷயத்தைச் சொன்னால் அத்தனை மரியாதையும் காற்றுல பறக்கும். ஜமதக்னி மாதிரி உங்கப்பா என்னை ஒரே வெட்டாக வெட்டிப் போடச் சொல்வார். முதல்ல வாசல் றாலுக்குப் போய் ஒழுங்காக அவங்களுக்கெல்லாம் நமஸ்காரம் பண்ணிட்டு, கேட்கிற கேள்விகளுக்கு அடக்க ஒடுக்கமாகப் பதில் சொல்லிட்டு, காப்பி டிபன் கொண்டு வந்து

தரேன், அதை அவங்க கைல தந்துட்டு அப்படியே மாப்பிள்ளைப் பையனையும் ஒரு பார்வை பார்த்துட்டு வந்து சேர். அப்புறம் மீதியைப் பார்த்துக்கலாம்...''

அவன் சட்டென்று அம்மாவின் கை பற்றிக் கெஞ்சினான்.

''அப்படிச் சொல்லாதேம்மா... ப்ளீஸ்மா...''

''பின்ன... வேற எப்படிச் சொல்லணும்னு எதிர்பார்க்கற...?''

''நீங்க என்ன பண்ணினாலும் நான் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கமாட்டேன்...''

''அதெல்லாம் என்கிட்ட சொல்லாத. உங்கப்பாகிட்ட சொல்லிக்கோ...''

''ஐயோ... அப்பாகிட்ட நான் எப்படிம்மா சொல்வேன்...? கொலை பண்ணிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார். நீதாம்மா சொல்லணும்...''

''ஏண்டியம்மா... அதே பயம் எனக்கு இருக்காதா...? நான் சொன்னால் என்னை மட்டும் கொலை பண்ண மாட்டாரா...?''

''ஐயோ... அம்மா... நீயே இப்படிச் சொன்னால் எப்படிம்மா...?''

''நம் வீட்டு நிலைமை, அப்பாவோட குணம் இதெல்லாம் தெரிஞ்சு நீ இப்படி நடந்திருக்கக் கூடாது. மனசுல பயம் இருந்தால் புரொபசரைப் பற்றி நினைக்கத் தோன்றியிருக்குமா? எதுவானாலும் அதையெல்லாம் பற்றிப் பேசிட்டிருக்க நேரமில்லை. முதல்ல இப்போ நடக்க வேண்டிய காரியத்தை கவனிப்போம். மற்றதையெல்லாம் அவங்க போனப்புறம் பேசிக்கலாம்...''

''அப்படின்னா... சரின்னு ஒத்துக்கறியாம்மா?''



''நான் ஒத்துக்கிற விஷயம்னால் இப்பவே சரின்னு சொல்லிடுவேனே... இது உங்கப்பா சம்பந்தப்பட்ட விஷயம், என்னால் எப்படி சரி சொல்ல முடியும்...?''

''ஏம்மா... இது என் விஷயம் இல்லையா? நான் சம்பந்தப்பட்ட விஷயமில்லையா...?''

''நீன்றது யாரு... நாங்க பெத்த பொண்ணுதானே... இத்தனை வருஷம் நாங்க வளர்த்த பொண்ணுதானே...? அதனால் உனக்கு எது நல்லது, எது கெட்டதுன்றது எங்களுக்குத் தெரியும். அதனால் முதல்ல இந்தக் காப்பி. டிரேயை எடுத்துண்டு ஹாலைப் பார்த்து நட...''

''அம்மா ப்ளீஸ்...''

அவள் முடிக்கும்முன் முன் அறையிலிருந்து அப்பாவின் குரல் கணீரென்று கேட்டது.

''திவ்யா... இன்னுமா ரெடியாகலை...?''

''இதோ வந்துட்டா...'' அம்மா முன்னால் போக பின்னாலேயே காப்பிக் கோப்பைகள் அடங்கிய டிரேயுடன் திவ்யா வரவேற்பறையினுள் நுழைந்தாள்.

திவ்யாவைப் பார்த்ததுமே ஹாலில் உட்கார்ந்திருந்த அத்தனைப் பேருக்கும் பிடித்துப் போய்விட்டது. காப்பியைத் தந்தபோது பையனின் அம்மா, ''மகாலஷ்மி மாதிரி இருக்கே... நீ எங்க வீட்டுக்கு வர்றது எங்க அதிர்ஷ்டம் தான்...'' என்று வாய்விட்டும், மனசுவிட்டும் சொன்னாள். அதைக் கேட்டு திவ்யாவிற்கு சிரிக்க வேண்டுமா, நன்றி சொல்ல வேண்டுமா என்கிற எதுவும் புரியவில்லை. எல்லோருக்கும் காப்பி தந்ததும் என்ன செய்ய வேண்டும் என்பதும் தெரியவில்லை.

''நீங்களும் இப்படி சோபாவில் உட்காருங்கள்...'' என்று அமெரிக்க ஆங்கிலத்தில் சொன்னான் அப்பா பார்த்திருந்த அமெரிக்க மாப்பிள்ளை.

திவ்யா உட்காராமல் நின்று தன் எதிர்ப்பைத் தெரிவித்தாள்.

"பரவாயில்லை. உட்கார்ந்துக்கோ..." என்று அப்பா கட்டளை இடுகிற தொனியில் சொன்னதும் சட்டென்று அப்பாவின் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டாள்.

"நீ பாடுவாயாம்மா...?"—பையனின் அம்மா.

"ஓ... ரொம்ப நன்றாகப் பாடுவாளே..."—இது அம்மா.

"ஒரு பாட்டு பாடேன். உன் குரல்ல சரஸ்வதி இருக்கிறதை நாங்களும் தெரிஞ்சுக்கறோம்..."

"டு யு நோ தியாகராஜ கீர்த்தனை...?" — பையன் மிக ஆர்வமாக அவளிடமிருந்து பதிலை எதிர்பார்த்தான்.

"எங்க ஊரே தஞ்சாவூர். தியாகராஜ கீர்த்தனை தெரியாமல் இருக்குமா...?" என்கிற அப்பாவின் பதிலில் அவன் ஏமாந்து போனான்.

"அப்ப பாடேன்..."

திவ்யா அம்மாவைப் பார்த்தாள்.

"ஒரு கீர்த்தனைதானே... பாடேன். என் பையனுக்கு கர்நாடக சங்கீதம்னால் உயிர். ஸ்கூல் படிக்கும் போது மிருதங்கம் கத்துண்டான். எட்டு வருஷம். அமெரிக்காவுக்கும் மிருதங்கத்தை எடுத்துண்டுதான் போனான். ரொம்ப நன்றாக வாசிப்பான்..." பையனின் அப்பா முதல் முறையாக வாய் திறந்தார்.

"ஒரு மிருதங்கம் இருந்தால் கொடுங்க. திவ்யா... உனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் உன் பாட்டிற்கு நான் மிருதங்கம் வாசிக்கிறேன்...!"



"ஓ... இருக்கே... என் பையன் கூட மிருதங்கம் வாசிப்பான் இருங்க. அவனுடைய மிருதங்கத்தைக் கொண்டு வரேன்..."—அம்மா பரபரப்பாக உள்ளே போனாள்.

திவ்யாவிற்கு அந்த இடத்தை விட்டு எழுந்து ஓடிவிட வேண்டும் போலிருந்தது. உடனே போய் பிரபுராமைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. மிருதங்கம் கொண்டு வந்து தந்த அம்மாவை மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். புன்னகையுடன் எதுவுமே நடக்காத மாதிரி, அங்கே நடப்பவைகளை மனப்பூர்வமாக ரசிக்கிறாற் போல் அம்மா நின்று கொண்டிருந்தது அவளுக்குள் ஓர் எரிச்சலை ஏற்படுத்திற்று.

'எத்தனை வேஷம்! அம்மா... எப்படி முடிகிறது உன்னால்...? இது எப்படி சாத்தியமாகிறது...? நான் அத்தனை எடுத்துச் சொல்லியும் மௌனமாக இருக்கிறாயே... என் மனசை நீயே புரிந்து கொள்ளவில்லை என்றால் வேறு யார் புரிந்து கொள்வார்கள்...? நீ அப்பாவிடம் எடுத்துச் சொல்லவில்லை என்றால் வேறு யார் சொல்வார்கள்...?

உள்ளுக்குள் அவள் குமுறிக் கொண்டிருந்த போது மிருதங்கத்தை மடியில் வைத்து சரி பார்த்துக் கொண்டிருந்தான் அவன். திவ்யாவிற்கு அவன் பெயர் கூடத் தெரியாது. தெரிந்து கொள்கிற அக்கறையும் அவளிடம் இல்லை. மிருதங்கம் வாசிப்பதற்காகத் தரையில் இறங்கி உட்கார்ந்து மிருதங்கததை சரிபடுத்திக் கொண்டு மிகவும் ஆர்வமான புன்னகையில் அவளை ஏறிட்டுக் கேட்டான். இந்த முறை தமிழிலேயே பேசினான்...

"என்ன கீர்த்தனை பாடப் போற...?"

"புரோச்சே வார வருரா... தெரியுமா...?"

''ஓ...ரொம்ப நன்றாகப் பாடுவாளே...'' என்ற அவளது அம்மா, ''பாடு திவ்யா....'' என்றாள்.

அவள் பாட அவன் மிருதங்கம் வாசிக்க, அங்கு ஒரு குட்டி கச்சேரியே நடக்கிற மாதிரி இருந்தது. நடுவில் அவன் மிக நன்றாகத் தனி ஆவர்த்தனம்கூட பண்ணினான். அவனைப் பிடிக்காது போனாலும் அவன் மிக நன்றாக வாசிப்பதை அவளால் உணர முடிந்தது. நடக்கின்ற எதிலும் தன்னை சம்மந்தப்படுத்திக் கொள்ள முடியாமலும், சம்பந்தப்படாமல் தனித்து நிற்கிற திறமையற்றும் திணறினாள் அவள். அவர்கள் எழுந்து போனால் போதும் என்றிருந்தது.

ஆனால் அவர்களோ பரமதிருப்தியாக முகம் முழுதும் மலர்ச்சியாகச் சொன்னார்கள் தனித்தனியாக அம்மா, அப்பா, பிள்ளை மூவருமே பாராட்டினார்கள்.

''ரொம்ப அருமையாக இருந்ததம்மா உன் குரல், பார்க்க மகாலஷ்மியும், பாட்டுல சரஸ்வதியும் ரெண்டு பேருமே குடிகொண்டிருக்கா உன்கிட்ட...''

''எங்களுக்குப் பூரண சம்மதம். என்ன சொல்ற நரேந்தர்...?''

''எனக்கு திவ்யாவை போட்டோவில் பார்த்ததுமே பிடிச்சுப் போச்சுப்பா. இப்போ நேர்ல பார்க்கிறபோது இன்னமும் பிடிச்சிருக்கு...''

சட்டென்று தலைநிமிர்ந்து திவ்யா பேச முயற்சிப்பதை உணர்ந்த அம்மா சடாரென்று இடையில் குறுக்கிட்டுச் சொன்னாள்...

''அதுக்கு நாங்க ரொம்ப கொடுத்து வச்சிருக்கணும். இதுக்கு மேல் திவ்யா இங்க எதுக்கு? அவளை அனுப்பிட்டு நாம் பேச வேண்டிய மற்ற விஷயங்களைப் பேசி முடிச்சுடலாமே...?''



''மற்ற விஷயங்கள்ளாம் எங்களுக்கு முக்கியமில்லை. பொண்ணு பிடிச்சிருக்கிறதுதான் எங்களுக்கு முக்கியம். நீங்க உங்க பெண்ணுக்கு என்ன பிரியப்பட்டு செய்யறீங்களோ செய்யுங்க... அதுல நாங்க தலையிடப் போறதில்லை...''—பையனின் அப்பா தீர்த்துச் சொன்னார்.

''அப்பா...அதுக்கு முன்னால ஒரு விஷயம்...'' என்றான் நரேந்திரன்.

''என்னப்பா...?''

''நான் கொஞ்சம் திவ்யாகிட்ட தனியாகப் பேசப் பிரியப்படறேன்...''

அவன் கேட்டதும் திவ்யாவிற்குக் கொஞ்சம் நம்பிக்கை வந்தது. அவனோடு பேசுகிற சந்தர்ப்பம் கிடைத்தால் சொல்லிவிடலாம். தான் பிரபுராமைக் காதலிப்பதையும், அவனைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போவதையும் தெரிவித்து விடலாம். எதையும் மறைக்காமல் உண்மையைப் பேசிவிடலாம்...!

ஆனால் அவளது நம்பிக்கை உடைந்து போயிற்று. அப்பாவின் பதிலில் அந்த எதிர்பார்ப்பும் பொய்யாயிற்று.

''அதில்லை சார்...நான் அந்தக் காலத்து மனுஷன். என் பெண்ணையும் நான் அப்படித்தான் வளர்த்திருக்கேன். இந்தக் கால நாகரிகத்திற்கும் எனக்கும் கொஞ்சம்கூட ஒத்துப் போகாது. நான் ஒத்துக்கவும் மாட்டேன். உங்க குடும்பத்துக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரியும். எங்க குடும்ப விவரம் முழுசும் தெரியும். இப்போ பொண்ணையும் பார்த்தீங்க. அவளுடைய பாட்டையும் கேட்டீங்க...திவ்யா ரொம்ப சாது. ரொம்ப தங்கமான பொண்ணு. உங்ககிட்ட தனியாகப் பேசணும்னால் பயப்படும். எதுக்குங்க

கல்யாணத்துக்கு முன்னால் அதெல்லாம்...? வேணாங்க... எங்க குடும்பத்துல பழக்கம் இல்லீங்க...சீக்கிரம் நாள் பார்த்து கல்யாணத்தை முடிச்சுட்டோம்னா நிறைய பேசுங்க...நாள் முழுசும் பேசிண்டே இருங்க...நாங்களா தடுக்கப் போறோம்? என்ன நான் சொல்றது...?'' என்று அப்பா அவனைப் பார்க்க அவன் வேறு வழியின்றி ஏமாற்றத்துடன் சரி என்று தலையசைக்க அம்மா திவ்யாவை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

உள்ளே வந்ததும் திவ்யா அம்மாவைக் கோபமாகப் பார்த்தாள்.

''எம்மா என்னே இப்படி இழுத்துண்டு வரே...?''

''நீ அங்கே ஏடாகூடமாக எதையாவது பேசிடப் போறியேன்னுதான்...''

''என்னால் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்க முடியாதும்மா...''

''கூடத்துல அப்பா கல்யாணத்துக்குத் தேதி குறிச்சுண்டு இருக்கார். அவர் உள்ளே வந்தப்புறம் அவர்கிட்ட சொல்லு...''

''அவர்கிட்ட சொல்ல முடியாத பயத்துலதானேம்மா உன்கிட்ட சொல்றேன்...''

''அத்தனை பயம் இருக்கிறவள் காதலிச்சிருக்கக் கூடாது...''

''எம்மா...காதல்ன்றது இடம், பொருள், ஏவல், சூழ்நிலை, அம்மா, அப்பா, சம்பாத்தியம், வசதி எல்லாம் பார்த்தா வர்றது.''

''இந்தக் காலத்துல இதையெல்லாம் பார்த்துத்தான் காதல் ஏற்படறது...''

''அதுக்குப் பேர் காதல் இல்லேம்மா...கணக்கு...''



சரி ஏதோ ஒன்னு.... ஆக மொத்தத்துல மனுஷங்க என்ன நினைச்சாலும் ஆண்டவன் கணக்குப்படிதான் நடக்கும்; யாருக்கு யார்னு முடிச்சு போட்டிருக்கானோ அதன்படிதான் நடக்கும். அவனை வேண்டிக்கோ.. உன் பிரார்த்தனை பலிச்சு, பிரபுவா...என்ன பேரு சொன்னே அந்த புரொபசருக்கு....அவனுக்கும் உனக்கும்னு முடிச்சு போட்டிருந்தால் அவனையே நீ கல்யாணம் பண்ணிண்டால் எனக்கு சம்மதம்தான். அப்படியில்லாமல் ஆண்டவன் எண்ணம் வேறு மாதிரியிருந்து இந்த இடம்தான்னு தலையில் எழுதியிருந்தால் அதற்கும் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. சந்தோஷப் படத்தான் முடியும். உள்ளுக்குள்ள சந்தோஷம் இருக்கோ இல்லையோ வெளிலயாவது சந்தோஷமாகக் காட்டிக்கணும், அப்படித்தான் இத்தனை நாள் இருந்துண்டிருக்கேன். உங்கப்பாகிட்ட அப்படித்தான் இருக்க முடியும். அப்படி இருந்தால்தான் வாழமுடியும். வாழறதுன்றது என்னன்னு என்னைக் கேட்காதே. என்னைப் பொருத்தவரை வாழறதுன்றது இருக்கிறது சாப்பாடு, கட்டிக்கப் புடவை, மழை வெய்யலுக்குக் கூரை. நாலு சொந்தக்காரங்க மத்தியில் 'இவ வீட்டுக்காரனோடு குடும்பம் நடத்தறான்ற பேரு....' இவ்வளவுதான்...''

''இதுல என் இஷ்டம் எதுக்குமே இடமில்லாமல் உங்கப்பா சொல்றதுக்கெல்லாம் தலையாட்டியே பழக்கப் பட்டுட்ட நான் உனக்கு எப்படி உதவமுடியும் சொல்லு...? என் இஷ்டம்னு ஒரு ஆசை நிறைவேறி இருக்கா...? இந்தக் கலர் பிடிச்சிருக்குன்னு ஒரு புடவை வாங்கிண்டு இருப்பேனா....? அவ்வளவு தூரம் போவானேன்...? இன்னிக்கு என்ன சமைக்கணும், எத்தனை கத்தரிக்காய், வெங்காயம் நறுக்கணும்ன்ற எல்லாத்தையும் தீர்மானிக்கிற உங்கப்பா கிட்ட போய் 'திவ்யா யாரையோ அவ காலேஜ் புரொபசரைக் காதலிக்கிறாளாம்....அவனையே கல்யாணம் பண்ணி

வச்சுடுங்களேன்னு சொன்னால் நடக்குமா...? முதல்ல எனக்கு உதை விழும். அடியும், உதையும் பட்டுண்டு அழுதுண்டு வர்றதைத்தவிர வேறு என்ன காணமுடியும்...? அதனால் நீ என்கிட்ட என்ன சொல்லியும் பிரயோசனமில்லை. அப்பாவை மீறி என்னால் எதுவும் சொல்ல முடியாது. நீ பேசி உன் இஷ்டப்படி காரியத்தை முடிச்சுக்கிற தைரியமும், சக்தியும் இருந்தால் முடிச்சுக்கோ... நான் தடுக்கலை.... நான் வேணாம்னு சொல்லலை...

அம்மாவின் பேச்சிலிருந்த உண்மையை உணர்ந்து திவ்யா ஒன்றும் செய்ய வழியற்ற இயலாமையில் உட்கார்ந்திருந்தபோது வரவேற்பறையிலிருந்து அப்பா குரல் கொடுத்தார்.

''கல்யாணி......''

அம்மா எழுந்து ஓடினாள். இவள் ஜன்னல் வழியாகப் பார்த்தபோது தாம்பூலத்தட்டு மாற்றிக் கொள்ளப்படுவது தெரிந்தது. பின்னர் அப்பா இவளையும் கூப்பிட்டார். இவளும் போய் நின்றாள். அந்த அம்மாள் ஒரு தட்டில் பெரிய சரிகையிட்ட பட்டுப்புடவையும், ரவிக்கைத் துணியும் வைத்துத் தந்தாள்.

''ம்... நமஸ்காரம் பண்ணிட்டு வாங்கிக்க...''

அப்பா சொன்னபடி நமஸ்கரித்து வாங்கிக் கொண்டாள்.

''முதல் நிச்சயதார்த்தப் புடவை இது. போய் கட்டிண்டு வா...''

அவள் தயங்கி மிக மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.

''அப்பா....வந்...துப்பா...நான்...''

அப்பா ஒரு முறை முறைத்தார். அவளுக்குள் அத்தனையும் ஒடுங்குகிற உணர்வு ஏற்பட்டது.



''போய் கட்டிண்டு வந்து மடிபடியும் நமஸ்காரம் பண்ணு...''

பண்ணினாள்.

''நீ இப்போ பர்ஸ்ட் இயர் படிக்கறியாம்மா..?'' மாப்பிள்ளையின் அப்பா ராமகிருஷ்ணன் கேட்டார்.

''இல்ல...பைனல் இயர் படிக்கறா...?''

''இப்போ கல்யாணம் வெச்சுண்டா படிப்பு நின்னு போயிடும் பரவாயில்லையா..?''

''பரவாயில்லை. நடுவில் கல்யாணம் நிச்சயமானால் படிப்பை நிறுத்திடறேன்னு அவகிட்ட பிராமிஸ் வாங்கிண்டுதான் எம்.ஏ. சேர்த்தேன்...''

''நீ அங்க வந்தும் படிக்கலாம், வேலைக்குப் போகணும்னு தோணினாலும் போகலாம். நான் உன் ஆசைகள் எதற்கும் தடை சொல்ல மாட்டேன்...'' நரேந்திரன் சொன்னான்.

''நீங்க எப்போ திரும்பி அமெரிக்கா போறதாக இருக்கீங்க மாப்பிள்ளை...?''

அதற்குள் அப்பா அவனை மாப்பிள்ளையாகவே வரித்துவிட்டதை நினைத்து திவ்யா உள்ளுக்குள் சுருண்டு போனாள்.

''இன்னும் பதினைந்தே நாள்ல நான் திரும்பிப் போயாகணும்.''

''அதுக்குள்ள கல்யாணத்தை முடிச்சுண்டு போகணும்னுதான் அவன் கிளம்பி வந்தான்.''

''எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. நாங்க எல்லாம் தயாராகத்தான் வச்சிருக்கோம். ஆனால் பதினைந்து நாளுக்குள் சத்திரம் கிடைக்குமான்றதுதான் சந்தேகமாக இருக்கு...''

''சத்திரம் கிடைக்கலேன்னால் பரவாயில்லை. ஏதாவது ஓட்டல்ல வச்சு சிம்பிளா முடிச்சுடலாம்...''

அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காமல் மெதுவாக நகர்ந்து உள்ளே வந்தாள் திவ்யா. அவர்களின் மற்ற பேச்சுக்களோ, சிரிப்புச் சத்தமோ காதில் விழவில்லை. பிரபுராமிற்கு போன் பண்ணி எப்படியாவது தெரிவித்து விடவேண்டுமென்று தோன்றிற்று. முடிந்தால் டூர் புரோக்கிராமைக்கூட கான்சல் செய்ய வைக்கவேண்டும்...

மணி பார்த்தாள். ஒன்பது. பக்கத்து வீட்டில்தான் தொலைபேசி இருக்கிறது. அங்கு போனால் பேச முடியும். ஆனால் இத்தனை நேரத்திற்குமேல் போய் கேட்டால் நன்றாக இருக்காது. அவர்கள் வீட்டில் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருப்பார்கள். டி.விக்குப் பக்கத்தில்தான் தொலைபேசியும் இருக்கிறது. அங்கு பேசினால் அத்தனை பேரும் டி.வி. பார்ப்பதை விட்டு அவளது பேச்சை கவனிப்பார்கள். ஒருவேளை இந்நேரம் பிரபுராம் அறையைவிட்டு ஸ்டேஷனுக்குக் கிளம்பியிருந்தாலும் இருக்கலாம்...நேராக சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போய் அவனைப் பார்த்து விஷயத்தைச் சொன்னால் என்ன...?

மெதுவாகக் கதவோரம் எட்டிப் பார்த்து ஹாலில் நின்றிருந்த அம்மாவை சைகை காட்டி அழைத்தாள்.

''என்ன திவ்யா...?''

''நான் சென்ட்ரல் ஸ்டேஷன் வரை போயிட்டு வரேம்மா...?''

''என்...னது...?''

''பிரபுராம் இப்ப ஊருக்குப் போறார்மா. காலேஜ் எக்ஸ்கர்ஷன். நீங்க என்னை அனுப்ப மறுத்திட்டீங்களே.... அந்த எக்ஸ்கர்ஷன். இப்போ போனால் அவங்கள்ளாம்



திரும்பி வர இருபது நாளாயிடும்மா...டிரெயின் பத்து மணிக்கும்மா...இப்பவே மணி ஒன்பதாயிடுத்து...''

அம்மா பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். 'ஒருவேளை சென்ட்ரல் ஸ்டேஷன் போய் இந்தப் பெண் ரயிலேறி அவனுடனே போய்விட்டால் என்ன செய்வது...?' என்ற பயம் ஏற்பட்டது.

''என்னம்மா... நான் சொல்லிட்டே இருக்கேன். நீ பாட்டுக்குப் பேசாமல் இருக்கே...ஏற்கெனவே நேரமாயிடுத்தும்மா...''

''இல்ல... நீ இப்ப போகமுடியாது, போகவும் கூடாது அவங்கள்ளாம் ஹால்ல இருக்கிறப்ப நீ எப்படிப் போவே...?''

''எனக்குப் பிரபுராமைப் பார்க்கணும்மா...'' ''பார்க்க முடியாது. நான் சொல்லலை.... யார் யாருக்குன்னு ஆண்டவன் கணக்கு போட்டிருக்காவோ அது தான் நடக்கும்னு...அதனால் தான் இந்த நேரம் பார்த்து, அதுவும் இன்னிக்கு உன் புரொபசர் ஊருக்குக் கிளம்பறான். உனக்குக் கல்யாணம் ஆகப் போகிற விஷயம் கூட தெரியாத அளவிற்கு ஏதோ ஒரு ஊர்ல அலைஞ்சுண்டிருக்கப் போறான். உன் கல்யாணம் முடிஞ்சப்புறம் திரும்பி வரப் போறான். இதைத்தான் விதின்னு சொல்றது; ஆண்டவன் போடற கணக்குன்றது. மனுஷங்க நாம் என்ன நினைச்சாலும் எத்தனை நினைச்சாலும் அந்த தெய்வத்தோடு நினைப்பு எதுவோ அது தான் நடக்கும். அதனால் உன் பிரபுராமை மறந்துவிட்டு அவனுடன் பழகின பழக்கத்தை யெல்லாம் மறந்துட்டு புத்திசாலித்தனமான பெண்ணாக, சாமர்த்தியசாலியாக நடந்துக்கப்பாரு... அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். ஒரு அம்மா என்ன சொல்லணுமோ அதைச் சொல்றேன்; ஒரு அம்மா எதைச் செய்யணுமோ அதைச் செய்யறேன்; எல்லாம் உன் நல்ல

திற்குத்தான்றதைப் புரிஞ்சுண்டு சமர்த்தாக இருக்கிற வழியைப் பாரு...''

அம்மா மீண்டும் நகர்ந்து முன் அறைக்குப் போனதும் திவ்யா தன் அறையின் கதவை மூடித் தாழிட்டுப்படுக்கையில் விழுந்து, தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

'பிரபு... பிரபுராம்.... பிரபு...'

நினைக்க நினைக்க அழுகை அதிகமாயிற்று. ஆழமான விசும்பலும் கேவலுமாக நெஞ்சை அடைக்கத் தொடங்கிற்று...

## 3

அப்பா அவளிடம் ஒன்றும் கேட்கவில்லை. மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறதா என்று ஒரு பேச்சு கேட்கவில்லை. அவரே எல்லாவற்றையும் நிச்சயப்படுத்திக் கொண்டு விட்டார். அவர் கோடு கிழித்து விடுவார் அதை யாரும் எதற்காகவும் தாண்டக் கூடாது. தனிப்பட்ட உணர்ச்சிகள் என்று யாருக்கும் எதுவும் இருக்கக்கூடாது. எல்லோருக்கும் அவர் கடிவாளம் போட்டு விடுவார். அவர் பார்க்கச் சொல்கிற திசையில்தான் பார்க்க வேண்டும்; அவர் போகச் சொல்கிற இடத்திற்குத்தான் போக வேண்டும். நில் என்றால் நிற்க வேண்டும், நகரு என்றால் நகர வேண்டும். இத்தனை நாட்களும் அத்தனை பேர் வாழ்க்கையையும் அவரே வாழ்ந்திருக்கிறார். எல்லார் விஷயங்களிலும் அவர் தன் விருப்பத்தை மட்டுமே பூர்த்தி செய்து கொண்டிருக்கிறார். அப்பாவிற்குத் தேவை மனிதர்களல்ல, ரோபோக்கள். அவரது எண்ணப்படி இயங்குகின்ற மனித இயந்திரங்கள்...



நினைத்துப் பார்த்த போது திவ்யாவிற்குப் பழைய நிகழ்ச்சி ஒன்று நினைவிற்கு வந்தது. அவளுக்குப் பதினோரு வயதிருக்கும், தம்பி ஷ்யாமிற்கு ஒன்பது வயது. இருவரும் பள்ளிக்குப் புத்தகங்கள் எடுத்துக் கொண்டு போக எல்லோரும் கொண்டு வருகிற மாதிரி அலுமினியப் பெட்டி கேட்டார்கள். அப்பா முதலில் மறுத்தார். அலுமினியப் பெட்டி மீதிருந்த மோகம் இருவரையும் கெஞ்ச வைத்தது; அடம் பிடிக்க வைத்தது; பிடிவாதம் பிடிக்க வைத்தது. அடித்துப் பார்த்தார் அப்பா, இளம் வயது அடி பெரிதாகப் படவில்லை. அலுமினியப் பெட்டிதான் பெரிதாகப்பட்டது. அதனால் அவர்கள் அழுகையை நிறுத்தவில்லை.

சின்னப் பசங்கள்தானே... எல்லோரும் கொண்டு வருகிற அலுமினியப் பெட்டிக்குத் தானே ஆசைப்படுகிறார்கள், வாங்கித் தரலாம் என்று தோன்றவில்லை. பணம் இல்லாமல் இல்லை இருந்தது. நிறையவே இருந்தது. கேட்ட அத்தனைப் பொருட்களையும் வாங்கித் தருகிற வசதி இருந்தது, ஆனால் மனம்தான் இல்லை.

அன்று என்னவோ அதிசயமாக, மனமிறங்கி 'பெட்டி வாங்கித் தருகிறேன்' என்று அவர்களை அழைத்துக் கொண்டு பாரீஸ் கார்னர் பக்கம் போனார். பாய்க்கடை முழுவதும் சுற்ற வைத்தார். ஓட்டலுக்குக் கூட்டிக் கொண்டு போனார். 'என்ன வேணும்னாலும் சாப்பிடுங்க...' என்றார். ஐஸ்க்ரீம் வாங்கித் தந்தார். ஓட்டலை விட்டு வெளியில் வந்து ஒரு இரும்புப் பெட்டிக் கடைக்கு அழைத்துப் போனார். பச்சை வர்ணத்தில் இரண்டு இரும்புப் பெட்டிகளைத் தேர்ந்தெடுத்தார். அவர்களுக்கு அது பிடிக்கவில்லை. டிரங்குப் பெட்டி மாதிரி இருந்தது. அவர்கள் ஆசையெல்லாம் பளபளவென்று கனமற்றிருந்த அலுமினியப் பெட்டிகள்

மீதிருக்க, தூக்கவே கனமான பச்சைநிறத் தகரப்பெட்டி கள்மீது வெறுப்பு வந்தது. ஆனால் அப்பாவிடம் வாய் திறக்க முடியவில்லை.

அவர்களால் முடியாததைக் கடைக்காரர் கேட்டார்.

''எதுக்கு சாமி இந்தப் பெட்டிங்க..?''

''குழந்தைகள் ஸ்கூலுக்குப் புஸ்தகங்கள் கொண்டு போகப்பா...''

''அதுக்கு அலுமினியப் பெட்டி இல்ல வாங்கு வாங்க....? இது எதுக்கு சாமி... கனமாக இருக்கும்... புள்ளைங்களால் தூக்கக்கூட முடியாது...''

''எனக்கு வேண்டியதை நீ தாப்பா... போறும்...''

''இல்ல சாமி, இந்தச் சின்னப் புள்ளைங்க இதை எப்படித் தூக்கிட்டுப் போகும்னு சொன்னேன்...''

''அந்தக் கவலையெல்லாம் உனக்கு எதுக்கு? பெட்டி களைத் தர முடியாதுன்னால் வேற கடையைப் பார்த் துண்டு போறேன்....''

அவர் தரமாட்டேன் என்று சொல்லிவிட மாட்டாரா என்றிருந்தது திவ்யாவிற்கு. ஆனால் அவர் சொல்ல வில்லை.

''எனக்கென்ன சாமி...வியாபாரம் தானே முக்கியம்... ஏன் தரமாட்டேன்னு சொல்லப் போறேன்...? இந்தாங்க... எடுத்துக்கோங்க....''

''இதுல பேர் போட முடியுமா?''

''ம்... போடலாம், இந்தக் கைப்பிடி பக்கத்தில் சின்னதா போட்டுறவா....?''



''வேணாம். மூடியிலேயே போடு. ஆர். திவ்யான்னு பெரிசா கொட்டை எழுத்துல மூடிமேல நீளமா எழுது.... அப்பத்தான் காணாமல் போகாது....''

''இதை யாரு சாமி எடுக்கப் போறாங்க....?''

''நீ எழுதுப்பா....''

''அப்பா.... வேணம்ப்பா .... பெரிசா எழுதினால் பிரெண்ட்ஸ் எல்லாம் கலாட்டா பண்ணுவாங்கப்பா.... அதனால் சின்னதா எழுதித் தாங்கப்பா போறும்''–திவ்யா சொல்ல முறைத்தார் அப்பா.

பெரிதாகப் பெயர் பொறித்த அந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு தெருவில் நடக்கவே அவளுக்கு அசிங்க மாக இருந்தது. அதே போல் தம்பியின் கையிலும் ஆர். சியாம் என்று எழுதப்பட்ட பெட்டி. அதை முதல் நாள் ஸ்கூலுக்கு எடுத்துக் கொண்டு போனபோது எல்லோரும் சிரித்தார்கள். இதை விட வேறு பெட்டி உனக்குக் கிடைக்க வில்லையா என்று கேலி செய்தார்கள். பெட்டி, 'பூட்டு சாவி'க்காரன் மாதிரி இருக்கிறது என்றார்கள்.

அடுத்த நாள் அதை விட்டு வேறு பையில் அவள் புத்த கங்களை எடுத்து வைப்பதைப் பார்த்து அப்பா கத்தி னார்.

''கஷ்டப்பட்டு கடைகடையாகத் தேடி ஒரு நல்ல பெட்டி வாங்கித் தந்தால் உனக்கு அத்தனை அலட்சி யமா....? இனிமேல் என்கிட்ட ஏதாவது கேள் சொல்கி றேன்...எதற்கும் என்கிட்ட வராதே.... யூனிஃபாரம் வேணும், புஸ்தகம் வேணும், பீஸ் கட்டணும்னு வந்தே.... அப்போ உன்னைப் பார்த்துக்கறேன். அவ்வளவு அகம் பாவமும், நெஞ்சழுத்தமும் இருக்கு இல்லே...?''

அப்பா கத்தின கத்தலில், முறைப்பில் பையை வைத்துவிட்டு அவர் வாங்கித் தந்த பச்சை டிரங்குப்

பெட்டியில் புத்தகங்களை அடுக்கிக் கொண்டு ஓடினாள். மூன்று வருடங்கள் அந்தப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போனாள். இப்போதும் கூட அந்தப் பெட்டி ஸ்டோர் ரூமில் ஆணிகளும், சுத்தியும், ஸ்க்ரூடிரைவர்களும், ஸ்பானர்களும் போடப்பட்டு டூல் பெட்டியாக வைத்திருந்தார்கள். எப்போது அந்தப் பெட்டியைப் பார்க்க நேர்ந்தாலும் இவையெல்லாம் சித்திரம் மாதிரி நினைவில் வந்து மறையும்.

அந்த வீட்டில் அந்த பெட்டியைப் போல் அலாரம், பீரோ, புடவைகள் என நிறையப் பொருட்கள் இதுபோல் நிறைய நிகழ்ச்சிகளை ஞாபகப் படுத்திக் கொண்டு தான் இருக்கின்றன. அவை எல்லாம் சின்னச்சின்ன விஷயங்கள். ஆனால், இப்போது அப்பா வாங்கித் தருகிறேன் என்று சொல்கிற விஷயத்திற்கு எப்படி பேசாமல் இருப்பது? ஒரு வார்த்தை கேட்க வேண்டும் பெண்ணிடம் என்று தோன்றவில்லை. எப்போது கேட்டிருக்கிறார்? எதற்குக் கேட்டிருக்கிறார்? வீட்டில் சமைப்பதிலிருந்து முதலில் யார் குளிக்க வேண்டும் என்பது வரை அவர் இஷ்டம் தானே கையோங்கி இருந்திருந்திருக்கிறது...? நரேந்திரன் தன்னிடம் பேச வேண்டும் என்று சொன்ன போது கூட அப்பாவின் இஷ்டம் தானே ஜெயித்தது ..? முடியாது என எத்தனை அழுத்தமாக மறுத்து விட்டார்...?

அப்பாதான் மறுத்தார் என்றால் அந்த மனிதன் படித்தவன் தானே....? அதுவும் அமெரிக்காவில் இருப்பவன், அவன் பிடிவாதமாகச் சொல்லியிருக்கக் கூடாதோ....? பேசத்தான் வேண்டும் என்றிருக்கக் கூடாதோ...? பெண்ணின் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்றிருக்கக் கூடாதோ....? ஒரு வேளை பெண்ணின் விருப்பத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு தான் அப்பா இந்தக் கல்யாணத்திற்கே சம்மதித்திருப்பதாக நினைத்து விட்டானோ...? இந்த ஊரில் பிறந்து வளர்ந்தவன் தானே...? ஒரு பெண்ணிற்கு எந்த அளவு சுதந்திரமும்,



பேச்சுரிமையும் இருக்கும் என்பது தெரியாமலா போய் விடும்...? ஒரு வேளை கூடப் பிறந்தவர்கள் யாருமின்றி ஒரே பிள்ளையானதால் அவனுக்குக் கிடைத்த சுதந்திரமும், செல்லமும் எல்லோருக்கும் கிடைக்கும் என எண்ணி விட்டானோ....?

ஜாதகப் பொருத்தம் இருக்கிறதாம்; சகுனப் பொருத்தம் இருக்கிறதாம். அவன் பாட, அவன் மிருதங்கம் வாசிக்க, ராகமும் தாளமும் இணைந்து விட்டதாம். இணைய முடியுமா? என் மனதில் ஓடுகிற கருத்து பேதம் புரியவில்லையே அவர்களுக்கு. இன்னும் பத்து நாளில் கல்யாணத்திற்குத் தேதி குறித்து விட்டுப் போய் விட்டார்களே... சத்திரம் கிடைக்காவிட்டால் ஏதாவது ஓட்டலில் வைத்துக் கொள்ளலாம் என்று விட்டார்களே....

இனி அம்மாவை நம்பிப் பயனில்லை; அம்மாவிடம் சொல்லிப் பிரயோசனமில்லை. பாவம் அம்மா.... அவள் என்ன செய்வாள்....? அவளே அப்பாவின் அத்தனை மிரட்டல்களுக்கும் பணிந்து போகிற போது, அவர் குட்டக் குட்ட குனிகிறபோது தலைக்காக எவ்வாறு வாய் திறக்க முடியும்? திறக்க விடுவாரா அப்பா....? அதனால் இனி துணிந்து தைரியமாகத் தானே போய்ப் பேசுவது தவிர வேறு வழியில்லை...

மனதில் திடத்தையும், தைரியத்தையும் வரவழைத்துக் கொண்டு சட்டென்று எழுந்து கூடத்திற்குப் போனாள். அப்பா கூடத்து சோபாவில் உட்கார்ந்து பஞ்சாங்கத்தைப் புரட்டிக் கொண்டிருந்தார். அவர் எதிரில் போய் நின்று மெதுவாக 'அப்பா' என்று கூப்பிட்டாள்.

அவர் நிமிர்ந்து பார்த்தார். அவள் பேசா திருக்கவே அவரே கேட்டார்.

''என்ன விஷயம்....?''

''எனக்கு இந்த நரேந்திரனைப் பிடிக்கவில்லை யப்பா..'' சட்டென்று சொல்லி விட்டாள்.

அப்பா ஒரு வினாடி அதிர்ந்து போன மாதிரி பார்த்தார். பின் கண்களை உருட்டியவாறு கேட்டார்.

''என்ன உளர்ற....?''

''உளர்லப்பா.... நிஜத்தைத்தான் சொல்கிறேன். உங்களுக்குப் பிடிக்காத ஒரு விஷயத்தைச் சொன்னால் அது உளறலா....?''

''பின்ன....நீ சொன்னதை உளரல்னு சொல்லாமல் வேற என்ன சொல்றது...முதல்ல நான் உன்கிட்ட உன் அபிப்பிராயத்தைக் கேட்கவே இல்லையே...''

''நீங்க கேட்கலைன்னால் என்ன...? நான் என் விருப்பத்தைச் சொல்லக் கூடாதா...?''

''என்ன...வர வர எதிர்த்துப் பேச ஆரம்பிச்சிருக்க...? உனக்குப் பிடிச்சிருக்கு, பிடிக்கலைன்னு ஒரு காரியத்தைச் செய்ய முடியாது. எனக்கு எது சரின்னு படறதோ அதைத் தான் செய்ய முடியும். உனக்கு நல்லது எதுன்றதை யோசிச்சுத்தான் எல்லாத்தையும் முடிவு செய்திருக்கேன். இந்த நரேந்திரன்தான் உனக்கு மாப்பிள்ளை. எனக்கு இந்த இடம்தான் ஒத்து வரும்...''

''எனக்கு ஒத்து வராதுப்பா...''

''ஒத்து வராதா...என்ன சொல்ற...?''

''எனக்கு அவனைப் பிடிக்கலை. என்னால் அமெரிக்காவெல்லாம் போக முடியாது.''

''ஏன் முடியாதுன்னு கேட்கறேன்...''



குறிப்புதவி நூல் ... 3 1 MAR 2004 ... CHENNAI-600 ...

''எனக்குப் பிடிக்கலை...''

''உனக்கு இந்த அளவிற்குப் பேச யார் இடம் கொடுத்தது...?''

''யார் இடம் கொடுக்கணும்....? எனக்கும் வயசாச்சப்பா...பேச உரிமை இருக்கு...''

578258

''வாயை மூடுடி....இந்த மாதிரியெல்லாம் பேச யார் சொல்லிக் கொடுத்தது...? உங்கம்மாவா...?''

''பேச்சு அப்பாவுக்கும் பெண்ணுக்கும் இடையில் நடக்றப்போ என்னே எதுக்கு அனாவஸ்யமாக வம்புக்கு இழுக்கறீங்க...?''—அம்மா இடைமறித்தாள்.

''நானா வம்பு பண்றேன்....? உன் பொண்ணு என்ன சொல்றான்னு கொஞ்சம் கேளு....''

''கேட்டேன். எல்லாவற்றையும் கேட்டுண்டுதான் இருக்கேன்....இது மட்டுமில்ல. அவள் என்கிட்ட இன்னும் வேற என்னவெல்லாமோ சொன்னாள். அதெல்லாத்தையும் என்னன்னு அவள் கிட்டேயே கேட்டுத் தெரிஞ்சுக் கோங்க....''

894.8113
IND

''என்ன சொன்னாள்....?''

''அவளையே கேளுங்க....''

''நீதானே ஆரம்பிச்சே....நீயே சொல்லு....''

''அவளுக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லையாம்.''

''அதைத்தான் என்கிட்டேயே சொன்னாளே....''

''அவள் வேண்டாம்னால் விட்டுடுங்களேன்....நமக்கு இருக்கிறது ஒரே ஒரு பொண்ணுதானே....? மனசு போல மாங்கல்யம் கிடைக்கட்டுமே....''

"மனசு என்ன மனசு....? இத்தனூண்டு பொண்ணுக்கு மனசு என்ன வேண்டிக் கிடக்கு....?"

"எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்னால் வேண்டாம்தான்...."

"ஏன் வேண்டாம், காரணத்தைச் சொல்லு....?"

"பிடிக்கலை...."

"பிடிக்கலைன்றதுக்காக விட்டுவிட முடியாது....இதை விட வசதியான அழகான வேற மாப்பிள்ளை பார்க்க எனக்கு முடியாது. இதையே ஆறு மாசமாக அவங்க வீட்டுக்கு நடையாக நடந்து முடிச்சிருக்கேன்...."

"இருக்கலாம். ஆனால் என் மனசுக்குப் பிடிக்கலையே அப்பா...."

"திரும்பத் திரும்ப பிடிக்கலைன்ற ஒன்னையே சொல்லிண்டிருந்தால் என்ன அர்த்தம்....?"

"அவ காலேஜ்ல புரொபசராக இருக்கானாம், பிரபுராம்னு பேராம்...அவனைப் பண்ணிக்கனும்னு ஆசைப்படறா....உங்களுக்கு முடியும்னால் அவனைப் பண்ணிவைங்க. நம்ம பொண்ணும் சந்தோஷமாக இருக்கும்."

அப்பா அதிர்ந்து போனார். முகம் முழுதும் சிவந்து போயிற்று. மேல்மூச்சு வாங்க எழுந்து வந்தார், அவளது தலைமுடியைப் பிடித்துச் சுவற்றில் மோதினார்.

"காதலாடி பண்றே....? இந்த வயசுக்குக் காதலா வேண்டிக்கிடக்கு ? இதுக்குத்தான் உன்னைக் காலேஜ் அனுப்பினேனா....? அப்பவே நினைச்சேன்; இந்த மாதிரி ஏதாவது பண்ணிட்டு வந்து நிப்பேன்னு....நினைச்சது சரியாகத்தான் போச்சு. எவண்டி அவன்....? துக்கிரிப்பய.... படிப்பு சொல்லித்தர வந்தானா... இல்லை காதல் கற்றுத்தர வந்தானா....? அவன்தான் உன்னை இப்படியெல்லாம்



பேசச் சொன்னானா....? இன்னும் வேற என்னவெல்லாம் சொன்னான்...? இன்னும் வேற என்னவெல்லாம் செய்தான்....?"

"அப்பா....நீங்க அளவுக்கு மீறிப் பேசறீங்க...."

"என்ன....என்ன....?! அளவுக்கு மீறிப்பேசறது நானா, இல்லை நீயா....? அளவுக்கு மீறி நீ நடந்துக்கிட்டியா, இல்லை நானா....? உன்னைப் பெற்று இருபது வருஷம் வளர்த்தவண்டி நான். உனக்கு என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும்....எனக்காடி சொல்ல வந்த....? அளவுக்கு மீறிப் பேசறனாம்...."

மீண்டும் அவளது தலைமுடியைப் பற்றி இழுத்து சுவற்றில் மோதினார்.

"விடுங்க அவளை....ஒரு பொம்மனாட்டிப் பொண்ணை இப்படியா அடிக்கிறது....?" அம்மா இடையில் புகுந்து தடுத்தாள்.

"போயும் போயும் உங்க தைரியத்தையும் பலத்தையும் பெத்த பொண்ணுகிட்ட காட்டறீங்களே....?"

"விடும்மா....அடிக்கட்டும். இந்த வலி எல்லாம் எனக்குப் பெரிசாப்படலேம்மா...."

"வலிக்கலையா....ஆனால் நீ சொல்லாம் அடிச்ச அடி எனக்கு வலிக்கிறதே....என் மனசுக்குள் ரணமாக நிக்கறதே.... உனக்கு வலிக்கலையா....? வலிக்கும்படி தரேன்.... அப்போதான் பெத்தவங்க வலி தெரியும், புரியும்...."

அப்பா இன்னமும் முகம் சிவக்க இரைமீது பாயத் துடிக்கிற புலி, சிங்கம் மாதிரி அவளருகில் வந்து மறுபடியும் தலையை இழுத்து சுவற்றில் மோதினார். உடம்பு, முதுகு, முகம் என இடம் பாராமல் அடித்தார். திவ்யாவிற்குத் தலைச் சுற்றிக் கொண்டு வந்தது.

''விடுங்கப்பா.... அடிக்காதிங்கப்பா....'' என்று சியாம் ஓடிவந்து தடுத்தான்.

''நீ இதுல தலையிடாதடா.... உனக்கும் அடிவிழும்....''

''விழட்டும். அதைப் பற்றி நான் கவலைப்படலை, ஆனால் அடிக்கிறது நாகரிகம் இல்லைப்பா....''

''ஓஹோ! துரை எனக்கு நாகரிகம் கற்றுத்தர வந்துட்டாரா....? அவ்வளவு வயசாயிடுத்தாடா உனக்கு....?''

''அடிக்காதிங்கன்னு சொல்றதுக்கு வயசு வேணுமாப்பா....அப்படியே பார்த்தாலும் பி.காம் முதல் வருஷம் படிக்கிறேம்ப்பா, நீங்க செய்யறது கொஞ்சம்கூட நன்றாக இல்லைப்பா....அவளுக்குப் பிடிக்கலைன்னால் விடவேண்டியதுதானே....? எல்லா விஷயமும் உங்க இஷ்டப்படிதான் நடந்துண்டு வர்றது. கல்யாணம் அவள் விஷயம். அது அவள் இஷ்டப்படி நடக்கக் கூடாதா....''

''கூடாது. எதையும் உங்க இஷ்டப்படியெல்லாம் செய்ய என்னால் முடியாது. நான் சொல்றபடிதான் நடந்தாகணும்....''

''வேணாம்ப்பா....வீண் பிடிவாதம் பிடிக்காதிங்க. அது நல்லதில்லை. சரியும் இல்லை....''

''எது நல்லது, எது சரின்னு நீ எனக்கு சொல்லித்தர வேணாம். முளைச்சு மூணு இலைவிடலை....அதுக்குள்ள லெக் என்னடா வேண்டிக்கிடக்கு லெக்....?''

''புரொபசரை நினைச்சுக்கிட்டு நரேந்திரனோடு வாழ்ந்தால் பரவாயில்லையாப்பா....? அது மட்டும் தப்பு இல்லையா?...

''அதுல எந்தத்தப்பும் இல்லை. இவ புரொபசரைக் காதலிச்ச விஷயம் யாருக்குத் தெரியும்..?''

''எங்க காலேஜ் முழுசுக்கும் தெரியும்...''

''தெரியட்டும். காலேஜ்லேருந்து யாரையும் கல்யாணத்துக்குக் கூப்பிட வேணாம் ''



''ஏம்ப்பா.... அவங்களைக் கல்யாணத்துக்குக் கூப்பிடாமல் விட்டுட்டால் சரியாகி விடுமா? உங்களுக்கு மனசாட்சி இல்லையா...?''

''என் மனசாட்சிப்படிதான் நான் நடக்கிறேன்; வாக்குக் கொடுத்துட்டேன். தவற மாட்டேன்.''

அதன்பின் மெதுவாகக் கெஞ்சத் தொடங்கினாள் இல்யா.

''நீங்க நினைக்கிறமாதிரி இல்லைப்பா, புரொபசரும் படிச்சவர்தான், படிச்சதனால்தான் புரொபசராக வரவே முடிஞ்சிருக்குன்றது உங்களுக்குத் தெரியும். ரொம்ப நல்லவர்ப்பா. பார்க்க இந்த நரேந்திரனைவிட அழகாக இருப்பார். வேற என்னப்பா வேணும்....?''

''அதெல்லாம் இருந்தால் மட்டும் போதுமா?

''எது போதுமோ, போதாதோ அதையெல்லாம் அவள் பார்த்துக்கறா... நீங்க அவள் மனசுக்குப் பிடிச்ச அந்த புரொபசரையே இவளுக்குக் கல்யாணம் பண்ணி வச்சிடுங்க...''

''என்டி... என்ன நினைச்சுப் பேசற...? பாக்கு வெற்றிலை மாற்றி. கல்யாணத்துக்கு நான் குறிச்சு, அவங்க தந்த பட்டுப் புடவையைக் கட்டிண்டு வந்து இவ நமஸ்காரம் பண்ணியிருக்கா.... இப்போபோய் கல்யாணத்தை நிறுத்துன்னால் எப்படி....? முடியாது.''

''உங்களால் புரொபசரை அவளுக்குக் கல்யாணம் பண்ணித்தர முடியுமா....? முடியாதா....?''

''முடியாதுன்னால் என்னடா செய்வே....? நீ நடத்திடுவியா....?''

''செய்வேன்.... நிச்சயமாகச் செய்வேன்....''

''என்னடா செய்வே....?''

''அவளையும், புரொபசரையும் கூட்டிண்டு திருநீர்மலைக்குப்போய் கல்யாணத்தை முடிப்பேன்....''

''செய்டா.... செய் பார்க்கலாம்.''

''செய்யத்தான் போறேன். அந்த புரொபசர் டூர் போயிருக்கார். வர இருபது நாளாகும். வந்த உடனே செய்யறேனா இல்லையான்னு பாருங்க....''

''துப்புகெட்டவனே.... இருபது நாளைக்கப்புறம் புரொபசர் வந்து நீ கல்யாணம் பண்ணி வைக்கிறவரை நான் சும்மா இருப்பேன்னு நினைச்சியா....? உங்கப்பன்டா நான். பத்தே நாள்ல கல்யாணம். தேதி, இடம், முகூர்த்த நேரம் எல்லாம் குறிச்சாச்சு....''

''அப்படின்னால் நான் இப்பவேபோய் அந்த நரேந்திரனைப் பார்த்து புரொபசர் பற்றின விஷயம் முழுவதையும் சொல்றேன். சார் தயவுசெய்து எங்க அக்காவை அவ மனசுக்குப் பிடிச்சவனோட வாழவிடுங்கன்னு கேட்டுக்கறேன்....''

அப்பா அடக்கமாட்டாத ஆத்திரத்தோடு எழுந்தார்.

''அப்படி ஏதாவது செய்தே.... கொலை விழும்டா.... ஒரு கொலை இல்லை மூணு கொலை.... உங்க மூணு பேரையும் கொன்னுட்டு நானும் தூக்குல தொங்குவேன்டா.... சொன்னால் சொன்னபடி செய்து காட்டுவேன்றது உங்க அத்தனைப் பேருக்கும் தெரியுமில்ல.... அதனால் பேசாமல் வாயை மூடிண்டு கல்யாண வேலை கவனியுங்க. என்ன....? புரியறதா....? அக்காவுக்கு உதவறதாக நினைச்சு குடும்பம் முழுசையும் அழிச்சுடாதே.... அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்.''

துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு போனார் அப்பா. அவர்போனபின் அம்மா சியாமைப் பார்த்தாள்.

''ஏன்டா பைத்தியக்காரத்தனமாக உளர்ற....? உன்னால் நடத்திவைக்க முடியுமாடா இந்தக்கல்யாணத்தை....?''

''முடியும்மா. முடிச்சுக் காட்டறேன். மாணவன் மனைத்தால் நடத்திக் காட்டுவான்மா....''



''ஏய்.... இதெல்லாம்] என்னடா அதிகப் பிரசங்கித்தனம்....? உன்னாலும் முடியாது. என்னாலும் முடியாது. சும்மா பேசாதே.... அந்த புரொபஸர்தான் திருட்டுத்தனமாக வந்து தாலி கட்டிவிடுவாரா....? எல்லாருக்கும் நல்லது சொல்லித்தந்து பாடம் நடத்தற வாத்தியார் இதுக்கு ஒத்துப்பாரான்றதை யோசிச்சுப் பார்க்க வேணாம்....?''

''ஏம்மா ஒத்துக்கமாட்டார்....? ஒத்துக்கணும். வந்து திவ்யாவைக் கல்யாணம் பண்ணிக்கணும்....''

''வரமாட்டார்டா.... அப்படியெல்லாம் ஒரு கல்யாணத்தை ஒரு புரொபசர் ஒரு போதும் பண்ணிக்கமாட்டார். அப்படி பண்ணிக்கிற மனுஷனும் திவ்யாவுக்கு வேணாம்....''

''சரி வேணாம். வேற என்னதான் செய்ய முடியும்....? இந்த நேரம்பார்த்து அந்த புரொபசர் ஊரிலும் இல்லாமத் போயிட்டார்....''

''ஊரில் இருந்தால் இவளை அவன்கூட ஓடிப் போயிடச் சொல்லுவியாடா....?''

சியாம் பேசாமல் இருந்தான்.

''எதெது எப்படி நடக்கணுமோ அதது அப்படி நடந்தே தீரும். நம்ம முயற்சியினால் எதுவும் நடக்காதுடா சியாம்....''

''ஆமாம்மா.... நீங்கள்ளாம் இப்படித்தான் சொல்லுவீங்க. இந்த வயசானவங்க கிட்டயே இதான் பிராப்ளம். எதுக்கெடுத்தாலும் வேதாந்தம் பேச ஆரம்பிச்சிடுவீங்க.... ஒரு வழியும் சொல்ல மாட்டீங்க....''

''என்ன வழிடா சொல்ல முடியும்....? இது என்ன சினிமாவாடா....? சட்டுனு ஒரு வழியைக் காட்டி முடிச்சுட....? அந்த மனுஷர் நார்த் டூர் போகாமல் இருந்தாலாவது ஒரு வழி கிடைச்சிருக்கும். உங்கப்பாகிட்ட நேராகப் பேசச் சொல்லியிருக்கலாம்.... அது நடக்கா

துன்றபோது வேற என்ன செய்ய முடியும்....? உங்கப்பா கிட்ட நீ பேசின மாதிரியெல்லாம் பேசினால் அவருக்கு இன்னும் கோபமும், வெறுப்பும்தான் வரும். திவ்யாவுக்குத் தெரியாதாடா....? தான் பிடிச்ச முயலுக்கு மூணே கால்னு சாதிக்கிற அப்பாகிட்ட இதெல்லாம் நடக்குமான்னு யோசிச்சுப் பார்த்திருக்க வேணாமா? இப்ப யாருக்குக் கஷ்டம்? எல்லாருக்கும் கஷ்டம். நம்ம கஷ்டம் இருக் கட்டும். இவளுடைய கஷ்டம் இருக்கட்டும். இவளாவது வேற வழி இல்லைன்னு அந்த நரேந்திரனைக் கல்யாணம் பண்ணிண்டு அமெரிக்கா போய் விடுவாள், அமெரிக்கா மாதிரி ஒரு இடத்துல, கொஞ்ச நாள்ல எல்லாமே மறந்து போயிடலாம்....''

''அம்மா....'' என்று குறுக்கிட்டுக் கத்தினாள் திவ்யா. ''என்னம்மா பேசற.... நானாவது என் பிரபுவை மறக்கிறதாவது....? இந்த ஜென்மத்துல இல்லம்மா....''

''இல்லடி.... நம்ம கோணத்துலேர்ந்து மட்டும் பார்த்துக்கிட்டிருக்கோமே.... அந்த புரொபசர் பாவம். அவருடைய நிலையை நினைச்சுப்பாரு. நீயாவது புது ஊர், புதுச் சூழ்நிலை, வித்தியாசமான மனுஷங்களுக்கிடையில் கொஞ்சமாவது மனசை திசை திருப்பிக்கலாம். ஆனால் அந்தப் புரொபசரோட நிலைமை அப்படி இல்லை. அவர் அதே காலேஜுக்குத்தான் வந்தாகணும். அதே மனுஷங்களைத்தான் பார்க்கணும், அதே வகுப்புக்குப் பாடம் எடுக்கணும். அப்படி எடுக்கிற போதெல்லாம் அந்த மனசு என்ன பாடுபடும்....?'' சீ! இந்தப் பெண்ணை நம்பி மனசைப் பறி கொடுத்துட்டு மானம், மரியாதை எல்லாத்தையும் இழந்துட்டோமேன்னு....' நினைக்க மாட்டார்....?''

''அம்மா.... அப்படியெல்லாம் சொல்லாதம்மா பிரபுவை அந்த நிலைமையில் என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியலைம்மா. அவருக்கு அதெல்லாம் நேரும்படி நான் விட்டுட மாட்டேன்மா....''



'உன் இஷ்டப்படி, ஆசைப்படி எல்லாம் நடக்கணும்னு தான் எனக்கும் இருக்கு திவ்யா...''

''இல்லம்மா.... நீ பொய் சொல்ற... நான் இந்த நரேந்திரனைக் கல்யாணம் பண்ணிக்கணும்ன்றதுதான் உன் ஆசை...''

''ஐயோ... ஏண்டி இப்படியெல்லாம் பேசற....நானும் ஒரு பொண்ணுடி.... பிடிக்காதவனைக் கல்யாணம் பண்ணிக் கிறதும், அவன் கூட வாழ்க்கை நடத்தறதும் எத்தனைப் பெரிய சங்கடமான விஷயம். கான்சர் மாதிரி கொஞ்சம் கொஞ்சமா மனசைக் கொல்ற விஷயம்ன்றது எனக்கும் தெரியும்டி....''

''அப்படி இருந்தால் அன்னிக்கு நீ ஏம்மா என்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அனுப்பலை. அனுப்பி இருந்தால் நான் பிரபுகிட்ட விஷயத்தைச் சொல்லிடுரைக் கான்சல் செய்ய வச்சிருப்பேன் இல்ல....? போகவிடாமல் தடுத்திருப்பேன் இல்ல....?''

''செய்திருக்கலாம். ஆனால் அன்னிக்கு அந்த நேரத்துல அப்படி அனுப்பறது சரியில்லைன்னு என் மனசுக்குத் தோணித்தே.''

''இனிமேல் அந்த சந்தர்ப்பம் வருமாம்மா....? நினைச்சுப்பாரு....''

''என்னை என்ன செய்யச் சொல்ற திவ்யா... முடிந்தால் அப்பாகிட்டே பேசி ஜெயிக்கப் பாரு. ஆனால் நரேந்திரன் வீட்டுக்குப்போய் அவன்கிட்ட சொல்லி அமர்க்களமெல்லாம் செய்தால் அப்பா சியாம்கிட்ட சொல்லிட்டுப் போனது ஞாபகம் இருக்கட்டும். அவர் கோபக்காரர். சுயநலக்காரர்ன்ற மாதிரி ரொம்ப மானஸ்தரும் கூட. சொன்ன வார்த்தை தவற மாட்டார். கடைசியில் இந்த வீட்டில் நாலு பிணங்கள் ஒன்றாக விழறதுதான் மிச்சம்.''

"ஐயோ.... என்னம்மா இப்படிச் சொல்ற...? எனக்கு வேற வழி எதுவும் தெரியலையேம்மா...."

"இத்தனை வருஷமாகப் பழகற அப்பாகிட்ட சாதிக்க முடியாததை ஒரு நிமிஷம் பெண் பார்த்துட்டுப்போன ஒரு புது மனுஷன்கிட்ட பேசி நடத்திக்கப் போறியா....? அப்படியே போய் அந்த நரேந்திரன் கிட்ட சொல்லி கல்யாணத்தை நிறுத்திட்டேன்னு வச்சுக்க மறுபடி இந்த வீட்டுப் பக்கமே வராதே.... அப்படியே எங்கேயாவது போய் விடு. இங்கே எங்களுக்கு என்ன ஆனாலும் ஆகட்டும். நீ ஒருத்தியாவது உயிரோட தப்பி மனசுக்குப் பிடிச்ச சந்தோஷ வாழ்க்கை வாழு...."

"ஏம்மா..., என்னை அத்தனை சுயநலம் பிடிச்ச ஜென்மமா நினைச்சே....? உங்களையெல்லாம் சாகடிச்சுட்டு என்னால் கல்யாணம் பண்ணிக்க முடியுமாம்மா...? பண்ணிண்டு நிம்மதியாக வாழத்தான் முடியுமா?... அது எப்படி முடியாதோ.... அதே மாதிரி நரேந்திரனைக் கல்யாணம் பண்ணிண்டு அவனோட வாழவும் முடியாது. புரொபசரை மறக்கறதுன்றது இந்த ஜன்மத்துக்கு நடக்காத காரியம். நான் என்னம்மா பண்ணுவேன்....? எனக்கு ஒரு வழியும் தெரியலையேம்மா...." என்று திவ்யா அம்மாவின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு கதறினபோது சடாரென்று சியாமிற்கு ஒரு எண்ணம் தோன்றியது.

"திவ்யா.... கவலைப்படாதே... ஒரே ஒரு வழி இருக்கு...." என்று முகமும், கண்களும் மலர சியாம் சொன்னபோது சடாரென்று தலையையுயர்த்தி அவனைப் பார்த்தாள் திவ்யா.

"என்னடா....?"—அவளுக்கு பதிலாக அம்மா கேட்டாள்...

## 4

திவ்யாவைப் பெண் பார்த்துவிட்டு வந்த நரேந்திரன் மிகவும் சந்தோஷமாக இருந்தான். உற்சாகமாக இருந்



தான், 'பெண்மை அழகொன்று வந்தது கண்டேன்....' என்கிற பாரதியின் பாடலை எப்போதும் முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அவளது பாதங்கள், வெள்ளைவெளேரென்று அல்லிமொட்டுக்களாகக் கூப்பிய கரங்கள், பளிச்சென்ற பிரகாசமான முகம், அடக்கமான தோற்றம், உயரமும், வாளிப்புமான உடல்வாகு என ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்துக் கொண்டான். மனதிற்குப் பூரண திருப்தியாக இருந்தது. இதுபோன்ற ஒரு பெண்ணிற்காகத்தான் ஏங்கிய ஏக்கம் வீண் போகவில்லை என்று நினைத்துக் கொண்டான். இத்தனை நாட்கள் வேறு எந்தப் பெண்ணையும் பிடிக்காமல், யாரையும் மனதால் வரிக்க முடியாத காரணத்தால் உடலாலும் வரிக்க இயலாமற் காத்திருந்த காத்திருத்தலுக்குப் பலன் கிடைத்து விட்டதில் பெருமிதப்பட்டுக் கொண்டான்.

மனது மிகவும் சந்தோஷமாக இருக்கிறபோது சிகரெட் பிடிப்பது பழக்கமானதால் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான். வீட்டு பால்கனியில் தனியாக நின்று சிகரெட்டைப் புகைத்தவாறே வானத்தை நிமிர்ந்து பார்த்தபோது சடாரென்று ஒரு எண்ணம் தோன்றிற்று. மனதை ஊசிநுனியால் கீறினமாதிரி மெலிதாயதோர் சந்தேகம் ஏற்பட்டது.

'ஆமாம்... அன்றைக்குப் பெண் பார்த்தபோது நான் தானே அவளைப் பார்வையை அகற்றாமல், அகற்ற முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். நான்தானே பேசினேன். நானாகத்தானே வலிய மிருதங்கம் வாசித்தேன்.... ஆனால் அவள் தலையை உயர்த்தி ஒரு தரம்கூட என்னைப் பார்க்கவில்லையே.... ஒரு வார்த்தை பேசவில்லையே.... என் மிருதங்க வாசிப்பைப் பாராட்டுகிறமாதிரி ஒரு புன்சிரிப்பு கூட இல்லையே.... தனியாக அவளிடம் ஒரு வார்த்தை பேசலாம் 'என்னைப் பிடித்திருக்கிறதா....?' என்று கேட்கலாமெனப் பார்த்தால் அதற்கும் அவளது அப்பா விடவில்லையே.... நல்ல கர்நாடகக் கிழம் அது....'

"சரி...அவனுக்கு நம்மைப் பிடித்திருக்கிறதா இல்லையா...?"

தெரியவில்லை அவனுக்கு. யோசித்து யோசித்து ஒன்றும் பிடிபடாமல் சிகரெட்டை அணைத்துப் போட்டுவிட்டு கீழே இறங்கி அம்மாவைத் தேடிக் கொண்டு போனான். வரவேற்பறை, சமையலறை, படுக்கையறை என்று தேடிவிட்டு தோட்டத்திற்குப் போனபோது அம்மாவும், அப்பாவும் புல்தரையில் இரண்டு நாற்காலிகளைப் போட்டு உட்கார்ந்திருந்தார்கள். பொறாமையும், பெருமையும் பட வேண்டிய தம்பதிகள் என்று நினைத்துக் கொண்டே அவர்கள் அருகில் போனான். அவனைப் பார்த்ததும் அப்பா தோட்டக்காரனிடம் சொல்லி இன்னொரு நாற்காலி கொண்டு வந்து போடச் சொன்னார். நாற்காலியில் உட்கார்ந்தவன் புன்னகையோடு பேசத் தொடங்கினான்.

"ஒரு நிமிஷத்துக்கு முன்னால் நான் உங்களைப் பற்றி என்ன நினைச்சேன் தெரியுமாம்மா....?"

"என்ன...?"—அவனுடைய அப்பா கேட்டார்.

"பொறாமையும், பெருமையும் பட வேண்டிய தம்பதிகன்னு நினைச்சுண்டேன்.."

அப்பா சந்தோஷமாகச் சிரித்தார்.

"உன்னையும், திவ்யாவையும் பார்த்து உன்னுடைய குழந்தைகள் கூட அப்படித்தாம்பா நினைச்சுக்கும்..." என்றாள் அம்மா.

அதைக் கேட்டு தலைகுனிந்தவாறு அவன் சற்று அமைதியாக இருப்பதைப் பார்த்து அம்மா கேட்டான்.

"என்னப்பா....என்னவோ மாதிரி இருக்கே....?"

"இல்லம்மா....எனக்குத் திடீர்னு ஒரு சந்தேகம் வந்துடுத்து...."

"என்ன சந்தேகம்?"



"அந்தப் பொண்ணு திவ்யா என்னைத் தலைநிமிர்ந்து கூடப் பார்க்கலையேம்மா...."

"பார்க்கலையா....? உனக்கு எப்படி அவள் பார்க்கலைன்னு தெரியும்...?"

"தெரியும். நான்தான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேனே...?"

"பார்க்காமல் இருந்திருக்கமாட்டாள். பார்த்திருப்பாள்ப்பா....கவனிச்சிருக்கமாட்டே...."

"இல்லைப்பா....அவள் என்னைப் பார்க்கலைப்பா.... எனக்கு நிச்சயமாகத் தெரியும்பா"

"அப்படியா சொல்றே?...."—அவனைப் ர ல அவனுடைய அப்பாவும் யோசனையில் ஆழ்ந்தார்.

"அம்மா அப்பாவுக்கு அடங்கின பொண்ணாக இருக்கும். அவங்க பார்த்தால் போறும்னு நினைச்சிருக்கும்...."

"என்னம்மா பேசறீங்க....எந்தக் காலத்தில இருக்கீங்க....? காலேஜ்ல எம். ஏ. படிக்கிற பொண்ணும்மா. அதுவும் கோ எஜுகேஷன் காலேஜ். அம்மா, அப்பா பார்த்தால் போறும்னு நினைக்குமா என்ன....?"

"அவளுடைய அப்பாதான் சொன்னாரப்பா.... நீ தனியாக அவளுடன் கொஞ்சம் பேசணும்னு சொன்னதற்கு எங்க பொண்ணை நாங்க அப்படியெல்லாம் வளர்க்கலைன்னு.... நீ கவனிக்கலையா....?"

"கவனிச்சேம்மா.... அதனால்தான் கவலைப்படறேன்...."

"அவர் இன்னும் அந்தக் காலத்து மனுஷனாகவேதான் இருக்கார். அவராலேயே தன்னை மாத்திக்க முடியலே...."

"அது சரி. அதற்காக அவருடைய பொண்ணு கஷ்டப்படணுமா என்ன....?"

"என்னப்பா கஷ்டம்....? நம்ம வீட்ல அந்தப் பொண்ணுக்கு என்ன கஷ்டம் இருக்கப் போறது....?"

"நம்ப வீட்டைப் பத்திச் சொல்லலைம்மா. அவங்க வீட்டைப் பத்தித்தான் பேசறேன். இந்த காலத்துல எந்தப் பொண்ணு....அதுவும் எம்.ஏ. படிக்கிற பொண்ணு... இப்படி அப்பாவுக்கு அடங்கிப் பேசாமல் இருக்கும்....?"

"இருக்கு பாரேன்...."

"இல்லம்மா....அங்கதான் ஏதோ தப்பு இருக்குன்னு எனக்குத் தோணறது...."

"உனக்கு ஏதாவது தோணும்டா....அதுவும் அமெரிக்காவுக்குப் போனதற்கப்புறம் எதற்கெடுத்தாலும் சந்தேகப் பட ஆரம்பிச்சுட்ட...."

"அம்மா....கொஞ்சம் புரிஞ்சுக்கோயேன்....சந்தேகம் அந்தப் பொண்ணு மேல இல்ல...."

"பின்ன....?"

"அவளுடைய அப்பா மேல. அவருடைய ஆதிக்கம் அந்த வீட்ல ரொம்ப அதிகமாக இருக்கும்னு படறது. அப்பாவானாலும் எந்த இடத்துல நிற்கணுமோ அங்க தான் நிற்கணும். எல்லை மீறக் கூடாது. ஆனால் அவ மற்ற எல்லார் சுதந்திரத்திலும் ரொம்ப அதிகமாகக் குறுக்கிடற மனிதராக இருப்பாரோன்னு தோணறது...."

"அப்படி அவர் தப்பாக எதுவும் சொல்லலையேப்பா...."

"இல்லம்மா.... நான் திவ்யாகிட்ட ஒரு அஞ்சு நிமிஷம் தனியாகப் பேசணும்னால் மறுத்திட்டாரே.... அவர் பொண்ணு வேணும்னால் அவருக்கு அடங்கி நடக்கலாம் நான் எதுக்காக அதற்குப் பணிஞ்சு போகணும்....?"

"பொண்ணு அவர் பொண்ணாயிற்றேப்பா...."

"என்னைப் பிடிச்சிருக்கான்னு நானே கேட்டு தெரிஞ்சுக்க நினைக்கிறது தப்பா....?"

"நமக்குத் தப்பில்லேப்பா.... ஆனால் அவங்களுக்குத் தப்பா இருக்கே.... முக்கியமா அந்தப் "பொண்ணோட அப்பாவுக்குத் தப்பா தெரியறதே...."



"என்னால் ஒரு பத்து நிமிஷம் பெண் பார்த்துட்டு ல்யாணம் பண்ணிக்க முடியாது...."

"என்ன சொல்ற நீ....? தாம்பூலம் மாற்றி கல்யாணத் தேதியெல்லாம் குறிச்சப்புறம் என்னப்பா பேச்சு இதெல்லாம்....?"

"இதோ பார் நரேன். உன் மனசுக்குள்ள திடீர்னு ஒரு போராட்டம் ஏற்பட்டிருக்குன்னு நினைக்கிறேன். னக்குப் பொண்ணைப் பிடிச்சிருக்கு. குத்துவிளக்காட்டம் அழகா இருக்கு. அவங்க குடும்பமும் நல்ல குடும்பம். காஞ்சம் கட்டுப்பெட்டியான அப்பா. அந்தக் கால னுஷர்ன்றதைத் தவிர வேற தப்பு சொல்ல முடியாது. அவருடைய கோணத்துலேர்ந்து பார்த்தால் அவர் சொல் றதும் சரியாகத்தான் இருக்கும். பொண்ணு உனக்குப் பொருத்தமாகப் பாந்தமாக இருக்கிறபோது பொண் ணோட அப்பாவைப் பற்றி ஏம்ப்பா கவலைப்படணும். சொல்லு...?"

"அந்த மனுஷனோட முகத்தைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கலேம்மா...."

"நீ பார்க்கப் போறது பொண்ணோட முகத்தை. அந்த மனுஷனைப் பற்றி என்ன....?"

"என்ன இருந்தாலும் மாமனாரையும் ஓரளவு பிடிக்கணுமில்ல....?"

"இதப்பாரு.... எல்லாரும் பொண்ணைப் பிடிக்கணும்னுதான் ஆசைப்படுவாங்க. நீ என்னடான்னால் மாமனாரையும் சேர்த்துப் பிடிக்கணும்னு சொல்ற....?"

"எனக்குத் தோணினதைச் சொன்னேன். அவ்வளவு தான்...."

"தோணறதுக்குக் கூட அளவு இருக்குப்பா. கல்யாண மானால் அவ நம்ம வீட்டுப் பொண்ணு. அதுக்கப்புறம் அவ அப்பாவைப் பற்றி என்ன கவலை....?"

''என் கவலை எல்லாம் திவ்யாவைப் பற்றிதா தாம்மா....''

''அவனைப் பற்றி என்ன கவலை....?''

''எனக்கு அவனைப் பிடிச்ச மாதிரி அவளுக்கும் என்னைப் பிடிச்சிருக்கான்னு நானே கேட்டுத் தெரிஞ்சுக்கணும்....''

''இது என்ன நரேன் பிடிவாதம்....?''

''அந்த மாதிரி அப்பாகிட்ட வளர்ந்ததால் ரொம்ப பயந்த சுபாவமாக இருக்கும் போல தோணறது. அதன் காரணமாகக் கூட அவள் தலை நிமிர்ந்து உன்னை நேரடியாகப் பார்க்காமல் இருக்கலாம். நான் வேணும்னால் ஒண்ணு செய்யறேன். நாளைக்கு சாதாரணமாக அவர்கள் வீட்டுக்குப் போகிற மாதிரி போய் அந்தப் பொண்ணு திவ்யாகிட்ட பேசிட்டு வந்துடறேன். என்ன...?''

''ஓ...தாங்க்யும்மா...ரொம்ப நல்ல ஐடியாம்மா....''

''அந்தப் பொண்ணு சரின்னு சொன்னால் உனக்கும் சரிதானே...?''

''ஏம்மா...கரும்பு தின்னக் கூலியா கேட்கப் போறேன்....?''

''இன்னும் பத்து நாள் பொறுத்துக்கோ...கரும்பு தின்னலாம்...'' என்று அம்மா சொன்னதும் பெண்களைப் போல் வெள்ளைவெளேரென்றிருந்த அவனது முகம் இயற்கையாகச் சிவந்து போக அதை மறைக்கத் தலை குனிந்து கொண்டான்.

''வெட்கத்தைப் பாரு.... பொம்பளைப் பிள்ளை மாதிரி.... எழுந்து சாப்பிடவா.... மணி எட்டாகப் போறது. அப்பா; பிள்ளை ரெண்டு பேரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டீங்கன்னால் சமையல்கார அம்மாவுக்கு சீக்கிரம் வேலையாகும். அவள் படுக்கப் போவாள்....''

''இதோ வந்துட்டோம் '' என்று அப்பாவும், பிள்ளை



யும் எழுந்துகொள்ள மூவரும் ஒன்றாக உள்ளே போனார்கள்......

மறுநாள் மாலை நரேந்திரனின் அம்மா கிளம்பி திவ்யாவின் வீட்டிற்குப் போனாள். சியாம்தான் கதவைத் திறந்தான்.

''வாங்க....'' என்றான்.

''அம்மா இருக்காங்களா....?''

''இருக்காங்க.... திவ்யா இன்னும் காலேஜ்லேருந்தே வரலை....''

''வரட்டும் வரட்டும். நான் இருந்து பார்த்துட்டே போறேன்...''

''அம்மா.... யார் வந்திருக்காங்க பாரு...'' சியாம் குரல் கொடுத்தான்.

அம்மா தோட்டத்துப் பக்கத்திலிருந்து எட்டிப் பார்த்தாள். நரேந்திரனின் அம்மாவைப் பார்த்ததும் கைவேலையைப் போட்டுவிட்டு புடவைத் தலைப்பில் ஈரக் கைகளைத் துடைத்துக் கொண்டு வந்தாள்.

''உட்காருங்க...'' என்று அம்மா உள்ளே போய் காபி கலந்து கொண்டுவந்து தந்தாள்.

''நீங்க....?''

''நான் இப்போதான் சாப்பிட்டேன்...''

''திவ்யா இன்னும் காலேஜ்லேருந்து வரலை போலிருக்கு...?''

''அவளுடைய அப்பாவும் கூடப் போயிருக்கார். டி.வி எல்லாம் வாங்கிண்டு வந்துடலாம். கல்யாணத்துக்கு இன்னும் பத்து நாள் கூட இல்லை. இனிமேல் எதுக்குக் காலேஜ் போகணும்னு முடிவு பண்ணியிருக்கா...''

''ஏன்... நாங்கதான் நேற்றைக்கே சொன்னோமே... எங்க பையன் கூட 'நீ அங்க வந்து மேல படிக்கிறதானா

லும் படிக்கலாம். இல்லை, வேலைக்குப் போக ஆசைப் பட்டாலும் செய்யலாம்னு சொன்னானே...''

''அதெல்லாம் உங்ககிட்ட வந்தப்புறம்தானே... இங்கே அவனுடைய அப்பா கல்யாணத்துக்குப் பத்து நாள் கூட இல்லை. காலேஜுக்கெல்லாம் போய் அலைஞ்சுண்டு இருக்க வேணாம். வீட்ல இருந்து ரெஸ்ட் எடுத்துண்டு உடம்பை கவனிச்சுக்கன்னுட்டார்...''

''கல்யாணத்துக்காக எதுக்குக் காலேஜை விடணும். கல்யாணமானாலும் விசா கிடைச்சுத்தானே அவள் அமெரிக்கா போக முடியும். விசா கிடைக்கிறதுதான் கஷ்டமாக இருக்கே... அது வரை காலேஜ் போயிண்டிருக்கலாமே...?''

''இருக்கலாம்தான்... என்னவோ அப்பா வேண்டாம்னுட்டார். அவளும் சரின்னு தலையாட்டிட்டா...''

''அப்பா எது சொன்னாலும் சரின்னுடுவாளா...?''

''வேற வழி...?'' சட்டென்று வார்த்தைகள் வெளி வந்ததும்தான் சடாரென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள் கல்யாணியம்மாள். சொல்லக் கூடாததைச் சொல்லி விட்ட பாவனையில் முகம் கோணிற்று.

''அப்படியானால் இந்தக் கல்யாணம் கூட அப்பாவின் இஷ்டம்தானா... இல்லை, பொண்ணுக்கும் இஷ்டமிருக்கான்றதைத் தெரிஞ்சுண்டு போகலாம்னுதான் முக்கியமாக வந்தேன்...''

''ஏன் அப்படிக் கேட்கறீங்க...? திவ்யாவுக்கும் இதுல முழு திருப்தி இருக்கவேதான் நாங்களே சம்மதிச்சோம். பத்து நாள்ல கல்யாணம், திடீர்னு அம்மா அப்பாவை விட்டுப் பிரியணும்னால் எல்லாப் பொண்ணுங்களுக்கும் ஏற்படக் கூடிய வருத்தம் இவளுக்கும் ஏற்பட்டிருக்கு... அவ்வளவுதான்''

''அவ்வளவு தானே... என் பிள்ளை என்னவோ ஏதோன்னு பயந்துட்டான். நாமெல்லாம் கூட கல்யாண



மாகி பிறந்த வீட்டைவிட்டுப் பிரிஞ்சு வர்றப்போ அழலையா என்ன...? யாருக்கும் தெரியக் கூடாதேன்னு குளிக்கிற ரூமுக்குள்ள போய் கதவைப் போட்டுண்டு ஓன்னு அழுதிருக்கேன் நான். கிட்டத்தட்ட ஒரு மாசம் ஆச்சு. அந்த துக்கமும் பிரிவும் அடங்க... அதுக்கப்புறம் கொஞ்சம் கொஞ்சமாகச் சரியாகலையா...? அந்த மாதிரி திவ்யாவும் சரியாயிடுவா...''

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்...'' என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள் இந்த அம்மாள். கால் வினாடி மௌனத்திற்குப் பின்னர் என்ன தோன்றியதோ அந்த அம்மாவே பேச ஆரம்பித்தாள்

''உங்க பொண்ணைப் பற்றின கவலையை விடுங்க எனக்குப் பெண் இல்லை. இவளைப் பொண்ணாக பாவிச்சு நடத்துவேன் எங்க வீட்ல அவளுக்கு ஒரு குறை இருக்காது. நரேந்திரனும் அப்படித்தான். ரொம்ப அன்பானவன் மென்மையானவன். உங்க பொண்ணை ரொம்ப நன்றாக வச்சுப்பான். அவனுக்கு ரொம்ப பிடிச்சுப் போ—''

அந்தம்மாள் முடிக்கும் முன்பு திவ்யா வந்தாள் நடையில் செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே வந்த போது நரேந்திரனின் அம்மா அவளைப் பார்த்து மிகவும் இதமாகப் புன்னகைத்தாள்.

''வாம்மா...''

பதிலுக்கு திவ்யாவும் புன்னகை செய்துகொண்டே கேட்டாள்.

''எப்போ வந்தீங்க...?''

''இப்பத்தாம்மா வந்தேன்...''

''ஒரு நிமிஷம். உள்ள போய் முகம் கழுவிப் பொட்டிட்டு, புடவை மாற்றிண்டு வந்துடறேன்...''

"மெதுவாக வாம்மா... எனக்கொன்னும் அவசர மில்லை..."

திவ்யா உள்ளே போனபோது கூடவே கல்யாணி யம்மாளும் எழுந்து போனாள். மெலிதான குரலில் கிசுகிசுக்கிற மாதிரி பேசினாள்.

"திவ்யா.. அந்தம்மா இப்போ எதுக்கு வந்திருக்காங் கன்னு தெரியலை. என் பிள்ளையை உங்க பொண்ணு பிடிச்சுத்தானே கல்யாணம பண்ணிக்கிறான்னு கேட் டாங்க"

"உடனே நீ இல்லைன்னு சொல்ல வேண்டியது தானேம்மா...?"

"அதெப்படி சொல்ல முடியும்...? இது என்ன சூறைத் தேங்காய் உடைக்கிற விஷயமா...? பட்டுன்னு போட்டு உடைக்க? என்னடி விளையாடற...."

"அப்போ, என்னைக் கேட்டாங்கன்னால் நான் சொல்லிடறேன்..."

"வேணாம் திவ்யா, உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கறேன். அந்த மாதிரியெல்லாம் ஒண்ணும் பேசிடாதே. கொஞ்சம்பொறுமையா இரு... பார்த்துக்கலாம்.. ?"

"எது வரை பொறுமையாக இருக்கச் சொல்ற... கல்யாணமாகி கழுத்தில் தாலி கட்டி முடிச்சு நான் அவன் பொண்டாட்டியாகிற வரைக்குமா....?"

"என்னடீ இது....அவன் இவன்னு பேசற....?"

"வேற எப்படிப் பேசணும்னு எதிர்பார்க்கற....? அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூட எனக்கு இஷ்டமில்லை'

"சரி....இப்படியே பேசிண்டிருக்காதே..சீக்கிரம் டிரஸ் பண்ணிண்டு வா. அந்தம்மா காத்துண்டிருக்காங்க பாரு."

"வரேன்....நீபோ...."



"உனக்கிருக்கிற வெறுப்புல ஏனோ தானோன்னு டிரஸ் பண்ணிண்டுடப் போற....? நன்னாவே பண்ணிண்டு வா...."

"வரேம்மா...." என்ற சலிப்பான குரலில் திவ்யா விடமிருந்து பதில் வந்ததும்தான் அந்தம்மாள் வெளியில் வந்தாள்.

முகம் கழுவி, வேறு புடவை மாற்றி, தலையை லேசாக அப்படியே வாரி, பவுடர் கூடப் பூசாமல் புருவங் களுக்கு மத்தியில் சின்னதாக மிளகு அளவிற்குக் கருப்புச் சாந்தில் பொட்டு வைத்துக் கொண்டு அறையைவிட்டு வெளியில் வந்த போது அம்மா அவளிடம் இரண்டு காப்பி டம்ளர்களை நீட்டினாள்.

"நீ ஒண்ணு எடுத்துண்டு அந்தம்மாகிட்ட ஒண்ணு கொடு...."

காப்பி டம்ளர்கள் நின்ற சின்னத்தட்டோடு அவள் மீண்டும் வரவேற்பறைக்கு வந்தாள். அந்த அம்மாளிடம் காப்பி டம்ளரை நீட்டியபோது "இன்னொரு காப்பியா..?" என்று வாங்கிக் கொண்டு "உனக்கு...." என அவள் முகத் தைப் பார்த்தாள்.

"இதோ இருக்கு...."

"உட்காரும்மா....முதல்ல காப்பியை சாப்பிடு. அப்புறம் பேசலாம்....காலேஜ்லேருந்து களைச்சுப் போய் வந் திருப்பே...."

"அதெல்லாம் ஒன்றுமில்லை...." என்று புன்னகைக்க முயன்றவாறு திவ்யா காப்பி குடித்து முடித்தாள். அந்தம் மாவும் குடித்து முடித்ததும் டம்ளர்களை உள்ளே போய் வைத்துவிட்டுத் தன் அம்மாவிடம் சென்னாள்.

"நீயும் வாம்மா....இல்லைன்னால் என்னையும் மீறி நான் உண்மை எல்லாத்தையும் சொல்லிடுவேன். அப் புறம் என்னைத் திட்டி பிரயோசனமில்லை...."

அம்மா கைக்காரியத்தை அப்படியே போட்டுவிட்டு வந்தாள். அவளுடனேயே உட்கார்ந்து கொண்டாள். அதைப் பார்த்து நரேந்திரனின் அம்மா கேட்டாள்.

"அம்மா திவ்யா... அம்மாவோ, அப்பாவோ பக்கத்துல இல்லாமல் நீ பேசவேமாட்டியா? காலேஜ் படிக்கிற பொண்ணு இப்படி பயப்படலாமா?..."

திவ்யா அதற்கு பதில் சொல்லாமல் புன்னகைக்க முயலவே அந்தம்மாள் விடாமற் பேச்சைத் தொடர்ந்தாள்

"இன்னும் பத்து நாள்தானே இருக்கு... அதற்கப்புறம் அம்மா, அப்பாவைவிட்டுப் பிரிஞ்சுத்தானே ஆகணும்...? அப்போ என்ன செய்வே....?"

அந்நிலை சிரிப்பை பதிலாக வழங்க முயல அவளின் அம்மா உதவிக்கு வந்தாள்.

"நாமெல்லாம் எப்படி அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டமோ அதே மாதிரி அவளும் பண்ணிப்பா...."

"அப்படியா.... பண்ணிப்பாயா திவ்யா....? எல்லாத்தையும் அலட்பமாக எடுத்துண்டு அட்ஜஸ்ட் பண்ணிக்கிற 'நாணல்' குணம் உனக்கு உண்டா....?"

அதற்கும் திவ்யா சிரிக்கவே அந்தம்மாள் சற்று தீவிர முகபாவனையுடன் பேசத் துவங்கினாள்.

"இதப்பாரு.... இப்படி எல்லாத்துக்கும் சிரிச்சால் எப்படி....? வாயைத் திறந்து பதில் சொல்லும்மா...."

"என்ன சொல்லச் சொல்றீங்க....?"

"நான் என்ன கேட்க வந்தேனோ அதை பளிச்சுனு வெளிப்படையாகக் கேட்டுடட்டுமா....?"

திவ்யா அம்மாவின் முகத்தைப் பார்த்து தயங்கிக் கொண்டே "கேளுங்க...." என்றாள்.

 

"என் பையனுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. அதே மாதிரி உனக்கும் அவனைப் பிடிச்சிருக்கான்னு தெரிஞ்சுக்க ஆசைப்படறான். அதைக் கேட்கத்தான் அவ னிக்கு உன்கிட்ட தனியாகப் பேசணும்னு சொன்னான். அதற்கு உங்கப்பா விடலை.... அதைத் தெரிஞ்சுக்கிறவரை அவனுக்கும் மனசு சரியாக இருக்காது போல இருந்தது. அதனால்தான் நானே கிளம்பி வந்தேன். உன்னைப்பார்த்து கேட்டுத் தெரிஞ்சுக்கணும்னு வந்திருக்கேன். சொல்லும்மா எங்க நரேந்திரனை உனக்குப் பிடிச்சிருக்கா....? உனக்கு ஏற்றவனாக இருப்பான்னு நினைக்கறியா? எங்களையெல்லாம் பிடிச்சிருக்கா....? எங்களைக்கூட விட்டுத்தள்ளு.... நீ என்ன கூடவா இருக்கப் போற....? எம் பையனைப் பிடிச்சால் போதும். அவன் கூட சந்தோஷமாக வாழ்வேன்ற நம்பிக்கை இருந்தால் போதும். இருக்காம்மா உனக்கு....? எம் பையனைப் பிடிச்சிருக்கா...!"

அதற்கு அவள் பதில் சொல்லும் முன் வரவேற்பறையின் கதவருகிலிருந்து கனீரென்று குரல் வந்தது.

"ஏம்மா... பிடிக்காமலா நிச்சயம் பண்ணி தேதி வரை குறிச்சு அலைஞ்சுண்டு இருக்கோம்....?"

மூவரும் தூக்கி வாரிப் போட்ட மாதிரி திரும்பிப் பார்த்தார்கள்! நிலைப்படியில் ஒரு கையும் இடுப்பில் இன்னொரு கையுமாக அப்பா நின்று கொண்டிருந்தார். முகம் ஜிவு ஜிவுவென்று கோபத்தைக் காட்டினாலும் வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகை உதட்டில் மிதந்தது.

அப்பாவைப் பார்த்ததும் மூவரும் சடாரென்று எழுந்து நின்றனர். திரைப்படங்களில் வருகின்ற விசு பாணியில் அப்பா கையமர்த்தி உட்காரச் சொன்னார். அதே பாணியில் உள்ளே வந்து பேசவும் ஆரம்பித்தார்.

"ஏம்மா.... திடீர்னு ஏன் இப்படி வந்து கேட்கறீங்க....? அதுக்குத் தானாகப் பதில் சொல்ற அளவுக்குக்கூட திவ்யாவை நாங்க வளர்க்கலை. இன்னும் நீங்க வற்புறுத்தி

கேட்டிருந்தீங்கன்னால் 'எனக்கு என்ன தெரியும்....? எங்கப்பா அம்மா பார்த்து எது செய்தாலும் சரின்னு சொல்லியிருக்கப் போறா.... என்ன திவ்யா.... அதைத் தானே சொல்லியிருப்ப.... சொல்லு அந்தம்மாகிட்ட.... நீயே வாய் திறந்து பேசு. அப்பா அம்மா கிழிச்ச கோட்டைத் தாண்டாத பொண்ணுன்னு அவங்க தெரிஞ்சுக்கட்டும்...."

"அதுக்கில்லைங்க... வந்து.... என் பையன் தான்...."

"வீணாக மாப்பிள்ளை மனசைப் போட்டு அலட்டிக்கறார்னு நினைக்கிறேன். அவர் அமெரிக்காவை நினைச்சுண்டு இங்க பேசறார். இது இந்தியா. அதுலயும் சௌத் இந்தியா.... நாங்கள்ளாம் தஞ்சாவூர் ஜில்லா.... பொண்ணை எப்படி வளர்த்திருப்போம்னு நீங்க புரிஞ்சுக்கணும். அவருக்குப் புரியலைன்னாலும் உங்களுக்குப் புரிஞ்சிருக்குமே....?"

"அதுசரி... எனக்கு மட்டும் புரிஞ்சாப் போதுமா.... வாழப் போறது அவங்க ரெண்டு பேரும்தானே....?"

"யார் இல்லைன்னு சொன்னது....? உங்க பிள்ளைக்கு என் பொண்ணைப் பிடிச்சிருக்குன்னு நீங்க சொல்ற மாதிரி நானும் சொல்றேன். என் பொண்ணுக்கும் உங்க பிள்ளையை ரொம்பப் பிடிச்சிருக்கு...."

பெண்ணின் எதிரில் அப்பா சொன்னதும், அதை ஏற்றுக்கொள்கிற, அல்லது ஒப்புக்கொள்கிற விதமாகத் திவ்யா தலைகவிழ்ந்து பேசாமல் இருந்ததும் மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று எடுத்துக்கொண்ட அந்த அம்மாள் முகம் பளிச்சென்று மலர மிகுந்த சந்தோஷத்துடன் சொன்னாள்.

"இது போதும் எங்களுக்கு.... இதற்காகத்தான் ஓடிவந்தேன்...."



அப்பாவும் முக இறுக்கமும், ஜிவு ஜிவுப்பும் தளர்ந்து சற்று நிதானமடைந்தவராக வந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டார். தோளில் கிடந்த துண்டால் முகத்தையும், கழுத்தடியையும் துடைத்துக் கொண்டே வெகு இயல்பாகப் பேசினார்.

'அப்பா.... என்ன நடிப்பு.... சிவாஜி, மேஜர் சுந்தரராஜன், வி.கே எல்லாம் அப்பாவின் இந்த நடிப்பிற்கு முன்பு தோற்றுப் போய் விடுவார்கள்....' என நினைத்துக் கொண்டாள் திவ்யா. உடனே அந்த இடத்தைவிட்டு எழுந்து போய்விட வேண்டும் போன்றதொரு எரிச்சல் ஏற்பட்டது. மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"புடவைகள் எல்லாம் செலக்ட் பண்ண நல்லிக்குக் கிளம்பறதாக இருந்தோம். நீங்க வந்துட்டீங்க..." என்று அப்பா பொய் சொன்னார்.

"நான் வந்தால் உங்க காரியம் தடைபட்டுப் போயி டுத்துன்னு இருக்க வேணாம். இன்னிக்கு நல்ல நாள் என் றால் இன்னிக்கே போய் வாங்கிடுங்க.... என்கூட வந்தால் நான் வீட்ல இறங்கிண்டு காரை உங்களுக்கு அனுப்பறேன். எல்லாம் வாங்கி முடிச்சு ராத்திரி காரைத் திருப்பி அனுப்பி னால் போதும்...."

"வேணாம்மா... எதுக்கு...? கல்யாணத்துக்கு முன்னால் இதெல்லாம் வேணாம். தெருக் கோடிக்குப் போனால் ஆட்டோ கிடைக்கிறது. வச்சுண்டு போயிடுவோம்...."

"அப்ப சரி.... நான் கிளம்பறேன்..." என்று அந்த அம்மாள் எழுந்து நிற்கதும் அப்பாவும் எழுந்துகொண்டு சொன்னார்.

"ஒரு முக்கியமான விஷயம் கேட்கணும்னு தானே உங்க வீட்டுக்கு வர நினைச்சேன்...."

"சொல்லுங்க....?"

''எத்தனை சவரன் நகை எதிர் பார்க்கறீங்க, வெள்ளிப் பாத்திர எடை எவ்வளவு, மாப்பிள்ளை அழைப்பு டிரஸ்ஸுக்கு என்ன தரணும்.... இதுபோன்ற எதையும் நீங்க அன்னிக்கு சொல்லலை....''

அந்த அம்மாள் புன் சிரிப்புடனே சற்று பெருமிதம் கலந்த குரலில் சொன்னாள்.

''அன்னிக்கு மட்டுமில்லை... என்னிக்கும் சொல்ல மாட்டோம். உங்க பொண்ணுக்கு எது செய்யறதும் உங்க இஷ்டம். மாப்பிள்ளை அழைப்புக்கெல்லாம் என் பையன் ஒத்துக்க மாட்டான்னு நினைக்கிறேன். எதுக்கும் கேட்டுச் சொல்லிடறேன். அவன்கிட்ட ஏராளமான டிரஸ் இருக்கு. ஸூட்லயே பத்துப் பதினைஞ்சு வகை வச்சுண்டிருக்கான். இப்போ அமெரிக்காவிலிருந்து வந்தபோதும் நிறைய கொண்டு வந்திருக்கான். அதனால் டிரஸ்ஸுக்குப் பணமெல்லாம் தந்து எங்களை அவமானப் படுத்தாதீங்க... உங்க பொண்ணுக்கு எது வேணுமோ உங்களுக்கு எதெல்லாம் செய்யணும்னு தோணறதோ செய்யுங்க... அதை நாங்க தடுக்கலை. வேணாம்னு சொல்லலை. பார்க்கப் போனால் அதுகூட இல்லாமல்தான் நரேன் கல்யாணம் பண்ணிக்க இஷ்டப்படுவான். நான் ஒரு அம்மா, பெற்ற மனசு புரிஞ்சதால் சொல்றேன். பிரியப்பட்டு, ஆசையா எது செய்யறீங்களோ செய்யுங்க....''

அந்த பதிலில் அப்பா சற்று உணர்ச்சி வசப்பட்டுப் போனார்.

''இந்தக் காலத்துல... இப்படியும் ஒரு பிள்ளையைப் பெற்றவங்க இருப்பாளான்னு சந்தேகமாக இருக்கு...''

''இந்தக் காலத்துல மட்டுமில்ல. எந்தக் காலத்துலயும் பிள்ளையைப் பெற்றவங்க இப்படித்தான் இருக்கணும், நடந்துக்கணும். சுயமாக சம்பாதிக்க சக்தியற்ற முதுகெலும்பு இல்லாத கோழைதான் தனக்குப் பெண்டாட்

 

டியாக வரப்போகிறவள்கிட்டேயிருந்து நகையும், பணமும் வெள்ளிப்பாத்திரங்களும் எதிர்பார்ப்பான்...''

''இப்போ கலர் டி. வி, ஸ்கூட்டர், வி. சி. ஆர், மிக்ஸி, மாவு கிரைண்டர், பிரிட்ஜ், எல்லாத்தையுமில்ல கேட்கறா...''

''சீ! மானம் கெட்ட ஜென்மங்கள். சுயமாக உழைச்சு வாங்க துப்பு கெட்ட பசங்க.... இப்படி கேட்கிறவங்களையெல்லாம் 'கெட் அவுட்'னு நாலு இடத்துல பெண்ணைப் பெற்றவங்க அடிச்சு விரட்டினாங்கன்னால் அந்த அவமானத்துலயாவது புத்திவரும்.... எங்கே அப்படிச் செய்யறாங்க.... பெண்ணைப் பெற்றுட்டாலே கடனைப் பெற்ற மாதிரியில்ல கதிகலங்கி நிக்கறாங்க....''

''உங்களுக்குப் பெண் இல்லை. அதனால் ரொம்ப சுலபமாகச் சொல்லிட்டீங்க....''

''பெண் இருந்திருந்தாலும் இதையேதான் சொல்லியிருப்பேன். உங்களை மாதிரி என்ன செய்யணும்னு கேட்டிருக்க மாட்டேன். முக்கியமாக நீங்க தில்யாவை வளர்த்திருக்கிற மாதிரி பயந்தாங்கொள்ளியாக, அம்மா, அப்பா, பெண்ணாக வளர்த்திருக்க மாட்டேன். சுதந்திரமாக அவ சுயகால்ல நிற்கிற மாதிரியான தைரியத்தோடு வளர்த்திருப்பேன். உங்க வீட்ல இப்படி கட்டுப் பெட்டியாக வளர்த்துட்டீங்க. இதே தில்யா எங்க வீட்டுக்கு வரட்டும். 'நம்ம தில்யாதானா இவள்...?'னு ஆச்சரியப்படற அளவுக்கு மாறிடுவாள். மாற்றிக் காட்டறோம் பாருங்க.... அப்ப சரி.... நான் கிளம்பறேன்.... நின்னால் பேசிண்டே இருக்கத் தோணும், நீங்களும் கடைக்குப் போகணும்னீங்க... வரட்டுமா...?''

''ஒரு நிமிஷம்.'' என்று அம்மா பூஜை அறைக்கு ஓடிப் போய் குங்குமச்சிமிழைத் திறந்து கொண்டு வந்து நீட்டினாள். நல்ல கறுத்த ஊதா நிறக் குங்குமத்தை எடுத்து நெற்றியில் பெரிய பொட்டாக இட்டுக் கொண்டு

"'வரேன்'' எனப் பொதுவாகச் சொல்லி பின்னர் திவ்யாவை நெருங்கி அவளது கன்னத்தை மிகுந்தவாஞ்சையுடன் தட்டிக் கொடுத்தவாறு சொன்னாள்.

''வரட்டுமா திவ்யா... என் பிள்ளைக்கு என்ன சேதி...?''

திவ்யா தலைகுனிந்து கொள்ள, அந்த அம்மாள் ''வெட்கத்தைப்பாரு...'' என்று விட்டு கார்வரை அவர்கள் வழியனுப்ப வர காரில்ஏறி மிகக் கம்பீரமாகவும், உற்சாகத்துடனும் கிளம்பிப் போனார்....

## 5

ஒவ்வொரு நாளாக விடிந்து மறைந்து கல்யாணத் தேதி நெருங்க நெருங்க திவ்யாவிற்குக்கொஞ்சம் இருந்த நம்பிக்கையும் குறையத் தொடங்கிற்று. இனி இந்தக் கல்யாணத்தை நிறுத்த வழியே இல்லையோ என்று தோன்றிற்று. அன்று சியாம் 'இதுக்கு ஒரே ஒரு வழி இருக்கு!'' என்று சந்தோஷமாக மலர்ந்த முகத்தோடு சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

''அக்கா... உன் கிளாஸ்ல உன் கூடப் படிக்கிறவங்களுக்கெல்லாம் உன்னையும் புரொபசரையும் பற்றி தெரியுமில்லை....?''

''கொஞ்சம் பேருக்குத்தான் தெரியும்.''

''அந்தக் கொஞ்சம் பேர்கிட்ட போய் சொல்லேன். அவங்க ஐடியாவைக் கேளேன், இந்த விஷயத்துல எல்லாம் பிரெண்ட்ஸ் உதவறமாதிரி வேற யாரும் உதவ முடியாது. உதவ மாட்டாங்க...''

''ஆனால் இது தெரிஞ்ச அந்தக் கொஞ்சம் பேர்கூட அவரோட டூர் போயிருக்காங்களேடா சியாம்....''

'டூர் போகாத பிரெண்ட்ஸ் யாருமே கிடையாதா...?'



''ஒருத்தர் ரெண்டுபேர் இருப்பாங்க....''

''அவங்க கிட்ட போய் யோசனை கேள்...''

திவ்யா தயங்கினாள்.

''ஏன் தயங்கற....? வேற வழி இல்லை....? வேணும்னால் இன்னொன்றும் செய்யலாம்....

''என்ன....?''

''உங்க காலேஜ் டூர் புரோக்கிராம் ஷீட் இருந்தால் வாங்கிண்டு வா. நாளைக்கு எந்த ஊர்ல எங்க தங்கறாங்கன்னு தெரிஞ்சதுன்னால் நான் உங்க புரொபசருக்கு உடனே ஒரு தந்தி கொடுக்கிறேன். 'மிக மிக அவசரம். உடனே புறப்பட்டு வரவும்.' என்று அடிக்கிறேன். முடிந்தால் ரயிலில் வராமல் பிளேனிலேயே வரச் சொல்கிறேன்....''

அது நல்ல திட்டமாகத் தோன்றியது திவ்யாவிற்கு சியாமையும் அழைத்துக் கொண்டு கல்லூரிக்கு ஓடினாள் யார் யாரிடமோ கேட்டு புரோக்கிராம் ஷீட் வாங்கினாள் அதை சியாமிடம் கொடுத்து அன்று பிரபுராம் எங்கே தங்கியிருப்பான் என்பதைக் குறித்துக் கொடுத்து ஒரிஸாவிற்குத் தந்தியடிக்கச் சொன்னாள். ''உடனே கிளம்பி வரச்சொல்லு சியாம். கீழே என் பெயர் கொடு. உன் பெயரைக் கொடுத்தால் அவருக்குத் தெரியாமல் போகலாம் '' என்றாள்.

சியாம் கிளம்பினதும் எக்ஸ்கர்ஷனுக்குப் போகாத சில மாணவர்களைச் சந்தித்து விஷயத்தைச் சொன்னாள். அதற்கு அவர்கள் கேட்ட முதல் கேள்வியே ''நீ கல்யாணத்திற்கு சம்மதித்துவிட்டாயா....?'' என்பதுதான்.

அவள் பதில் சொல்லத் தயங்கினாள்.

''என்ன திவ்யா பேசாமல் இருக்கே....அப்படியானால் சம்மதித்துவிட்டதாக அர்த்தமா...?'' என்று கோபப்பட்டான் கருணாகரன்

திவ்யா அழுது கொண்டே சொன்னாள்.

"என் அப்பாகிட்ட சொல்லிப் பார்த்தேன் கருணா. அவர்கிட்ட எதைச் சொல்லியும் பலனில்லை. இந்தக் கல்யாணத்தை நிறுத்தினால் எங்களையெல்லாம் கொன்னுட்டு தானும் தற்கொலை செய்துப்பேன்னு பயமுறுத்தறார் அவர்..."

"சொல்றவன் சொல்லிட்டு கொலை செய்யமாட்டான் திவ்யா. குலைக்கிற நாய் கடிக்காதுன்னு நீ கேள்விப்பட்ட தில்லை....? உங்கப்பா சும்மா பயமுறுத்தறார்..."

"இல்லை கருணா...உனக்கு எங்கப்பாவைப் பத்தி தெரியாது. சொன்னால் செய்யக்கூடியவர் அவர்..."

"அவரைப் பத்தி இவ்வளவும் தெரிஞ்சுக்கிட்டிருக்க இல்ல...அப்புறம் ஏன் காதலிச்ச....? காதலிக்கறதுக்கு முன்னால் ஏன் அப்பா ஞாபகம் வரலை...?"

"ப்ளீஸ் கருணா....நானே ரொம்ப நொந்து வந்திருக்கேன். இப்படியெல்லாம் பேசி இன்னும் வேற கஷ்டப்படுத்தாதே"

"உன்னை மாதிரி கோழையெல்லாம் காதலிக்கக் கூடாது. பாவம் புரொபசர், ரொம்ப நல்லவர். அவரைப் போய்—"

"டேய் கருணா... அவளே அழுதுக்கிட்டு நாம் வழி சொல்லுவோம்னு வந்திருக்கா. அவளுக்கு ஆறுதல் சொல்றதை விட்டுட்டு இதெல்லாம் என்னடா பேச்சு...?"— பாஸ்கர் அதட்டினான்.

"இதப்பாரு பாஸ்கர். கையாலாகாத உருப்படி. இல்லாத வெறும் வாய் வார்த்தையாக ஆறுதல் சொல்றதுலே என்ன பிரயோசனம் சொல்லு...? புரொபசர் வேற ஊர்ல இல்லை. கல்யாணத்துக்கு இன்னும் நாலே நாள் இருக்கிற போது 'சொல்றாளே....இதை முன்னாலேயே சொல்லியிருக்கலாம் இல்ல...?"



"எனக்குத் தோணலை....என் தம்பிதான் உங்ககிட்ட சொல்லலாம்னு ஐடியா கொடுத்தான்..."

"உன் தம்பிக்கு இருக்கிற மூளை உனக்கு இல்லை... சரி...உன் தம்பி எங்கே இப்போ?...."

"தந்தி கொடுக்கப் போயிருக்கான்..."

"யாருக்கு?"

"புரொபசருக்கு...."

"எங்கே இருப்பார்னு தந்தி கொடுக்கச் சொன்ன?"

"புரோக்கிராம் ஷீட் பார்த்து ஒரிஸ்ஸாவுக்குக் கொடுக்கச் சொல்லியிருக்கேன்...."

"போன இடத்துல புரோக்கிராம்படிதான் இருப்பாங் கன்ற நிச்சயமில்லை திவ்யா. நம்ம ஊர் தந்தி பத்திதான் தெரியுமே.... தந்தி போறதுக்குள்ள அவங்க கிளம்பி வேற எங்கேயாவது போயிருந்தால் என்ன செய்யறது....?"

"என்ன செய்யறதுன்றது புரியாமல்தானே உங்ககிட்ட ஓடி வந்திருக்கேன்...."

"நான் ஒண்ணு சொல்லட்டுமா திவ்யா....?"

"சொல்லு தினேஷ்...."

"பேசாமல் புரொபசர் திரும்பி வரும்வரை எங்ககூட தங்கிடு...."

"ஐயயோ...." என்று பதறினாள் திவ்யா!

"ஏன்....?"

"அவ்வளவுதான். என்னைக் காணலைன்னு உடனே எங்கப்பா எங்கம்மாவை அடிச்சே கொன்னுடுவார்.... ஏற்கெனவே பொண்ணை வளர்த்திருக்கிற லட்சணத்தைப் பாருன்னு ஒரு நாளைக்கு நூறு தரமாவது அம்மாவைக் கொட்டறார்...."

''பின்னே என்னதான் செய்யச் சொல்ற....? அந்த நரேந்திரனின் விலாசத்தைக் கொடு.... நாங்க போய் அவன்கிட்ட விவரம் முழுசையும் சொல்றோம்....''

''நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன் இல்ல.... அந்தக் கல்யாணத்தை நிறுத்தினால் அப்பா என்ன செய்வார்னு....?''

''என்ன திவ்யா இது....? இப்படி எல்லாத்துக்கும் பயந்தால் எப்படி...? துணிஞ்சு எதையாவது செய்யணுமில்ல...?''

''என்ன செய்யறதுன்னு புரியலை. நான் துணிஞ்சு எதைச் செய்தாலும் அது அம்மாவை பாதிக்கும், என் தம்பியை பாதிக்குமேன்னுதான் பயப்படறேன். வேற எதுக்குமில்லை. எனக்காகப் பாவம், அவங்க அப்பாகிட்ட கஷ்டப்படக் கூடாது இல்லே...?''

''அப்படியானால் ஒரே வழிதான் இருக்கு. விருப்பப் படாத இடத்தில் வற்புறுத்தி கல்யாணம் செய்து தராங்கன்னு போலீஸ் கம்ப்ளெண்ட் கொடு. உங்க அப்பாவை உள்ள தள்ளிடுவாங்க. அவரால் கொலையும் பண்ண முடியாது. தற்கொலையும் செய்துக்க முடியாது...''

''ஆனால் பேப்பர் பேப்பராக திவ்யாவின் போட்டோவோடு செய்தி வரும். கல்யாண போட்டோவுக்கு பதிலாக இந்த போட்டோ பெரிய நியூஸாயிடும்''

அதைக் கேட்டதும் திவ்யா இன்னமும் குழம்பிப் போனாள்.

''சரி.... தந்திக்கு என்ன பதில் வருதுன்னு பார்ப்போம். தந்தி கிடைச்சால் புரொபசர் உடனே பிளேன்ல கிளம்பி வந்தாலும் வந்துடுவார்...''

''சரிடா.... தந்தி கிடைக்காமல், அவரும் வராமல் இருந்துட்டால்....?''



''பார்க்கலாம்டா.... இன்னும் நாலு நாள் இருக்கே. அதுக்குள்ள ஒரு வழி தோணாமலா போயிடும். நீ கிளம்பி வீட்டுக்குப்போ திவ்யா.... நாளைக்கு வந்து நாங்க உன்னைப் பார்க்கிறோம்.''

திவ்யா பதில் பேசாமல் கிளம்பினாள். வீட்டிற்குப் போகாமல் எங்கேயாவது ஓடிப்போய் விட்டால் என்ன என்று தோன்றிற்று. அப்பாவைவிட்டு, அம்மாவைவிட்டு, அந்தச் சூழ்நிலையை விட்டு எங்கேயாவது போய்விட வேண்டும் போலிருந்தது. ஆனால் எங்கே போவது என்பது தெரியவில்லை. யாரிடம் போக முடியும் என்பதும் புரியவில்லை.

உடனே தன் மீதே ஒருவித கையாலாகாத கோபம் வந்தது. 'ஏன் இப்படி இருக்கிறேன் ? இது என் வாழ்க்கைப் பிரச்சினை. இதில் போராடி ஜெயிக்காமல் ஏன் ஓடிவிட வேண்டும் என்று தோன்றுகிறது...? அதன் மூலம் பிரச்சினையைவிட்டு தப்பித்துக்கொள்ள முடியுமா...? இது என்ன முட்டாள் தனம்....?'

'முட்டாள் தான். என் விருப்பம் இது தான். என் விருப்பப்படி தான் நான் நடப்பேன், என் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கிற உரிமை எனக்கு உண்டு என்று அப்பாவிடம் தலை நிமிர்ந்து தைரியமாகச் சொல்லாமல் 'எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்' என்று போராடாமல் எந்த முடிவையும் எடுக்க முடியாமல் நானும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பி...

'என்ன இது....? கையாலாகாத தனமா? அல்லது பாதுகாப்பு பற்றின பயமா....? எதிர்காலம் பற்றின நிச்சயமற்ற தன்மையா....? எது என்னை இப்படித் தடுமாற வைக்கிறது....? அப்பா மீது பழிபோட்டு அவர்கள் அமைத்துத் தருகின்ற பாதையின் பக்கமே நகர்ந்து கொண்டிருக்கிறேனே... இது ஏன்....? மனதிற்கு சிறிதும் பிடிக்காத ஒரு

விஷயத்தை மூர்க்கமாக எதிர்க்கிற திராணியற்று பேசாமல் இருப்பது எதனால்...?

ஒரு வேளை பிரபுராம் இருந்திருந்தால் எல்லாம் மாறி இருக்குமோ...? அவர் வந்து அப்பாவுடன் பேசி இப்பிரச்சினைக்கு முடிவு கண்டிருப்பாரோ....? பிரபு இல்லாமல் என்னால் இதற்குத் தீர்வு காண முடியாதா....? ஒரு ஆணைச் சாராமல் ஒரு பெண் தைரியமாக எந்த முடிவையும் எடுக்கத் தயங்குவது ஏன்...?

காரணம்... எதிர்காலம் என்கிற மருட்டல், அது கேள்விக் குறியாகிக் கொக்கி போடுகிற பயம். பாதுகாப்பு இன்றி தனியாக நிற்க நேர்ந்து விடுமோ என்கிற மருட்சி இவை தான் எந்தப் பெண்ணையும் தனித்து இயங்கத் தயங்க வைக்கிற விஷயங்களே தவிர வேறு இல்லை....

யோசித்துக் கொண்டே வீட்டை அடைந்த போது சியாம் வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தான். உள்ளே அப்பா இருக்கார் என்பதைத் தெரியபடுத்தினான். பின்னர் இன்னமும் மெதுவான குரலில் 'தந்தி கொடுத்தாச்சு' என்று காதைக் கடித்தான்.

''தாங்க்யு சியாம்....'' என்ற போது அவளுக்குக் கண் கலங்கிற்று. அதைப் பார்த்த சியாம் நெகிழ்ந்து போய்க் கேட்டான்.

''எதுக்கு இப்போ அழற...''

''என்னால் எத்தனைப் பேருக்குக் கஷ்டம்...?''

''ஒரு கஷ்டமும் இல்லை, போஸ்டாபீஸ் போய் தந்தி கொடுக்கிறது ஒரு பெரிய கஷ்டமா? அன்னிக்கு வீடியோ வுல நாம் ரெண்டு பேரும் 'போலீஸ்காரன் மகள்' காஸெட் பார்த்தோமில்ல....அதுல முத்துராமன் தன் தங்கை விஜய குமாரியின் காதலுக்காக எத்தனை செய்யறார். முத்து ராமன் அண்ணனாக இருந்து செய்ததை நான் தம்பியா இருந்து செய்யப் பார்க்கிறேன்...''



மனம் நெகிழ்ந்து, குரல் நெகிழ்ந்து வார்த்தை வராமல் அவள் உள்ளே வந்த போது முன் அறையில் உட்கார்ந்திருந்த அப்பா தலையை நிமிர்ந்திப் பார்த்தார். குரல் அதட்டலாக வந்தது.

''எங்கே போனே...?''

''கோவிலுக்கு...?'' சடாரென்று பொய் வந்தது. ஒரு வினாடி நம்ப முடியாதவராக மௌனமாக இருந்தார். பின்னர் அதட்டல் குறையாமல் தன் வீம்பையும் விட்டுக் கொடுக்காமல் சொன்னார்.

''கோவிலுக்குப் போய் நல்ல புத்தி கொடுன்னு சாமி கிட்ட வேண்டிண்டு வந்தாயா...?''

அவள் பேசாமல் இருந்தாள்.

''இனிமேல் வெளியில் எங்கேயும் போகக் கூடாது. கோவிலானாலும் வேண்டாம். எங்க போறதானாலும் இனிமேல் நான் கூட வருவேன்... கல்யாணத்துக்கு நாலு நாள் கூட இல்லை. கல்யாணப் பெண்ணு தனியாக ஊர் சுத்தறதாவது... நாளைலேர்ந்து உறவுக்காரங்க ஒவ்வொருத்தராக வர ஆரம்பிச்சிடுவாங்க... அதனால் ஒழுங்கா கால்யாணப் பொண்ணா லட்சணமா வீட்லயே இரு...''

அதைக் கேட்டதும் அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. தோட்டத்துப் பக்கம் போய் கை கால் முகம் கழுவி சமையலறைக்குள் நுழைந்தபோது அம்மா மெதுவாகக் கேட்டாள்.

''எங்கேடீ போயிருந்தே...?''

''காலேஜ் பிரெண்ட்சைப் பார்க்கிறதுக்கு...''

''என்ன சொல்றா?...''

"என்ன சொல்ல முடியும்? சியாமை விட்டு அவருக்கு ஒரு டெலிகிராம் கொடுக்கச் சொல்லியிருக்கேன்..."

"எவருக்கு...?"

"புரொபசருக்கு..."

"கல்யாணத்துக்கு இன்னும் நாலே நாள்தான் இருக்கு. அதுக்குள்ள டெலிகிராம் கிடைச்சு அவர் கிளம்பி வருவாரா...?"

"வரணும்..."

"வரலைன்னால்...?"

"நீ உன் வாயை வைக்காதேம்மா...வருவார். கட்டாயம் வரணும்..."

ஒரு குழந்தையைப் பார்க்கிற மாதிரி மகளைப் பார்த்தாள் அவள். 'இன்னும் கூடவா நம்பிக்கை வச்சுண்டிருக்கே...?' என்கிற மாதிரி பெருமூச்சு விட்டாள். பின்னர்

"தட்டு போடறேன். சாப்பிட உட்காரு" என்றாள்.

"ம்ஹூம். வேணாம்மா...பசிக்கலை..."

"என்னடி இது...? ஒரு நாளைப் போல் பசிக்கலைன்னு பட்டினி கிடக்கிற. நீ சரியாக சாப்பிட்டு எத்தனை நாளாகிறது தெரியுமா...? எவ்வளவு இளைச்சு கறுத்து எப்படி ஆயிருக்கேன்னு நீயே உன்னைக் கண்ணாடியில் பார்த்துக்கோ..."

"ப்ச்சு....வாழ்க்கையே போயிட்டிருக்கிறப்போ உடம்பு போனால் என்னம்மா?"

"சீ! என்னடி பேசற....? நல்லது நடக்கப்போற சமயத்துல இதெல்லாம் என்ன பேச்சு...?"



"நல்லது...? யாருக்கு நடக்கப் போறது...?"

"உனக்கு எது நல்லதோ, எது நடக்கணுமோ அதைத்தான் சாமி நடத்திவைப்பார். அந்தக் கடவுளை வேண்டிக்கோ...அவரைத் தவிர வேறு யாரும் எதுவும் செய்ய முடியாது..."

"எனக்குக் கடவுள் கிட்டகூட நம்பிக்கை போயிடுத்தும்மா கடவுள்கள் தங்களுக்கு வேணும்னால் எல்லாம் செய்துக்கிறார்கள். முருகன் வள்ளிக்கு ஆசைப்பட்டால் கிழவேஷம் போட்டு சாதிச்சுக்கறார். மகாவிஷ்ணு ராமனாகி 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'னு ஒரே பார்வையில் காதலிச்சு கைப்பிடிக்கிறார். கிருஷ்ணாவதாரத்திலோ கேட்கவே வேண்டாம். எல்லா தெய்வங்களும் தங்கள் காதலிகளை மனைவிகளாக்கி இதயத்திலும் பக்கத்திலும், மடிமீதும் வைத்துக்கொண்டு மனிதர்களை மட்டும் சோதிக்கிறாங்க..பிரிச்சுவச்சு அப்பா படுகிற சந்தோஷம் மாதிரி படறாங்க. எல்லா தெய்வங்களுக்குமே சாடிஸம் இருக்கும்மா. மனிதர்களை வதைச்சுப் பார்க்கிற குரூர புத்தி இருக்கு..."

"ஏண்டி.... என்னென்னவோ பேசற...?வயிற்றுல பசி....ஏதேதோ பேசச் சொல்றது. காலையில் கூட ஒரு காய் மோர் சாதம்தான் அள்ளிப் போட்டுண்டு ஓடின....இப்போவாவது ஒழுங்கா உட்கார்ந்து நன்றாகச் சாப்பிடு..."

"ம்ஹூம். வேணாம், பிடிக்கலை..."

"சரி....ஒரு டம்ளர் பாலாவது குடிச்சுட்டுப் போ..."

"ஆமாம். எனக்கு இப்போ பால் ஒண்ணுதான் குறைச்சல்...." என்று அதையும் மறுத்துவிட்டுத் தன் அறைக்கு வந்தவள் உடையைக் கூட மாற்றாமல் கட்டிலில் விழுந்தாள்.

ஒரு வேளை தந்தி கிடைக்காமற் போய் பிரபுராம் வராவிட்டால் என்ன ஆகும் என்று நினைத்த போதே அழுகை வந்தது. தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு சப்தப்படுத்தாமல் அழ ஆரம்பித்தாள்.

'பிரபு....பிரபு...தயவு செய்து வாங்க பிரபு....எப்படியாவது வந்துடுங்க பிரபு....வந்து என்னை இந்தக் கல்யாணத்திலிருந்து மீட்டுக் காப்பாற்றி நீங்க கல்யாணம் பண்ணி அழைத்துக் கொண்டு போங்க பிரபு....'

மனசு கெஞ்ச, நெஞ்சு விசும்ப, கண்கள் கண்ணீரில் கரைய நீண்ட நேரம் அப்படியே இருந்தவள் பின்னர் தன்னையும் அறியாமல் தூங்கிப் போனாள்...

## 6

மறுநாள் காலை ஏழு மணி இருக்கும். அவள் குளித்துக் கொண்டிருந்தபோது அம்மா லேசாகக் கதவைத் தட்டினார்.

"என்னம்மா...?"

"உன் கிளாஸ் பசங்க போல இருக்கு. கருணாகரன், பாஸ்கரன்னு பேர் சொன்னாங்க. ஹால்ல வெய்ட் பண்ணச் சொல்லியிருக்கேன். அப்பா வெளில போயிருக்கார். சீக்கிரம் குளிச்சுட்டு வந்து அவர் வர்றதுக்குள்ள அவங்களை அனுப்பிடு."

அவசரமாய் குளித்து, ஈரம் போனதும் போகாததுமாக உடலைத் துடைத்து, பரபரவென்று புடவையும், ஜாக்கெட்டும் அணிந்துகொண்டு ஹாலுக்கு ஓடிவந்தாள்.

அவளைப் பார்த்ததும் அவர்கள் 'ஹாய்' சொன்னார்கள்.



"உங்கப்பா வீட்ல இல்லைன்னு சொன்னாங்க. உனக்கு புரொபசர் லெட்டர் போட்டிருக்கார். என் ரூம் விலாசத்துக்கு வந்திருக்கு. அதை உடனே உன்கிட்ட கொடுத்துட்டு போகலாம்னு வந்தோம்..."

"அப்படியா....!" திவ்யாவின் முகம் பூவாக மலர்ந்தது மிகுந்த படபடப்புடனும் ஆர்வத்துடனும் கேட்டாள்.

"எங்கே அந்த லெட்டர்...?"

கருணாகரன் கடிதத்தை எடுத்துக் கொடுத்துவிட்டுச் சொன்னான்.

"இந்த லெட்டரைப் படிச்சுட்டாவது ஏதாவது செய்ய முடியுமான்னு பாரு திவ்யா... பாவம் புரொபசர். அவரை ஏமாற்றி விடாதே ப்ளீஸ்...."

அதைக் கேட்டதும் திவ்யாவிற்கு இதற்கு முன் எப்போதும் ஏற்படாத ஒரு கோபம் ஏற்பட்டது.

"கருணாகரன். தயவு செய்து நீ இப்படிப் பேசறதை நிறுத்து. எனக்கு மட்டும் புரொபசரை ஏமாத்தணும் என்கிற எண்ணம் இருக்குமா? இதுல இன்வால்வ் ஆனவள் நான். அதிகம் பாதிக்கப்படப் போறவளும் நான். என் நிலைமையையும் நீங்க கொஞ்சம் புரிஞ்சுக்கணும். அப்பா, அம்மான்றவங்க சாதாரணமில்லை இருபது வருஷ பந்தம். இன்னிக்கு இந்த உடம்பு இப்படி இருக்கு என்றால் அதற்கு காரணம் அம்மா போட்ட சாப்பாடு. அப்பாவோட உப்பு. அதுக்கு அத்தனை சுலபமாகத் துரோகம் நினைக்க முடியலை. நீங்கள்லாம் சொல்ற மாதிரியோ, எதிர்பார்க்கிற மாதிரியோ நிமிஷமாக உதறித் தள்ளிட்டு வர முடியலை. அதுதான் தடுமாடறேன். கடமைக்கும், காதலுக்கும் நடுவில் கிடந்து திண்டாடறேன்.... என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியலையே தவிர புரொபசரை ஏமாத்தணும் என்கிற எண்ணம் எனக்குக் கொஞ்சம் கூட இல்லை."

சொல்லிவிட்டு அவன் அழ ஆரம்பித்ததும் கருணா கரன் தவித்துப் போனான். சட்டென்று அவன் கையைப் பற்றி சொன்னான்.

"ஐயம் ஸாரி திவ்யா... நான் ஏதோ வெறுப்புல பேசிட் டேன். கோபத்துல பேசிட்டேன். எப்படியாவது நீ புரொ பசரைக் கல்யாணம் பண்ணிக்கணும் என்கிற ஆதங்கத்துல பேசிட்டேன். என்னை மன்னிச்சுடு திவ்யா...."

"தட் ஈஸ் ஆல்ரைட்..." என்று திவ்யா கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்ததும் பாஸ்கரன் பேசி னான்.

"இன்னமும் முழுசாக மூணு நாட்கள் நம் கையில் இருக்கு திவ்யா. டெலிகிராம் இன்னிக்குக் கிடைச்சாலும் உடனே பிளேன் டிக்கெட் கிடைச்சு புரொபசர் வந்தாலும் நாளைக் காலையிலோ, சாயந்திரமோ வந்தாகணும். வந் தால் நேராக எங்கள் ரூமுக்குத்தான் வருவார். நாங்கள் விஷயத்தைச் சொல்லி அழைச்சுக்கிட்டு வரோம். அதுக்கப் புறம் உங்க அப்பாகிட்ட பேசறதோ, இல்லை அந்த நரேந்திரன் கிட்ட பேசறதோ புரொபசர் இஷ்டம். அவ ருக்கு எதை எப்படிச் செய்யணும் என்று தெரியும். அத னால் அதுவரை அமைதியாக இரு திவ்யா. நல்லதே நடக்கும்னு நம்பு. நம் நம்பிக்கை வலிமையானதாக இருந் தால் எல்லாம் தானாக நடக்கும். கோப்மேயர் எழுதியிருக் கார். குமுதத்துல வர்றதே... நீ படிக்கலை? அதனால் பாஸிடிவ் ஆகவே நினைச்சு, அனாவஸ்யமாகக் கவலைப் பட்டு வீணாக டென்ஷனாகாமல் அமைதியாக இரு. நிதான மாக இரு. எல்லாம் நல்லபடியாக நடக்கும் பார்..."

பாஸ்கரின் வார்த்தைகள் புண்ணிற்கு மருந்திடுகிற மாதிரி இதமானதாக இருந்தன. மனதை மயிலிறகால் வருடிக் கொடுக்கிறாற் போல் தோன்றியது. நிஜமான நெகிழ்வுடன் "தாங்க்யு பாஸ்கர்..." என்றாள்.



"சரி... உங்கப்பா வர்றதுக்குள்ள நாங்க கிளம்பறோம் நீ புரொபசரின் லெட்டரைப் படி. முக்கியமான விஷயம் ஏதாவது இருந்தால் எங்க ரூமுக்குப் போன் பண்ணு ராத்திரி மணி பனிரெண்டானாலும் நாங்க ஓடி வருவோம் கவலைப்படாதே... வரட்டுமா? வறோம் திவ்யா...."

அவர்களை வாசல் வரை சென்று அனுப்பிவிட்டு உள்ளே வந்தவள் தன் அறைக்குள் போய் கதவை மூடித் தாழிட்டுவிட்டு ஜாக்கெட்டினுள் மடித்து வைத்திருந்த பிரபுராமனின் கடிதத்தை எடுத்தாள். எடுத்த போதே கைகள் நடுங்கின. பிரித்துப் படிக்க ஆரம்பித்த தருணத்தில் மனசு 'பிரபு பிரபு' என்று அரற்றியது. கண் கலங்கி எழுத்துக்களை மறைத்தன. ஆனாலும் அவளால் படிக்க முடிந்தது.

திவ்யா,

நான் இதை டார்ஜிலிங்கிலிருந்து எழுதுகிறேன். ஒவ்வொரு விநாடியும் உன்னை என் மனதில் சுமந்து கொண்டிருக்கிறேன். இந்தக் குளிர், ரம்மியமான சூழ்நிலை, மலைகளின் அழகு எல்லாம் உன்னையே நினைக்க வைக் கின்றன. என் வயது மறந்து போகிறது. துள்ளிக் குதித்து பத்து வயது சிறுவனைப்போல் ஓட வேண்டும் போலிருக் கிறது. இயற்கை அழகு. பசுமை அழகு. காற்று அழகு வானம் அழகு. மேகங்கள் அழகு. புகை மண்டலம் மாதிரி மேகங்கள் தவழ்ந்து பூமிக்கு இறங்கி வந்து நம்மைத் தழுவிக்கொள்ளப் போகின்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. சிலு சிலுவென்று காற்று உடலை வருடிச் செல்கிற போதெல்லாம் உன் ஞாபகம் வந்து அலைக்கழிக்கிறது. 'காற்று வெளியிடை திவ்யா உன் தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்' என்று என்னை மீறி பாடினபோது அதைக் கேட்டுவிட்டு மாணவ மாணவிகள் என்னைக் கேலி செய்ய ஆரம்பித்து விட்டனர். இப்போது நம் விஷயம் எல்லோருக்கும் தெரிந்த ரகசியமாகி விட்டது,

ஒருவர் விடாமல் "எப்போது சார் கல்யாணம்?" என்று நச்சரிக்கிறார்கள். "திவ்யாவின் படிப்பு முடிந்த பிறகா?" என்று கேள்வி கேட்கிறார்கள். 'பார்க்குமிடத்திலெல்லாம் திவ்யா போல் பாவை தெரியுதடி' என்று பாடிக் காட்டு கிறார்கள்.

நீ உடன் இல்லாதபோதுதான் உன் அருமை அதிகம் தெரிகிறது திவ்யா. உன்னுடன் இல்லாத ஒவ்வொரு நிமிடங்களையும் நான் எவ்வளவு இழக்கிறேன் என்பது புரிகிறது. நீயும் வந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்பதை என்னால் கற்பனைதான் செய்து பார்க்க முடிகிறது. நம் கல்யாணத்திற்குப் பின் நாம் ஹனிமூன் வருகிற இடம் டார்ஜிலிங்தான். என்ன...?"

அதற்குமேல் அவள் கடிதத்தைப் படிக்கவில்லை. அவளால் படிக்க முடியவில்லை. கண்களில் குளங்களாகக் கட்டி நின்றன. நெஞ்சிலிருந்து நீண்டதொரு கேவல் புறப்பட்டது. இனிமேல் தாங்க முடியாது என்று தோன்ற கடிதத்தை எடுத்துக் கொண்டு அம்மாவிடம் போனாள். அவள் முகத்தையும், கண்ணீரையும் பார்த்த அம்மா பதறிப் போய்க் கேட்டாள்.

"என்ன திவ்யா.... என்ன ஆச்சு...? எதுக்காக இப்படி அழற...?"

"அம்மா... என்னால் பிரபு இல்லாமல் இருக்க முடியாதும்மா... இதோ பாரும்மா எனக்கு லெட்டர் போட்டிருக்கார். இதைப் படிச்சுப் பாரும்மா... அப்போதான் அவருடைய அன்பு உனக்குப் புரியும். எனக்காக உருகுகிற உருக்கம் புரியும்..."

அம்மா கடிதத்தைக் கையில் வாங்கவில்லை. ஒரு விநாடி மௌனமாக அவள் முகத்தையே ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பின்னர் வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னார்.



"எனக்குப் புரிஞ்சு என்ன பிரயோசனம் திவ்யா.... யாருக்குப் புரியணுமோ அந்த மனுஷனுக்குப் புரியலையே...?"

"அவருக்குப் புரியலைன்னால் போகட்டும். அவருக்காக நான் வாழ முடியாது. அவருக்காக என் வாழ்க்கையை விட்டுக் கொடுக்க முடியாது. அவர் வாழ்ந்து முடிச்சவர். நான் இனிமேல்தான் வாழ்க்கையைத் தொடங்கப் போகிறவள். என் வாழ்க்கை முக்கியமா, அவருடைய பிடிவாதம் முக்கியமான்னு நீயே சொல்லும்மா....?"

"திவ்யா... எனக்குத் தெரியறது, எல்லாம் புரியறது. உன் வாழ்க்கைதான் முக்கியம். குருத்துதான் வளரணும். ஆனால் அது பனைமரத்துக்குப் புரியலையே.... குருத்தை வாடவிடாமல் வளர வைக்கணும்னு தெரியலையே... அதுக்குப் பதிலாகக் குருத்து எப்படி அதன் இஷ்டப்படி வளர்ந்துடும்னு பார்க்கிறேன் என்று சரத்து போடுகிறதே.... எல்லாரையும் கொன்னுட்டு நானும் சாகிறேன் என்கிறதே.... சொன்னால் சொன்னபடி செய்து காட்டுமே.... எனக்குப் பரவாயில்லை; அதற்கும் பரவாயில்லை.

நாங்க வாழ்ந்து முடிச்சுப் பட்டுப் போகக் காத்துண்டிருக்கிற மரம். விறகாக எரிந்து கருகி சாம்பலாகப் போகிற மரம். ஆனால் உனக்கும் கீழே இன்னொரு குருத்து இருக்கிறதே... அதை யோசித்துப் பார்த்தாயா....? அதை வெட்டிச் சாய்க்க மனசு வருமா? இப்படி மூணுபேரும் போன பின் உன்னால்தான் அமைதியாக, நிம்மதியாக, சந்தோஷமாகக் குடும்பம் நடத்த முடியுமா....? இதையெல்லாம் யோசிச்சுப்பாரு....? கொஞ்சம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திண்டு மூளையை உபயோகிச்சு யோசி. ஒரு குடும்பத்துக்காக ஒரு தனி நபரும், ஒரு ஊருக்காக ஒரு குடும்பமும் ஒரு தேசத்துக்காக ஒரு ஊரும் நாசமாகலாம். அதுல தப்பில்லைன்னு சொல்லுவாங்க.... இந்த குடும்பத்துக்காக-குடும்பம்னு கூடச் சொல்லலை. உன் தம்பி ஒருத்த

னுக்காக, அந்தக் குருத்து வாழணும் என்பதற்காக உன் ஆசையைக் கொஞ்சம் அடக்கிக்கக்கூடாதா....? விட்டுக் கொடுக்கக் கூடாதா.... சொல்லு....? உனக்காக உன்னை அந்த புரொபசர்கூட சேர்த்து வைக்கணும்ன்றதுக்காக முளைச்சு மூணு இலை விடாத அந்தப் பையன் உங்கப்பா கூட சண்டை போடலை. திருநீர் மலைக்கு அழைச்சுண்டு போய் நான் அவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைப்பேன்னு சொல்லலை....? ஓடிப்போய் தந்தி கொடுத்துட்டு வரலை....? அவனுக்காக, அந்தப் பையனுக்காக.... அவன் உன் மேல் வச்சிருக்கிற பாசத்துக்காக.... நீ பதிலுக்குக் கொஞ்சம் பாசம் வைக்கக்கூடாது...?''

''அம்மா... நீ என்ன சொல்ற...? எனக்கு ஷியாம் மேல பாசமில்லைன்னு சொல்றியா....?''

''அப்படிச் சொல்லலை, அவனுக்காகவாவது நீ உன் வாழ்க்கையைக் கொஞ்சம் விட்டுக் கொடுக்கக் கூடாதான்னு கேட்கறேன்...''

''முடியலையேம்மா.... என்னால் முடியலையே.... என்னை மாத்திக்க முடியும்னு தோணலையே.... பிரபுவை மறக்க முடியும்ன்றது சாத்தியமாகப் படலையே.... மனசுல ஒன்னை வச்சுண்டு வெளியிலே வேறொன்னாகக் காட்டிக்க என்னால் முடியலையே....''

''முடியணும்மா... அதுதான் இந்த உலகம்மா... நம்மைச் சுற்றி எல்லோரும் அப்படி இருக்கிற போது நாமும் அப்படித்தான் இருந்தாகணும். வேறு வழி இல்லை. எப்பவும் எந்த காரணத்தைக் கொண்டும் நரேந்திரன்கிட்ட பிரபுவைப் பற்றியோ, அவரோட நீ பழகின விஷயத்தைப் பற்றியோ, அவரைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டதையோ சொல்லவே சொல்லாதே... அமெரிக்காவில் இருந்தாலும் ஆம்பிளை ஆம்பிளைதான். இன்னும் பொண்டாட்டி என்பவள் தன் உடைமை. தன் வீட்ல தான் வாங்கிப் போட்ட மேஜை, நாற்காலி, சோபாசெட், காட்ரெஜ்





பீரோ மாதிரி தனக்கு உடைமையான ஒரு பொருள்னுதான் நினைப்பாங்களே தவிர அவளுக்கென்று ஒரு தனி மனசு இருக்கும். அதில் ஆசைகள் இருக்கும். உணர்ச்சிகள் இருக்கும். அவளும் மனுஷிதான்னு நினைச்சுக்கூடப் பார்க்க மாட்டாங்க. இந்த விஷயத்துல எல்லா ஆணும் ஒண்ணுதான். அதுல விதிவிலக்கே கிடையாது. தாலி கட்டின மறு நிமிஷமே பெண்டாட்டிங்றவ அவனுக்கு மட்டும் சொந்தமான, உரிமையான ஜடப் பொருள். அவ்வளவுதான் நீதான் இருபது வருஷமாக உங்கப்பாவைப் பார்த்துண்டு இருக்காயே... இன்னும் கூட உனக்கு நான் சொல்லணுமா....?''

''ஏம்மா.... நீ சொல்றதைப் பார்த்தால் அந்த நரேந்திரனைக் கல்யாணம் பண்ணிக்கிறதைத் தவிர வேறு வழி இல்லாத மாதிரி பேசற...?''

''பைத்தியம். கல்யாணத்துக்கு இன்னும் மூணு நாள் இல்லை. அதுக்குள்ள என்ன வழி ஏற்படும்னு நினைக்கிற....?''

''தந்தி கிடைச்சு பிரபு வரலாமில்லையா....?''

''வந்தால் சரி. நீ உன் இஷ்டப்படி அவனையே கல்யாணம் பண்ணிண்டால் எனக்கு இன்னமும் சந்தோஷம். ஆனால் அதுதான் நடக்கப் போறதுன்னு நினைச்சு ஏமாறுவதைவிட அது நடக்காதுன்னு மனசை சமாதானம் பண்ணிண்டு இருக்கிறப்போ அப்படி நடந்தால் அது எத்தனை நல்லது. நன்றாக இருக்கும்னு நினைச்சுப் பாரு...''

''ஐயோ....அந்த நரேந்திரனை எனக்குக் கணவராக என்னால் நினைச்சுக் கூடப் பார்க்க முடியலைம்மா....அந்த மனுஷன்கிட்ட எனக்குக் கடுகளவு பிடிப்புக் கூட ஏற்படல....''

"இப்படியெல்லாம் உளறிட்டு இருக்காதே திவ்யா... நீ இப்படி இருக்கிறதைப் பார்த்தாலே எல்லோருக்கும் சந்தேகம் வரும். உன் மனசை நீயே காட்டிக் கொடுத் அடாதே..."

"தெரியட்டும்மா....எனக்கு இந்த கல்யாணத்துல இஷ்டமில்லைன்னு எல்லோரும் தெரிஞ்சுக்கட்டும். என் னைக் கட்டாயப்படுத்தி, பயமுறுத்தித்தான் அப்பா இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்கிறார்ன்றதை எல்லோரும் புரிஞ்சுக்கட்டும்...."

"சரி.. புரிஞ்சுண்டு எல்லோரும் என்ன செய்யப் போறா....? உனக்காக அனுதாபப்படப் போறா அதுவும் கூட மனசு உள்ளவா மட்டும்தான் அனுதாபப்படுவா. மற்ற வங்க வம்பு பேசிட்டுப் போவாங்க. அந்த அனுதாபத்தி னால் யாருக்கு என்ன லாபம் திவ்யா....? உன் வாழ்க் கையை நீதான் வாழணுமே தவிர அனுதாபப்படறவங்க இல்லை...."

"சரிம்மா...உன்னை ஒண்ணு கேட்கட்டுமா? அப்பா கூட வாழறது உனக்குப் பிடிச்சிருக்காம்மா....? வேற வழி இல்லாமல்தானே வாழறே...? அதே நிலைமை எனக்கும் ஏற்படணுமாம்மா...?"

"பைத்தியம். நான் மட்டுமில்லை. நம்ப தேசத்துல முக்கால்வாசி சதவீதப் பெண்களின் நிலை இதுதான், நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மனசுக்குப் பிடிக்காமல், வேற வழி இல்லாமல் வாழ்ந்துண்டிருக்கிறவங்கதான்..."

"அதனால் என்னையும் அப்படியே வாழச் சொல்றி யாம்மா...! நீ அப்பா கூட வாழற அந்த வாழ்க்கையை நானும் தொடரணும்ன்றியா....?"

"அப்படிச் சொல்லலை திவ்யா... உங்க அப்பா கூட வேறு யாரையும் ஒப்பிட்டுப் பேசாதே.... உங்கப்பா அளவு



மோசமா வேற யாராலயும் நடந்துக்க முடியாது. அதுவும் நிச்சயமாக அந்த நரேந்திரன் நடந்துக்க மாட்டான். உன் அப்பா மாதிரி இருக்கமாட்டான். உலகம் தெரிஞ்ச மனுஷன். விவரம் புரிஞ்ச மனுஷன். அமெரிக்கா மாதிரி ஒரு தேசத்துல இருக்கிறவன் நம்ம ஊர் மனுஷங்க மாதிரி குறுகிய மனப்பான்மையோடு இருக்கமாட்டாங்க. விசால மான மனசு உள்ளவங்களாகத்தான் இருப்பாங்க. அதுவும் இந்த நரேந்திரன் ரொம்ப மென்மையான மனசு உள்ள வனாகப் பரந்த மனசு உள்ளவனாகத்தான் இருப்பான். உன்னை ரொம்ப நல்லாக வச்சிப்பான்னு தான் தோணறது...."

"ஏம்மா.... நீதானே கொஞ்சம் முன்னால் 'பிரபுவைப் பற்றி நரேந்திரன்கிட்ட சொல்லாதே. பெண்டாட்டின்றவ ஒரு ஆணுக்கு வெறும் பொஸஷன்தான்–பீரோ, நாற்காலி மாதிரி உடமைப் பொருள்தான்'னு சொன்னே....?"

"ஆமாம் சொன்னேன். அதுவும் நிஜம்தான். நான் இப்போது நரேந்திரனைப் பற்றி சொன்னதும் நிஜம்தான். கல்யாணம்ன்றது ஒரு பெண்ணுக்கு முளையில் கட்டிவிட்ட மாடு மாதிரி எத்தனைத் தரம் வேணும்னாலும் அந்த முளையைச் சுற்றிச் சுற்றி வரலாமே தவிர அதைவிட்டு விடுபட முடியாது. கயிற்றை அறுத்துக் கொண்டு போய் விட முடியாது...."

"போம்மா.... அதெல்லாம் உன் காலம். இப்போ யாரும் கட்டின முளையில் கிடக்கிறதில்லை. தடுக்கி விழுந் தால் பத்து டைவர்ஸ்.... பெண்கள் முன்னேறிக் கொண்டு தான் இருக்காங்க. படிப்பும், சுய சம்பாத்தியமும் அவங்க ளுக்குத் தைரியம் கொடுக்கிறது...."

"அப்படியா.... அப்படியானால் நீ படிச்சவள்தானே....? காலேஜில் எம். ஏ. படிக்கிறவள். உன்னால் ஏன் அப்பா பேச்சை மீற முடியலை?...."

"மீறிடுவேம்மா....நிமிஷமாக மீறிடுவேன். ஆனால் கொஞ்சம் முன்னால் நீ கேட்ட பாரு...உன் தம்பியை

நினைச்சுப் பாருன்னு... அவனை நினைச்சுப் பார்க்கிறேன். உங்களுக்காகத்தான் தயங்கறேனே தவிர மற்றபடி எனக்குத் தைரியமில்லாமல் இல்லை....''

''இப்படித்தான் ஒவ்வொரு பெண்ணும் கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு வலையில் மாட்டிக்கிட்டு முழிக்கிறாங்க. இப்போ எப்படி நீ எனக்காகவும், உன் தம்பிக்காகவும் தயங்கறியோ அந்த மாதிரி ஒவ்வொருத்தருக்காகத் தயங்கறாங்க. கூடப் பிறந்த தங்கை, வயிற்றில் பிறந்த குழந்தைகள்னு மற்றவங்க நலனுக்காகத் தங்களுடைய ஆசாபாசங்களை அழிச்சுக்கறாங்க. பிடிக்கலேன்னாலும் கட்டினவன் கூட வேறு வழியின்றி குடும்பம் நடத்தறாங்க.... வாயில் பேசுகிற அளவுக்குப் பெண்களோட நிலைமை மாறிப் போயிடலை. ரொம்பவும் உயர்ந்திடலை. நாங்கள்ளாம் படிக்கலை. காலேஜ் போகலை. இப்போ நீங்க படிக்கறீங்க. காலேஜ் போறீங்க. நாங்க வேலைக்குப் போகலை; சுயமாகச் சம்பாதிக்கலை. ஆனால் நீங்க வேலைக்குப் போறீங்க. சுயமாகச் சம்பாதிக்கறீங்க.

சம்பாத்தியம் கொடுக்கிற தைரியத்தில் சுடிதார், சல்வார் கம்மீஸ்னு விதம் விதமாக டிரஸ் போட்டுக்கிறதை தவிர வேறு எதுல முன்னேறி இருக்கீங்க...? எந்த சுதந்திரம் கிடைச்சிருக்கு....? எப்போதுமே இது ஆணாதிக்கம் நிறைந்த உலகம். உலகம் முழுசையும்தான் சொல்றேன். ஒரு ஆண் தனியாக வாழலாம். ஆனால் அது போல் ஒரு பெண் தனியாக வாழமுடியாது. வாழ உலகம் விடாது. பத்துப்பேர் வந்து கதவைத்தட்டுவாங்கள். நூறுபேர் நூறு விதமாகக் கதை கட்டுவாங்க. அதையெல்லாம் தாங்கிக் கொள்கிற சக்தி மென்மையான பெண் மனசுக்கு இல்லை. அதனால்தான் முளையில் கட்டின மாடு மாதிரி அதுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வரா....''

''....இப்போ புரியறதா நான் சொல்றது....? அம்மாவுக்கு உலகம் தெரியாதுன்றது உன் அபிப்பிராயம்; நீங்கள்



ளாம் புஸ்தக ஞானத்தில் பேசினால் நான் அனுபவ ஞானத்தில் பேசறேன். அதனால் இதற்கு மேல் இதைப் பற்றிப் பேசாமல், தர்க்கமோ, விவாதமோ செய்யாமல், புரொபசர் எழுதின அந்த லெட்டரைக் கிழிச்சுச் சுக்கு நூறாக்கிக் காற்றுல பறக்க விட்டுட்டுப் பிரபுன்றவர் நம் வாழ்க்கையில் வந்துவிட்டுப் போன வெறும் மேகம். ஓடும் மேகம்; மேகம் வானமாகி விடாதுன்னு புரிஞ்சுகிட்டு சமர்த்தாக இருக்கக் கத்துக்கோ.... சாமர்த்தியசாலியாக நடக்கத் தெரிஞ்சுக்கோ.... போ.... போய் முஞ்சியலம்பி, பொட்டு வச்சுண்டு. புதுசாக வாங்கின மைசூர் சில்க் புடவையில் ஒண்ணை எடுத்துக் கட்டிக்கோ.... இப்போ உன் அத்தைகள், சித்திகள்ளாம் வராங்க... அப்பா ரயிலடிக்குப் போயிருக்கிறார். இன்னும் அரைமணி நேரத்துல வீடு நிறைஞ்சுப் போயிடும். அதுக்குள்ள எதுவும் நடக்காத மாதிரி, எதையும் வெளிக்காட்டாமல் பளிச்சுனு இரு.... புத்திசாலியாக நடந்து கொள்.... அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். இதுக்கு மேல் எதுவும் சொல்ல முடியாது. சொல்வதற்கு விஷயமும் இல்லை....''

''அதனால் மனசை அதிகம் அலட்டிக்காமல் கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு நீ உன் கடமையைச் செய், மற்றதை அவன் பார்த்துப்பான்....''

திவ்யா அரண்டு போனாள். அம்மாவா இப்படிப் பேசுகிறாள், இத்தனைத் தீவிரமாகவும் ஆழமாகவும் சிந்திக்கிறாள் என்கிற ஆச்சரியமும் ஏற்பட்டது. இனி உணர்ச்சிக் குவியலாக இருந்து உபயோகமில்லை. அறிவை உபயோகப் படுத்த வேண்டும் என்று முடிவு செய்தவளாக அம்மாவிடம் கேட்டாள்.

''அம்மா நான் இப்போ என்ன செய்யணும்னு சொல்ற...?''

''முதல்ல அந்த புரொபசரோட லெட்டரைக் கிழிச்சுப் போடணும்னு சொல்றேன். ரெண்டாவதாகக்

கல்யாணப் பொண்ணாக லட்சணமாக டிரஸ் பண்ணிக்கச் சொல்றேன்...."

அம்மா சொன்னதில் இரண்டாவதிற்குக் கீழ்ப்படிந்து டிரஸ் பண்ணிக் கொண்ட திவ்யா பிரபுவின் கடிதத்தைக் கிழிக்காமல் மடித்து மிகவும் ஜாக்கிரதையாகவும், பத்திரமாகவும் புடவை ஒன்றின் மடிப்புகளுக்கிடையில் பத்திரப் படுத்தி வைத்தாள்....

கல்யாணத்தைப் பத்தே நாட்களுக்குள் நிச்சயித்ததால் நிறையப் பேர்களைக் கூப்பிட முடியவில்லை. பத்திரிகை அச்சடிக்கக் கூட நேரமில்லாததால் நேரில் போய் அழைத்தவர்கள் மட்டுமே வந்திருந்தவர்கள். வந்திருந்த முன்னூறு பேர்களும் அட்சதை தூவ, கெட்டி மேளம் முழங்க புரோகிதர் தந்த மஞ்சள் கயிற்றை திவ்யாவின் கழுத்தில் நரேந்திரன் கட்டிய போது பிரபுராம் ஆக்ராவில் தாஜ்மகாலை ரசித்துக் கொண்டிருந்தான். ஷாஜஹான் காலத்தில் அது மிகவும் நன்றாக இருந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். இப்போது அதன் அழகெல்லாம் மங்கிப் போய்விட்டதாகத் தோன்றியது. கங்கை நதியை ஒட்டிக் கட்டப்பட்ட அந்த நினைவுச்சின்னம் அதனைப் பார்ப்பதற்கு முன்பாக நிறைய எதிர்பார்ப்புகளைத் தந்திருந்தது. ஆனால் நேரில் பார்த்தபோது சற்று ஏமாற்றமாகக் கூட இருந்தது. அங்கு நிறைய வண்ணங்கள் தீட்டப்பட்ட அறைகள் இருக்கும் என்று கேள்விப்பட்டிருந்தான். ஆனால் அவைகளைப் பொதுமக்கள் பார்க்க அனுமதி இல்லை. பின் யார் பார்வைக்காக அவற்றைப் பூட்டி வைத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

பூட்டி வைத்ததன் காரணமாகவே அவைபாழாகாமல் இருக்கப் போகின்றனவா...? உடன் வந்த வழிகாட்டியிடம் கேட்க வேண்டுமென்று தோன்றியது பிரபுராமிற்கு. ஆனால் கேட்காமல் விட்டுவிட்டான்.



தாஜ்மகாலைச் சுற்றி வந்தபோது மாணவர்களுக்குக் கூடச் சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது.

"என்ன சார் இது... தாஜ்மகால்னு பெரிசா கனவு கண்டுட்டு வந்தால் இப்படி இருக்கு...?" சுரேஷ்கிருஷ்ணா கேட்டான்.

"எத்தனை வருஷம் கழிச்சுப் பார்க்கற...? ஷாஜஹான் இதைக் கட்டினபோது இந்த சலவைக் கல்லெல்லாம் நிறம் மங்காமல் எவ்வளவு அழகாகப் பளபளன்னு இருந்திருக்கும். அதுவும் பௌர்ணமி ராத்திரி அன்றைக்குப்பார்க்கணும்னு சொல்லுவாங்க. நிலா வெளிச்சம் பட்டு தகதகன்னு ஜொலிக்குமாம்..."

"சார்... இது ஜொலிக்கிறதோ, இல்லையோ.... இது ஒரு காதல் ஓவியம் சார். உலகத்துல காதல் உள்ள வரை இதன் பெயர் நிலைச்சிருக்கும் சார்...."

"எனக்குக்கூட நம்ம கிளாஸ் நீரஜாவுக்காக இந்த மாதிரி ஒண்ணு கட்டணும் போலத்தான் இருக்கு. ஆனால் பீஸ் கட்டவே என்கிட்ட பணமில்லாத போது நான் எங்கே தாஜ்மகால் கட்டப் போகிறேன்...?"

"சார்.... சார்... இந்த நந்தா சொல்றதை நம்பாதீங்க சார், இன்னிக்கு நீரஜாவுக்குக் கட்டணும்னு சொல்லுவான், நாளைக்கு மைதிலி, அடுத்த நாள் லதா, அதுக்கப்புறம் ஷைலஜான்னு மாறிண்டே போவான். முதல்ல இவன் ஆளை டிசைட் பண்ணட்டும். அப்புறம் தாஜ்மகால் கட்டறதைப் பற்றி யோசிக்கலாம்..."

கிண்டலும், கேலிப் பேச்சுக்களும், விளையாட்டும், அரட்டையும், அந்த இடமும், சிநேகத்தை நிலையும் தோழமைக்கு ஏங்க வைக்கின்ற பருவத்தையும் எண்ணிய போது பிரபுராமிற்கு திவ்யாவின் நினைவு வந்தது. உடனே 'மறந்தால்தானே நினைப்பதற்கு...' என்றும் சொல்லிக்

கொண்டான். கூடவே இப்போது அவள் என்ன செய்து கொண்டிருப்பாள் என்பதை எண்ணிப் பார்த்தான்.

இன்று புதன்கிழமையா...? பாலசுப்ரமணியம் கிளாஸ் எடுத்துக் கொண்டிருப்பார். அவள் கேட்டுக் கொண்டிருக்கலாம். இல்லை என்றால் பாலசுப்ரமணியம் கிளாஸ் எடுத்துக்கொண்டே போக அவள் புத்தகத்தினுள் தான் எழுதிய கடிதத்தை மறைத்து வைத்து நூறாவது முறையாகப் படித்துக் கொண்டிருக்கலாம். ''நீங்கள் இல்லாத அந்தப் பதினைந்து இருபது நாட்களும் நான் கல்லூரிக்கே வரப் போவதில்லை'' என்று சொன்னாளே.... ஒரு வேளை வீட்டிலேயே இருப்பாளோ...?

அவன் அவளை நினைத்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் திவ்யா அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, தேங்காய் உருட்டிவிட்டு சாப்பிட எழுந்து போனாள். சுற்றி உள்ளவர்களின் கேலியும், சிரிப்பும் அவளுக்கு வெறுப்பைத் தந்தன. இது என்ன அர்த்தமில்லாத சிரிப்பு என்று தோன்றியது. ஓங்கி அறைய வேண்டும் போலிருந்தது. அவளிடம் சற்று நெருங்கிப் பழகும் சித்தியின் பெண் சுமித்ரா காதருகில் வந்து கிசுகிசுத்தாள்.

''திவ்யாக்கா... மாப்பிள்ளை வெள்ளைவெளேர்னு ரொம்ப ஜோரா இருக்கார்க்கா.... உனக்கும் அவருக்கும் ரொம்பப் பொருத்தம். ரோட்ல நடந்து போனீங்கன்னால் எல்லாரும் திரும்பித் திரும்பிப் பார்ப்பாங்க. என்ன ஜோடின்னு பொறாமைப் படுவாங்க....''

''அதற்குப் பின்னர்தான் முதல் முறையாக திவ்யா அவனை நிமிர்ந்து பார்த்தாள். ரோஜா நிறமாக இருந்தான். உதடுகள் லிப்ஸ்டிக் தடவினமாதிரி இயற்கையாகவே சிவந்திருந்தன. கண்களில் நல்ல தீட்சண்யம். மூக்கும் முகவாயும், தலைமுடியும் இந்தித் திரைப்படக் கதாநாயகர்களை நினைவுபடுத்தின. இவனோடு ஒப்பிட்டால் பிரபுராம் அத்தனை நிறமில்லை. கவர்ச்சிகரமான அழ



கில்லை. ஆனால கம்பீரம் அதிகம். அறிவின் பிரகாசம் அதிகம்.

'நீ எத்தனை அழகனாக இருந்தால் எனக்கென்ன...? மன்மதனாகவே இரேன். ஆனால் எனக்குத் தேவை என் பிரபுதானே தவிர நீயில்லை. என் கண்களுக்கும், மனதிற்கும் அழகு பிரபு ஒருவராக மட்டும்தான் இருக்க முடியும். அவரைத் தவிர என் வாழ்க்கையில் வேறு யாருக்கும் இடமில்லை...'

''என்ன திவ்யா.... சாப்பிடாமல் என்ன யோசிச்சுட்டிருக்க....? ராத்திரி எப்போ வரும்ன்னு நினைப்பா...?'' அத்தை அவளது வயதிற்குத் தகுந்த மாதிரியில்லாமல் கண்ணியமற்றுப் பேசியதைக் கேட்டதும் திவ்யாவிற்குக் கையை உதறிக்கொண்டு எழுந்து ஓடிவிட வேண்டும் போலிருந்தது. ஆனால் பேசாமல் இருந்தாள். அதற்குள் நரேந்திரனின் உறவுக்காரப் பெண் ஒருத்தி சொன்னாள்,

''நரேன்.... நீ ஊட்டிவிட்டால்தான் சாப்பிடுவா போல இருக்குடா...''

அவளருகில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த நரேந்திரன் உற்சாகமாகவும், சந்தோஷமாகவும் சிரித்துக் கொண்டே கேட்டான்.

''ஓ. எஸ். வித் ப்ளெஷர்.... என்ன திவ்யா ஊட்டி விடட்டுமா....?''

அவளுக்கு எரிச்சல் வந்தது. தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

''இப்போ நீ பதில் சொல்லலைன்னால் இத்தனைபேர் எதிரிலும் நிஜமாகவே நான் ஊட்டிவிட ஆரம்பிப்பேன்...''

அவன் சொன்னபடி செய்துவிடப் போகிறானே என்ற பயத்தில் திவ்யா சட்டென்று பதில் சொன்னாள்.

''எனக்குப் பசியில்லை....''

"ஏன் பசிக்கலை.... காலையிலிருந்து ஒண்ணும் சாப்பிடலை போல இருக்கே...."

"அடேயப்பா! தாலி கட்டி ரெண்டு மணி நேரம் கூட ஆகலே.... அதற்குள் பெண்டாட்டி மேல் எத்தனைக் கரிசனம் பாரு..." அதற்கும் நரேந்திரன் பெருமையாகச் சிரித்துக் கொண்டான்.

"ம்... சாப்பிடு திவ்யா..." என மீண்டும் சொன்னான்.

"இல்லை.... எனக்குப் பிடிக்கலை... ரொம்பக் களைப்பாக இருக்கு.... கொஞ்சநேரம் படுத்துத் தூங்கணும் போல இருக்கு..."

"அடேயப்பா!....! இப்பத்தான் உனக்கு என் கிட்ட சேர்ந்தாற்போல் இரண்டு வாக்கியம் பேசணும்னு தோணியிருக்கு இல்லே....?"

அவள் மௌனமாக இருந்தாள்.

"நீ போய் ரெஸ்ட் எடுத்துக்க திவ்யா....அதற்கு முன்னால் ஒரு பத்து நிமிஷம் என் சொந்தக்காரர்களை மட்டும் அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அப்புறம் போய் நீ படுத்துத் தூங்கு.... என்ன...? அப்போதுதான் சாயந்திரம் ரிசப்ஷனுக்கு ப்ரெஷ்ஷாகப் பளிச்சுனு இருக்க முடியும்...."

அவன் தன் உறவினர்கள் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி வைத்தான். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவளுக்குப் பதில் தானே பதில் சொன்னான்.

"பாவம் அவள். காலையிலிருந்து அந்தப் புகையிலிருந்தது ரொம்ப டயர்டாக இருக்கிறாள்..." என்பதனையும் சேர்த்துச் சொன்னான். எல்லோரையும் சுருக்கமாக அறிமுகப்படுத்தி வைத்தபின் "நீ போய் படுத்துத் தூங்கு திவ்யா..." என்றான்.

அவள் அந்த இடத்தைவிட்டு வந்ததும் அம்மாவைக் கூப்பிட்டு "என்னை யாரும் எதற்கும் தொந்தரவு செய்





வேண்டாம்மா. நான் தூங்கப் போறேம்மா..." என்று சொல்லிவிட்டு ஓட்டலில் தங்களுக்கென எடுக்கப்பட்டிருந்த அறை ஒன்றில் போய் படுத்துக்கொண்டாள்.

தூக்கம் வரவில்லை. தூக்கத்திற்குப் பதிலாகத் துக்கம் வந்தது. ஓவென்று அழத் தோன்றியது. கண்களை மூடினால் பிரபுராம் வகுப்பு எடுப்பது போல் இருந்தது. ஸ்கூட்டரில் அவன் பின்னால் உட்கார்ந்து பீச்ரோடை வலம் வருவது போல் இருந்தது. அவன் தன் காதருகில் வந்து 'ஐ லவ் யூ திவ்யா ..' சொல்வது போலிருந்தது. ஒரு நாள் யூனிவர்ஸிடியிலிருந்து இருவரும் மழையில் நனைந்து கொண்டு வந்தபோது அவன் சன்னமான குரலில் பாடிய 'லிஸன் டுதி போரிங் ரெய்ன்' காதில் ஒலித்தது. ஒவ்வொரு நிகழ்ச்சியாக மாறி மாறி வர, கண்ணோரத்தில் கோடுகளாகக் கண்ணீர் வழிய அப்படியே கண்களை மூடிக் கிடந்தவள் பின்னர் மெதுவாகத் தூங்கிப்போனாள்.

கிட்டத்தட்ட நான்கு மணி இருக்கும். நரேந்திரன் வந்து எழுப்பியபோது மனம் கொஞ்சம் தெளிவடைந்த மாதிரி இருந்தது.

"முகத்தை அலம்பிண்டு சூடாக ஒரு கப் காபி குடிச்சுட்டு வா திவ்யா.... கொஞ்சம் வெளியில் போய்விட்டு வரலாம்..." மிக இயல்பாகச் சொன்னான்.

"வெளியிலா....? எங்கே...?"

அவள் குரலின் பதட்டமும், பயமும் அவனுக்கு என்னவோ போலிருக்க மிகவும் மெதுவாகக் கேட்டான்.

"ஏன் இப்படிப் பயமும், பதட்டமும் படற... நான் தானே உன்னைக் கூப்பிடறேன். வேற எங்கேயும் இல்லை. சாயந்திர ரிசப்ஷனுக்கு என் பிரெண்ட்ஸ் எல்லாரும் வருவாங்க.... நீ ரொம்ப அழகாக டிரஸ் பண்ணிக்கிட்டு ரொம்ப அழகாக இருக்கணும்னு எனக்கு ஆசையாக இருக்கு. அதனால் தாஜ் ஓட்டல் பார்லரில் அப்பாய்ன்ட்

மெண்ட் பிக்ஸ் பண்ணியிருக்கேன். அங்கதான் கூப்பிட றேன்....''

''எனக்குப் பார்லருக்குப் போயெல்லாம் பழக்க மில்லையே... பிடிக்கவும் பிடிக்காதே....''

''ஐயம் ஸாரி.... உனக்குப் பிடிக்குமான்றதைத் தெரிஞ் சுக்காமல் நானாக பிக்ஸ் பண்ணினது தப்புதான். முதலில் உன் அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிஞ்சுண்டிருக்க ணும். ஐஃபீல் ரியலி சாரி.... ஆனால் இன்னிக்கு ஒருநாள், எனக்காக, நான் அப்பாய்ண்மெண்ட் பிக்ஸ் பண்ணின காரணத்துக்காக கொஞ்சம் விட்டுக் கொடுக்கக் கூடாதா திவ்யா...? என்கூட வரக்கூடாதா...?''

அவனின் பெருந்தன்மையான பதிலும், பண்பான கெஞ்சலும் அவளை மறுக்க முடியாமல் செய்துவிட்டன. அடுத்த கால்மணி நேரத்திற்குப் பின்னர் அவன் அவளுக் காகக் காரின் முன் கதவைத் திறந்து விட்டான். அவள் ஏறி உட்கார்ந்ததும் சாத்திவிட்டு டிரைவிங் சீட்டில் வந்து உட்கார்ந்து காரைக் கிளப்பினான்.

கார் கிளம்பின ஐந்து நிமிடங்களுக்குப் பின்னரும் அவள் அவன் பக்கம் கூடத் திரும்பாமல் வெளியில் வேடிக்கை பார்க்கிற பாவனையில் இருப்பதைக் கவனித்து விட்டுக் கேட்டான்.

''ஏன் திவ்யா நீ என்னைப் பார்க்கவும் மாட்டேன்ற, பேசவும் மாட்டேன்ற....?'' வெளியிலிருந்து பார்வையை அகற்றி அவனை ஏறிட்டாள் அவள்.

''இல்லை... நான் உங்களைப் பார்க்கணும், பார்த்துத் தனியாப் பேசணும்னுதான் தவிச்சுக்கிட்டிருந்தேன்....''

''அப்படியா...? நிஜமாகவா சொல்ற திவ்யா...? அப்படியிருந்தால் நீ தாராளமாக என் வீட்டுக்கு வந்திருக் கலாமே... உன்னைப் பார்க்க வந்த எங்க அம்மாகிட்டே யாவது சொல்லியனுப்பி இருக்கலாமே....?''



''ம்ஹூம். முடியாது. இன்னிக்குக் காலை வரை நான் ...ங்க அப்பாவின் பெண். ஐவாஸ் மை ஃபாதர்ஸ் டாட்டர். ...வர் என்னைப் பேச விட்டிருக்க மாட்டார்...''

''புரியறது.... நான் உன்னைப் பெண் பார்க்க வந்த ...ன்னிக்குக்கூட உன்கிட்ட தனியாகப் பேசணும்னு கேட்ட ...ற்கு அவர் சம்மதிக்கலை. மறுத்துட்டார்...''

''அவர் மறுத்தால் நீங்க ஏன் அடங்கிப் போகணும்? ...ட்டாயம் பேசித்தான் ஆகணும்னு சொல்லியிருக்கலா ...ில்லையா....''

அவன் அவளைத் திரும்பிப் பார்த்து மென்மையாகச் ...ிரித்தான்.

''இதற்கு நீ சொன்ன அதே பதிலைத்தான் நான் ...ருப்பிச் சொல்லணும்...''

''என்ன பதில்...?''

''இன்று காலைவரை நீ உங்கப்பாவோட பொண்ணு ...திவ்யா...''

அவனது சாமர்த்தியமான பதிலை எதிர்பார்க்காத அவள் ஒரு வினாடி மௌனமாக இருந்தாள்.

''என்ன திவ்யா பேசாமல் இருக்கே....?''

''இல்லை... நீங்க சொன்ன பதிலில் இருந்த நிஜத்தை யோசிச்சுப் பார்த்தேன். இன்றிலிருந்து நான் அவருடைய பொண்ணு இல்லைன்றதே ரொம்ப ஆறுதலான விஷயமாக இருக்கு.... உங்களைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட வினாடியில் இருந்து அவர்கிட்டேயிருந்து விடுதலை பெற்ற உணர்ச்சி ஏற்படறது....''

''ஓ... ரியலி....! தாங்க்யு ஸோ மச் திவ்யா.... நீ இப்படிச் சொன்னது எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு....'' சொல்லிக்கொண்டே அவளின் மடிமீதிருந்த அவளுடைய வலது கையை எடுத்து சடாரென்று குனிந்து முத்தமிட் டான். அதைச் சிறிதும் எதிர்பார்க்காத அவள் சரே

வென்று தன் கையை இழுத்துக் கொண்டாள். நெருப்பை தொட்டுவிட்ட உணர்ச்சியோடு அவனை நிமிர்ந்து பார்த்த பார்வையில் கோபம் தெரிந்தது. அதைக் கவனித்து அவன் ஒன்றும் புரியாதவனாகக் கேட்டான்.

"என்ன திவ்யா....? எதுக்காக இப்படிப் பார்க்கற....?"

"நீங்க செய்தது எனக்குப் பிடிக்கல..."

"நான் என்ன தப்பு செய்தேன் திவ்யா? எனக்கு சொந்தமான ஒருத்தியின் கையை எடுத்து முத்தமிட்டது தவறா....?"

"நான் என்ன ஜடப்பொருளா...? சொந்தம்னு உரிமை கொண்டாட...?"

"என்ன... என்ன...?!" என்று அதிர்ந்துபோய் ஒரு வினாடி அவளையே பார்த்துவிட்டுப் பின் சாலையைப் பார்த்து வண்டி ஓட்டியவாறு பேசத் தொடங்கினான்.

"நீ சொல்றது சரிதான். நீ ஜடப்பொருள் இல்லை தான். உன்கிட்ட அனுமதி கேட்டுத்தான் உன் கையை முத்தமிடணும் என்பதற்கு நீ மூன்றாம் மனுஷி இல்லை. யாரோ இல்லை. இன்று காலையில் நான் தாலி கட்டிக் கல்யாணம் பண்ணிக்கொண்ட மனைவி, புது மனைவி. ஒரு மனைவிகிட்ட அப்படி நடந்துக்கறதில் தப்பு இல்லைன்னு நினைச்சேன். ஆனால் அது உனக்குப் பிடிக்கலைன்னு தெரியறது. ஐயம் ஸாரி திவ்யா. முதல் முதலாக உன்னைத் தனியாக கூட்டிக்கிட்டு வெளியில் போறபோது ஆரம்பத்திலேயே உனக்குப் பிடிக்காததை செய்து விட்டதற்கு ரொம்ப வருத்தப்படறேன்...."

அவன் காரை டாக்டர் ராதா கிருஷ்ணன் சாலையில் திருப்பிக்கொண்டே கேட்டான்.

"சரி... நான்தான் தெரியாமல் செய்துட்டேன்னு வச்சுக்க... உனக்கு ஏன் அதில் அவ்வளவு கோபம் வர்றது? நியாயமாகப் பார்த்தால் புதுசாகக் கல்யாணம் பண்ணிண்ட ஒரு பொண்ணு ஆர்வமாக எதிர்பார்க்கிற வரவேற்கிற விஷயமல்லவா இது....? இதுவே பிடிக்கலன்னு சொல்றியே.... அமெரிக்காவில் கல்யாணத்துக்கு முன்னால் கணவன் மனைவியாகப் பழகற ப்ரீ மாரிடல் செக்ஸ் ரொம்ப சாதாரணமான விஷயம் தெரியுமா...? ஆனால் நான் கல்யாணமான பின் நான் கல்யாணம் பண்ணிக்கொண்ட பெண்ணின் உதட்டில் கூட இல்லை, வெறும் கைவிரல்களில் முத்தமிட்டிருக்கேன். அதுவே பிடிக்கலைன்னு நீ தப்பு சொல்ற..."

ஜெமினி அண்ணா மேம்பாலம் வரும்வரை சில வினாடிகள் மௌனமாக இருந்தவன் அவளிடமிருந்து எந்தவித பதிலும் வராமற்போகவே மீண்டும்தானே மனம் திறந்து பேச ஆரம்பித்தான்.

"நீ என்னைப் பற்றியும் கொஞ்சம் தெரிஞ்சுக்கணும் திவ்யா.... உன்னைச் சந்திக்கும் வரை அதாவது பெண் பார்க்க வந்த அந்த நாள் வரை வேறு எந்தப் பெண்ணையும் மனசால் கூட நினைச்சதில்லை. இவள் வேண்டும் என யாருக்கும் ஆசைப்பட்டதில்லை. என்னை மாதிரி கல்யாணம் ஆகாத ஒருவனுக்கு அமெரிக்காவில் பெண் என்பவள் எத்தனை சுலபமான விஷயம் தெரியுமா? ஆனால் நான் அப்படியெல்லாம் இல்லை. மனம் விரும்பி கல்யாணம் பண்ணிக் கொள்ளும் பெண்ணைத் தவிர வேறு யாரையும் தொடக்கூடாது என்று இருந்தவன். இந்த விஷயத்தில் நான் ராமன் திவ்யா. கிருஷ்ணன் இல்லை. என்னிடம் இருக்கிற ஒரே ஒரு கெட்ட பழக்கம் சிகரெட் பிடிக்கிறது. அதுகூட அதிகம் இல்லை. மனசு ரொம்ப சந்தோஷமாக இருந்தாலோ அல்லது தனிமையில் சங்கடப் பட்டாலோ ஒரு சிகரெட்டோ இல்லாவிட்டால் இரண்டு சிகரெட்டோ பிடிக்கிறது பழக்கம். அதுவும் இனிமேல் உனக்குப் பிடிக்கலைன்னால் விட்டுடறேன் திவ்யா...."

உணர்ச்சி வசப்பட்டு அவன் பேசிக்கொண்டே போனபோது தாஜ் கோரமண்டல் வந்தது. கார் பார்க்கிங்கில் நிறுத்திவிட்டுச் சொன்னான்.

"நீ லேடீஸ் பார்லருக்குப் போய் உன்னை அ
யடுத்திக் கொண்டு வருவதற்குள் நான் மென்ஸ் பார்லரு
போய் என் முகம், தலை இரண்டையும் கொஞ்சம் அ
படுத்திக் கொள்கிறேன்... என்ன?"

அவள் தலையாட்டிவிட்டு உள்ளே போனாள்.

பார்லரிலிருந்து அழகுபடுத்திக் கொண்டு திரும்பி வ
உடனேயே அவனுடைய அம்மா திருஷ்டி சுற்றிப் போ
டாள்.

"ஏய்... நம்ம திவ்யாவா நீ... எவ்வளவு அழக
இருக்கே தெரியுமா...? என் கண்ணே பட்டுடும் போ
இருக்கு..." என்றாள்.

பின் தனியாக அறைக்குக் கூட்டிப் போய் மெதுவா
கேட்டாள்.

"மாப்பிள்ளை எப்படிம்மா இருக்கார்...? நன்றா
பழகறாரா...? நல்லபடி பேசறாரா...? அவர் மன
கோணும்படி நீ எதுவும் பேசிடலையே...?"

அதற்கு திவ்யா வெறுமனே தலையை மட்டும் ஆட்
விட்டுப் போனாள். அதன்பின் வரவேற்பும், விருந்து
முடிகிற வரை ஒரு பார்வையாளனைப் போல் , கலந்
கொண்டாள். நடப்பவை எதற்கும் தனக்கும் சம்ப
மில்லை என்றிருந்தாள். விருந்தெல்லாம் முடிந்து கல்ய
ணத்தின் கடைசி நிகழ்ச்சியாக அம்மா தந்த பால் செம்பை
எடுத்துக் கொண்டு நரேந்திரன் இருந்த அறைக்குப் போ
போது மறக்காமல் பிரபுராமின் கடிதத்தையும் எடுத்து
கொண்டாள் அவள்...

## 8

**தி**வ்யா உள்ளே நுழைந்த போது மகாராஜபுரம் சந்தா
னத்தின் கர்நாடக இசை காஸெட்டை டேப்ரிக்கார்டரில்
போட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான் நரேந்திரன். அவள்




வந்ததும் டேப்ரிகார்டரை நிறுத்தி விட்டு "வா திவ்யா..." என்றான். நகர்ந்து கட்டிலில் உட்கார இடம் கொடுத்தான். அவள் அமர்ந்ததும் தலையிலிருந்து கால்வரை பார்வையாலேயே அளந்து விட்டு "ஓ... நீ எவ்வளவு அழகாக இருக்கே தெரியுமா...? வானத்திலிருந்து இறங்கி வந்த தேவதை மாதிரி இருக்கே..." என்றான்.

"இஃப் யு டோண்ட் மைண்ட்... நான் ஒரு சிகரெட் பிடிக்கட்டுமா...?" என்று அனுமதி கேட்டான்.

"நான் பார்லருக்குப் போகும்போது சொன்னேன் இல்லையா...? ரொம்ப தனிமையாக உணரும் போதும் எனக்கு சிகரெட் பிடிக்கிற பழக்கம் உண்டுன்னு. இப்போ தனிமை இல்லை. மனசுக்குள் சொல்ல முடியாத சந்தோஷம். அதனால்தான் சிகரெட் பிடிக்கணும்னு தோணறது. பிடிக்கட்டுமா...? உனக்குப் பிடிக்கலைன்னால், இந்த வாசனை ஆகாதுன்னால் நான் விட்டுடறேன்..."

"இல்ல நீங்க பிடிக்கலாம். எனக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை..."

"தாங்க்ஸ் திவ்யா..." என்றவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து ஒரு முறை ஆழமாகப் புகையை உள்ளுக்குள் இழுத்துக்கொண்டு அவளைப் பார்த்தான்.

"சொல்லு திவ்யா... சாயந்திரம் பார்லருக்குப் போன போது என்கிட்ட பேசணும்னு நினைச்சேன்னு சொன்னாயே... அப்பா பேசவிடாமல் தடுத்துட்டாரியே... இப்போ சொல்லு... தடுக்க உங்கப்பா இல்லை..."

குழந்தை மாதிரி சிரித்துக்கொண்டே அவன் கேட்டதும் அவள் ஒரு வினாடி தயங்கினாள்.

"என்ன தயங்கற... சொல்லு... இங்க நீயும் நானும் தனியாகத்தான் இருக்கோம். உங்கப்பா இல்லை. அதனால் தைரியமாகப் பேசு..."

அவள் மீண்டும் தயங்கிப் பின்னர் கேட்டாள்.

"நான் சொல்றதை நீங்க புரிஞ்சுக்கணும், முதல்ல என்னைப் புரிஞ்சுக்கணும்...."

"சரி...."

"எதையும் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது...."

"சரி..."

"நாம் ரெண்டுபேரும் வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு முன்னால் நமக்குள்ள ஒரு தெளிவும், ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கிறதும், ரொம்ப அவசியம்னு நினைக்கிறேன்...."

அவன் மென்மையான புன்னகையோடு சிகரெட்டை அணைத்துப் போட்டுவிட்டுச் சொன்னான்.

"நமக்குக் காலையிலேயே வாழ்க்கை என்கிற ஒன்று ஆரம்பித்து விட்டது என்று நான் நினைக்கிறேன்...."

"இருக்கலாம். ஆனாலும் நான் அதை ஆரம்பமாக நினைக்கலை. வெறும் சடங்குகள் ஆரம்பமாகி விடாது. எப்போது மனதை மனதால் புரிஞ்சுக்கறோமோ அப்போது தான் வாழ்க்கை ஆரம்பிக்கிறது. நட்பு, சிநேகம், காதல் எல்லாமே மனதை மனதால் உணர்ந்த பின்னர் ஆரம்பிப்பவை தான்..."

"ஆங்கில இலக்கியம் படிக்கிற இல்ல.... அதனால்தான் இத்தனை அழகாகப் பேசற..."

"பேசறது இருக்கட்டும். என்னை, என் மனசை உங்களால் புரிஞ்சுக்க முடியுமா?"

"முடியும்னு நினைச்சுத்தானே பேச ஆரம்பிச்சிருக்கே.... இவன்கிட்ட சொல்லணும் என்கிற முடிவோடு தானே தொடங்கியிருக்கே.... பின்ன ஏன் தயங்கற....?"

"தயக்கமில்லை. நான் உங்ககிட்டே எதையும் மறைக்க நினைக்கலை. உங்களுக்கு என்னைப் பற்றின எல்லா விஷயங்களும் தெரியணும்னு நினைக்கிறேன்...."



"எல்லாம்தான் உங்க அப்பா சொன்னாரே.... உன் வயது, நட்சத்திரம், குடும்ப விவரம், எம்.ஏ. படிக்கிறா, நன்றாகப் பாடுவா—"

"அதையெல்லாம் தவிர முக்கியமான விஷயம் ஒண்ணு இருக்கு."

"என்ன....?"

"முதல்ல நீங்க இந்த லெட்டரைப் படிக்கணும்."

"அந்த முக்கியமான விஷயத்தை இந்த லெட்டர்ல எழுதி இருக்கியா..?"

"இல்லை. அந்த முக்கியமான விஷயமே இந்த லெட்டர் தான். படிங்க. புரியும்."

"இது உனக்கு வந்த லெட்டரா....?"

"ஆமாம்."

"அதை ஏன் என்னைப் படிக்கச் சொல்ற...?"

"காரணமாத்தான்"

"யார் எழுதினது?"

"பிரபுராம்"

"யார் அது....?"

"எங்க புரொபசர்..."

"சரி, அவர் ஏன் உனக்கு லெட்டர் எழுதணும்....?"

"இத்தனைக் கேள்விகளுக்கும் அந்த லெட்டரைப் படிச்சால் பதில் கிடைக்கும்."

"வேணாம், படிக்காமலே எனக்குப் புரியுது. யூ லவ் ஹிம்...?"

"ஐ ஸ்டில் லவ் ஹிம்."

"என்ன...?!"

"எஸ்! இன்னமும் நான் அவரைத்தான் காதலிக்கிறேன். உங்ககிட்ட எதையும் மறைக்கக் கூடாதுன்னு உண்மையைச் சொல்றேன்..."

அவன் கால்வினாடி மௌனமாக இருந்து பின்னர் அவள் முகத்தை ஏறிட்டான்.

"அப்போ ஏன் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சே....?"

"நான் எங்கே சம்மதிச்சேன்...?"

"உன் சம்மதம் இல்லாமலே உங்கப்பா உனக்குச் சம்மதம்னு சொல்லிட்டாரா?"

"ஆமாம்."

"அவருக்குத் தெரியுமா இந்த விஷயம்?"

"தெரியும்."

"தெரிஞ்சும்கூட இந்தக் கல்யாணத்தை நடத்தி வச்சிருக்கார்னால் என்ன அர்த்தம்? உன்னைப் பயமுறுத்தி சம்மதிக்க வச்சிருக்கார் இல்ல....?"

"ஆமாம்...."

"என்னன்னு பயமுறுத்தினார்?"

"எங்க எல்லாரையும் கொன்னுட்டுத் தானும் தற்கொலை செய்துக்கிறதாகச் சொன்னார்...."

"உங்க எல்லாரையும்னால்.... யாரையெல்லாம்....?"

"அம்மா, நான், என் தம்பி..."

"உடனே நீங்க அவர் சொன்னதை அப்படியே நிஜம்னு நம்பிட்டீங்க. கொலை செய்யறது என்ன சாதாரண விஷயமா...?"

"எங்கப்பாவை உங்களுக்குத் தெரியாது. சொன்னதைச் செய்யக் கூடியவர். ரொம்பக் கோபக்காரர். மூர்க்க



மானவர். மற்றவங்க ஆசைகள், எண்ணங்கள் எதுக்கும் மதிப்புக் கொடுக்காதவர்..."

"சரி... நீ அந்த பிரபுராம்கிட்ட சொன்னியா...?"

"இல்லை.... சொல்ல முடியல்ல...."

"ஏன்...? சினிமாவில் வர்ற மாதிரி உங்கப்பா உன்னை ரூம்ல போட்டுப் பூட்டி வச்சுட்டாரா....?"

"பூட்டி வைக்கலைன்னாலும் அந்த மாதிரித்தான் காவல் காத்தார்...."

"சரி.... விஷயத்தைச் சொல்லியனுப்ப வேற ஒரு வழி கூடவா தெரியலை உனக்கு....?"

"இல்லை... அப்படியில்லை..."

"பின் ஏன் சொல்லலை...?"

"இந்தக் கல்யாணம் நிச்சயமானபோது அவர் ஊரில் இல்லை."

"சரி. நிச்சயமானபோது இல்லை. நிச்சயமாகி கல்யாணமான இன்று காலைவரை நடுவில் பத்து நாட்கள் இருந்ததே... அந்தப் பத்து நாளுமா அவர் ஊரில் இல்லை...?"

"ஆமாம். காலேஜ் ஸ்டூடெண்ட்ஸ் கூட நார்த் டூர் போயிருக்கார். வர இன்னும்கூட நாலைந்து நாளாகலாம்...."

"எங்கே போயிருக்கார்னு தெரிஞ்சு ஒரு டிரங்கால் போட்டுப் பேசியிருக்கலாம். தந்தி கொடுத்து வரவழைச்சிருக்கலாம் இல்ல...?"

"தந்தி கொடுத்துப் பார்த்தேன். பதிலில்லை...."

"எப்போ கொடுத்தே...?"

"மூணு நாளைக்கு முன்னால்..."

"எந்த ஊருக்கு?"

"அஸ்ஸாமிற்கு..."

"அப்போ அவர் அஸ்ஸாமில்தான் இருந்தாரான்னு தெரிஞ்சுண்டு தந்தி கொடுத்தாயா?"

"இல்லை.... வெறும் ஒர் புரோக்கிராம் ஷீட்டைப் பார்த்துத் தந்தி கொடுக்கச் சொன்னேன்..."

"கொடுக்கச் சொன்னாயா...? யார்கிட்ட...?"

"என் தம்பி சியாம் கிட்ட..."

"அவனுக்குத் தெரியுமா?"

"தெரியும்."

"சரி. அவனையாவது என்கிட்டே அனுப்பிப் பேசச் சொல்லியிருக்கலாம் இல்லை..."

"அதை அவன் சொன்னதற்குத்தான் அப்பா அடித்து உதைத்து மிரட்டினார். எந்தக் காரணத்தைக் கொண்டாவது இந்த விஷயம் உங்களுக்குத் தெரிஞ்சு கல்யாணம் நின்று போனால் தூக்குல தொங்குவேன்னு பயமுறுத்தினார்..."

"உடனே பயந்து போய் நீங்க பேசாமல் இருந்திட்டீங்க இல்லை....?"

"என்ன பதிலைக் காணோம்...? இந்தக் கல்யாணத்தை ஆறு மாசத்துக்கு முன்னாலிருந்தே உங்கப்பா லெட்டர் மேல லெட்டர் எழுதி நிச்சயப்படுத்திக் கொண்டாரே.... அப்போதிருந்தா உங்க புரொபசர் ஊர்ல இல்லை...."

"ஆறுமாசத்துக்கு முன்னாலிருந்தா....?! எங்களுக்குத் தெரியாது. இந்தக் கல்யாணம் நிச்சயமாகப் போற விஷயமே நீங்க பொண்ணு பார்க்க வந்து, அன்னைக்கே கையோட நிச்சயமும் பண்ணின போதுதான் எங்களுக்குத் தெரியும்...."



ஓடும் மேகங்களே

"எங்களுக்கு என்றால் யார் யாருக்கு....?"

"நீங்க என்ன கோர்ட்டுல குற்றவாளியைக் கேள்வி கேட்கிற மாதிரி கேட்கறீங்க....?"

"இன்–எ–வே நீயும் ஒரு குற்றவாளிதான்...."

"எப்படி என்னைக் குற்றவாளின்னு சொல்றீங்க...?"

"நான் பொண்ணு பார்க்க வந்து நிச்சயம் பண்ணினாங்க இல்லே.... அப்போதே நீ வேணாம்னு சொல்லியிருக்கலாமில்ல....?"

"சொன்னேனே..."

"யார்கிட்ட....?"

"எங்க அப்பா, அம்மாகிட்ட...."

"நீ புரொபசரைக் காதலிக்கிறதைச் சொன்னாயா...?"

"சொன்னேன்...."

"என்ன சொன்னாங்க....?"

"அவங்க ஒத்துக்கலை...."

"ஏன்...?"

"அப்பாவுக்குக் காதல் கல்யாணமெல்லாம் பிடிக்காது. அவர் வெச்சதுதான் சட்டம். புரொபசரைக் கல்யாணம் பண்ணித்தர முடியாதுன்னு சொல்லிட்டார்."

"உங்கம்மா என்ன சொன்னாங்க...?"

"அப்பா சொல்றதைக் கேளுடி.... உன் ஆசைக்காக ஒண்ணுமே தெரியாத உன் தம்பி, நான், எல்லோரும் சாகணுமான்னு கேட்டாங்க. நாங்களெல்லாம் செத்தப்புறம் நீ புரொபசரைக் கல்யாணம் பண்ணிண்டு சந்தோஷமாக இருக்க முடியுமான்னாங்க....?"

''அதனால நீயும் சரின்னு இந்தக் கல்யாணத்துக்குத் தலையாட்டிட்ட....?''

''........''

''சரி.... இப்போ இப்படி என்கிட்ட உண்மையைச் சொல்றதுக்கு முன்னால் உங்கப்பாகிட்டே பர்மிஷன் வாங்கிட்டு வந்தியா....?''

''இல்லை...''

''ஏன்....?''

''அவசியம்னு தோணலை....''

''ஏன் அவசியம்னு தோணலை...?''

''ஏன்னால் இன்று காலையிலிருந்து நான் எங்க அப்பா பொண்ணு இல்லை....''

''ஓஹோ.... அதைத்தான் கார்ல வர்றபோது இந்தக் கல்யாணம் ஒரு ரிலீஃப்-சுதந்திரமாக உணர முடிகிறதென்று சொன்னாயா?''

''.......''

''ஸோ— ஒரு புது மனுஷனான என்கிட்டே உனக்குப் பேசத் துணிவு இருக்கு. தைரியம் இருக்கு ஆனால் அதையே உன்னைப் பெற்று இத்தனை வருஷம வளாத்த உங்கப்பாகிட்ட பேச முடியலை. சாதிச்சுக்கிற தைரியம் இல்லை. இல்லையா...?''

''அவர்கிட்டே எதையும் சாதிச்சுக்க முடியாது.... யாராலயும் பேச முடியாது....''

''ஏன்...?''

''அவருக்கு மிரட்டி அடிபணிய வைக்கத்தான் தெரியும். எங்களையெல்லாம் அடிமை மாதிரி நடத்தித்தான் அவருக்குப் பழக்கம். எங்களுக்குப் பிடிச்சது, விருப்பமானதுன்னு சமையலைக் கூட அவர் செய்ய விட்டதில்லை....''

''அவர் ஏன் அப்படி இருக்கார்....?''



''சின்ன வயசிலிருந்தே நான் பார்த்த அப்பா அப்படித்தான்... என் பிரெண்ட்ஸ்ஸோட அப்பாக்கள் மாதிரி பிரியமா, பாசமா ஒருநாள் கூட அவர் இருந்ததில்லையேன்ற வருத்தமும், ஏக்கமும் எனக்குள் நிறைய உண்டு....''

''உங்கப்பா இப்படி இருக்கிறதுக்கு ஏதாவது காரணம் இருக்கணும். இல்லையா....?''

''இருக்கலாம்....''

''இருக்கலாம்தானா...? அது என்னன்னு உனக்குத் தெரியாதா...?''

''தெரியாது.''

''எனக்கும் உன்னைப் பார்த்ததிலிருந்து, நீ என்னை ஒரு முறை கூட எதிட்டுப் பார்க்காததிலிருந்து ஏதோ நெருடிக்கிட்டேதான் இருந்தது. அதனால்தான் எங்கம்மாவை அனுப்பினேன். என்னன்னு தெரிஞ்சுக்கிட்டு வாம்மான்னேன். உண்மையைத் தெரிஞ்சுக்க முடியாமல் எங்கம்மாவும் ஏமாந்து போயிட்டாங்க. உன்னுடைய கோழைத் தனத்திலால் இத்தனையும் நடந்து போச்சு. எத்தனை பேரோட வாழ்க்கை பாழாகி விட்டது பார். எத்தனை 'மனங்கள்' பாதிக்கப்பட்டிருக்கின்றதைக் கொஞ்சம் நினைச்சுப் பாரு. இப்போ எங்க அம்மா, அப்பா கிட்டே போய் நான் என்ன சொல்லுவேன்...? அவங்களுக்கு நான் ஒரே பையன். இந்தக் கல்யாணத்தின் மூலம் அவங்க மனசுல எத்தனை எதிர்பார்ப்புகள் ஏற்பட்டிருக்கு தெரியுமா...?''

''ஐயம் வெரி சாரின்றதைத் தவிர என்னால் வேறு என்ன சொல்ல முடியும்?''

''இந்த வெரி சாரின்றது ரொம்ப சுலபமான வார்த்தை கொலை பண்ணிட்டுக்கூட அதைச் சொல்லிடலாம், இன் ஃபாக்ட் நீ என்னை எவ்வளவு தூரம் பாதிச்சிருக்கேன்னு உனக்குத் தெரியாது. அதைச் சொன்னால் அதற்கும் 'சாரி'ன்னு சொல்லிடப் போற... நீ ரொம்ப

அசிங்கமாக நடந்துகிட்டிருக்கே திவ்யா... உங்க புரொபசரை நீ காதலிச்சபோது உங்க அப்பா நினைவும், அவரது முரட்டுத்தனமும் உன் ஞாபகத்திற்கு வரவே இல்லையா....?''

''நீங்க எப்போவாவது காதல் வயப்பட்டிருக்கீங்களா ?''

''இல்லை.... ஏன் கேட்கிற....?''

''பட்டிருந்தால் அப்போது புரிஞ்சிருக்கும். என் உணர்ச்சிகள் புரிஞ்சிருக்கும். காதலிக்கிறபோது அந்தக் காதலைத் தவிர வேறு எதுவும் ஞாபகத்திற்கு வராது. காதலனைத் தவிர வேறு யாரும் நினைவில் நிற்க மாட்டார்கள்...''

நரேந்திரன் மறுபடியும் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான். சிறிதுநேரம் பேசாமல் இருந்தான். அந்த அறையை ஒட்டின பக்கத்து அறைக்குப்போய் பிரிஜ்ஜைத் திறந்து ஒரு பாட்டில் தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டு அறைக்குத் திரும்பி வந்தான்.

''அம்மா அப்பா இரண்டு பேரும் தூங்கிகிட்டு இருக்காங்க. அவங்ககிட்ட சொல்லணும்னு தோணித்து. அதனால்தான் எழுந்து போனேன். ஆனால் இப்போது சொல்ல வேண்டியது அவசியம் இல்லைன்னு தோணுது. இது என் வாழ்க்கைப் பிரச்சினை. நீயும், நானும் சம்பந்தப்பட்ட விஷயம். இதை நீயும் நானும்தான் தீர்த்துக் கொள்ளணுமே தவிர இதுல மூன்றாம் மனிதர்களை நுழைய விடக்கூடாது. அம்மா, அப்பாவானாலும் அவர்கள் மூன்றாம் மனிதர்கள்தான். ஸோ— நான் இப்போ என்ன செய்யணும்னு சொல்லு.... செய்யறேன்...''

அவள் அதற்கு மௌனமாக இருந்தாள்.

''இப்படிப் பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம் திவ்யா...? உன் அப்பாகிட்ட பேச முடியாததை என்கிட்டே பேச முடியும்னுதானே ஆரம்பிச்சே....? அப்போ



மனசுவிட்டு வாய்விட்டுப் பேசணும். சொல்லு உனக்கு உன் புரொபசரை எத்தனை நாளாகத் தெரியும்....?''

''ஒரு வருஷமாகத் தெரியும்.''

''இந்த ஒரு வருஷமும் அவர்கிட்ட உனக்கு இன்வால்வ்மெண்ட் இருக்கா....?''

''இன்வால்வ்மெண்ட்டுன்னா...யு மீன்....பிஸிகல்...?''

''சீ! எத்தனை அசிங்கமா கேள்வி கேட்கற? அத்தனை சின்னத்தனமான எண்ணம் கொண்டவன் இல்லை நான். இன்வால்வ்மெண்ட் மனசளவில் ஏற்படறது உடம்பை விடப் பெரிசு திவ்யா. இன்னிக்குக் காலையில் நம் இரண்டு பேரையும் உடம்பால சேர்த்து வைக்க நினைச்சு கல்யாணம்னு ஒன்னு பண்ணினாங்களே.... என்ன ஆச்சு? மனசு சேரலை.... ராத்திரியே விரிசல்விட்டு உடைஞ்சுப் போச்சு. அதனால் நான் உடம்பைப் பற்றிக் கேட்கலை. உடம்பு வெறும் கட்டை மாதிரி. உள்ளுக்குள் இருக்கும் மனசைப்பற்றிக் கேட்கிறேன். மனசால் அவர்கிட்ட உனக்கு எப்போது ஈடுபாடு ஏற்பட்டது....?''

''பார்த்த முதல் நாளே.... முதல் முதலாக வகுப்பிற்குள் நுழைஞ்சு பாடம் எடுத்த அன்னிக்கே....''

''அவர்கிட்டே உனக்கு என்ன பிடிச்சது....?''

'என்ன கேள்வி இது....?' என்கிற மாதிரி அவனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள். அந்தப் பார்வையில் இருந்த ஏதோ ஒன்று நெஞ்சைத் தொட நிதானமாகச் சொன்னான் அவன்.

ஐயாம் ஸாரி.... இட் வாஸ் நாட் எ ஃபேர் க்வெஸ்சன்? ஒருத்தரை ஏன் பிடிக்கிறது என்பதற்குக் காரணம் சொல்ல முடியாது. இது இதற்காகப் பிடிக்கிறது என்று பிரிச்சுப் பிரிச்சுப் பார்க்க முடியாது. ஒட்டுமொத்தமாக ஒருத்தரைப் பிடிக்கிறதுக்குப் பேர்தான் காதல்.' எனக்கு உன்னைப் பிடிக்கிற மாதிரி. நிஜமாகச் சொன்னால் எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கிறது திவ்யா. அதுவும் நீ

மனசுவிட்டு உண்மையைச் சொன்னது இன்னமும் பிடிக்கிறது. ஒருத்தரை நேசிக்கிறோம்னு சொன்னால் அவங்க நிறைகுறைகளோட நேசிக்கணும். நான் அப்படித்தான் உன்னை நேசிக்கிறேன். அதனால் கடைசியாக ஒரு கேள்வி கேட்கிறேன். ஓடும் மேகங்கள் மாதிரி, மாறி மாறி உருவங்கள் காட்டி கலைந்து பின் மறைகிற மேகம் மாதிரி புரொபசரோடு பழகினதை ஒரு பாஸிங் க்ளவுட் ஆக நினைச்சு உன்னால் மறக்க முடியாதா....?

"அவள் அதற்கும் பதில் ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏன் அப்படிப் பார்க்கிற திவ்யா...? எதுக்குக் கேட்கறேன்னால் புதுசாக ஒரு பிரச்சினையைக் கிளப்பி ஏன் எல்லார் மனசையும் கஷ்டப்படுத்தணும்னு நினைக்கிறேன். நீ பழசையெல்லாம் மறந்துட்டு-அதாவது ஒட்டு மொத்தமாக உடனே மறக்க முடியாதுதான். ஞாபகம் - என்பது துணியில்லை. கத்தரிக்கோல் கொண்டு உடனே வெட்டி எறிந்துவிட.... ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக மனசை என் பக்கம் திருப்ப முடியும்னால்-மெதுவாகப் பழைய நினைவுகளை மறக்க இயலும்னால் என்னால் உன்கூட வாழ்க்கை நடத்த முடியும் திவ்யா. எனக்கு அது சாத்தியம்; உன்னால் முடியுமா திவ்யா....?

அவன் கேட்டதும் அவளுக்குத் துக்கம் அதிகமாயிற்று. கன்னங்களில் கண்ணீர் கோடுகளாக வழிய அவனை நிமிர்ந்து பார்த்தாள். உதடுகள் துடித்தனவே தவிர பேச்சு வரவில்லை. பேச முடியவில்லை. நெஞ்சில் இருப்பதை வார்த்தைகளில் சொல்கிற வலிமையற்று மேலும் அழத் துவங்கினாள்.

அந்த அழுகை அவனை எரிச்சல் படுத்திற்று. உள்ளுக்குள் சுள்ளென்று ஒரு கோபம்கூட எட்டிப் பார்த்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டு பேசினான்.

"உன்னால முடியாதுன்னு தோணினால் சொல்ல



வேண்டியதுதானே....? அதுக்கு ஏன் அழற....? அழுகையினால் எதை சாதிக்க முடியும்னு நினைக்கிற....?"

"நோ.... நான் எதையும் சாதிக்கணும்னு நினைக்கலை. என்னால் எதையும் சாதிக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். நான் எதற்கும் தகுதியில்லாதவள். அதனால்தான் அழுகை வர்றது. நீங்க ரொம்பத் தெளிவாக யோசிக்கிறீங்க.... தீர்மானமாக முடிவு பண்றீங்க.... பிரபு கூட அப்படித்தான். திடமான மனசும், தீர்மானமான எண்ணங்களும் கொண்டவர். நான் ஏன் இப்படி இருக்கேன்னு தெரியலை...? எது வேணுமோ அதில் தீர்மானமும், பிடிவாதமும் இல்லாமல் அம்மா, அப்பா சொல்றதையெல்லாம் கேட்டு மனசுக்குள் அலைபாயறேன்னு தெரியலை...."

"தெரிஞ்சுக்கோ.... இனிமேலாவது புரிஞ்சுக்கோ.... இந்த மாதிரி இரட்டை மனசு வாழ்க்கைக்கு ஒத்துவராது. இப்போதாவது ஒரு முடிவிற்கு வா. உனக்கு என்னோடு வாழவே முடியாதுன்னு தோணினால் உன் மனசு அதற்கு இடம் கொடுக்கலைன்னால் உன்னை நானே இப்போ உன் வீட்டுல கொண்டுபோய் விட்டுட்டு வரேன். இல்லாவிட்டால் இவன் நல்லவன். நம் மனசைப் புரிந்துகொண்டவன். இவனோடு வாழமுடியும்னு நினைச்சால்.... வெல் அண்ட் குட். அதை நான் சந்தோஷமாக வரவேற்கிறேன். இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி நமக்குள் நடந்ததாகவே நினைக்காமல் நீ சொன்ன எல்லாவற்றையும் மறந்து என்னால் உன்னுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்த முடியும். நீ சொல்வதுதான் முடிவு. உனக்கு எவ்வளவு நேரம் வேண்டுமோ எடுத்துக்க. எடுத்துண்டு யோசிச்சு இன்னி ராத்திரிக்குள் முடிவு சொல்...."

"வேணாம்.... எனக்கு நேரமெல்லாம் வேணாம். இப்பவே சொல்லிடறேன். எனக்கு என் பிரபுதான் வேணும். பிரபு இல்லாமல் என்னால் வாழ முடியாது.... பிரபுவைத் தவிர வேறு யார் கூடவும் வாழ்க்கை நடத்த முடியாது...."

கரகரத்த குரலில் கண்ணீருக்கிடையில் அவள் சொல்லி முடித்தபோது ஒரு விநாடி அயர்ந்து போனான் நரேந்திரன். "இத்தனை தீவிரமாக அன்பு வைத்திருக்கும் பெண்ணையா இப்படி வலுக்கட்டாயமாகக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கிறார்கள் என்கிற கோபம் அவளது பெற்றோர் மீது ஏற்பட்டது. எப்படிப்பட்ட அன்பு! அந்த அன்பைப் பிரிக்கக் கூடாது. பிரியக் காரணமாக இருந்த தானே ஒன்றுசேர்த்து வைக்க வேண்டும் என்று மனதிற்குள் தீர்மானமாக முடிவு செய்தவன் விநாடி நேரத்திற்குள் தான் செய்ய வேண்டியவைகளை யோசித்தான். முதலில் இதற்கு மேலும் இவளுடன் இந்த அறையில் இருப்பது தப்பு என்று தோன்றிற்று. 'இவள் சொல்வதைக் கேட்டால் அந்த பிரபுராம் நல்லவனாகத்தான் தெரிகிறான். ஆனாலும் இரவு முழுதும் தன்னுடன் தங்கின பெண்ணை ஒன்றுமே நடக்காது போனாலும் நடக்கவில்லை என்று சொன்னாலும் நம்பி ஏற்றுக் கொள்ள வேண்டுமே...' என்கிற சந்தேகம் வந்தவுடன் இன்னமும் தீர்மானமாக அழுத்தமான குரலில் சொன்னான்.

"அழாதே திவ்யா.... எழுந்திரு. முகத்தைத் துடைச்சுக்கோ. இப்போவாவது உனக்கு இந்தத் தைரியம் வந்ததேன்னு நான் சந்தோஷப்படறேன். மனதில் இருப்பதை மறைக்காமல் வெளியில் சொன்னதற்கு பாராட்டறேன். மனசுக்குப் பிடிக்காதவனுடன் காலம் காலமாக வாழற சிறை வாழ்க்கையைவிட மனசுக்குப் பிடித்தவனுடன் ஒரு நாள் வாழ்ந்துட்டு மறுநாள் செத்துப்போறது எவ்வளவோ சந்தோஷமானது. மேலானது. அதற்காக உன்னை செத்துப் போகச் சொன்னேன்னு நினைச்சுக்காதே... நீ அந்தப் பிரபுராம் கூட சந்தோஷமாக வாழணும் பேரன் பேத்தியெல்லாம் எடுத்துக் கொஞ்சணும்னு மனசு பூர்த்தியாக நான் இப்போ வாழ்த்தறேன். அவரோடு உன்னை சேர்த்து வைக்க என்ன செய்யணுமோ அதைச் செய்ய இந்த நிமிஷத்துலேர்ந்து நான் தயாராகணும். அதனால் நீ



கிளம்பு திவ்யா. உன்னை இப்போதே உன் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு வரேன்...."

அதிர்ந்துபோன திவ்யா பயத்தோடும் நடுக்கத்தோடும் அவனைப் பார்த்தாள்.

"எங்க வீட்ல கொண்டுபோய் விடப் போறீங்களா...? அவ்வளவுதான் எங்கப்பா என்னைக் கொன்று போட்டுடுவார்...."

"இனிமேல் உன் மீது கை வைக்கிற உரிமை அவருக்கு இல்லை. இன்னைக்குக் காலையிலேயே அவர் அந்த உரிமையை இழந்தாச்சு. அதனால் நீ தைரியமாகக் கிளம்பு...."

"ஐயோ.... வேணாம். எனக்கு எங்க வீட்டுக்குப் போகப் பிடிக்கலை..."

"இல்ல திவ்யா.... இதுக்கு மேலும் நீ இங்க தங்கறது சரியில்லை.... நாளைக்கு உன் பிரபுராமே இதைப் பத்தி சந்தேகப்படலாம்..."

"மாட்டார்.... என் பிரபுவிற்கு என்னைப்பற்றி நன்றாகத் தெரியும். ஒரு போதும் என்னைச் சந்தேகப்படமாட்டார்...."

"முட்டாள்! அவன் சந்தேகப்படாமல் இருக்கலாம். ஆனால் நானும் மனுஷன் தான். அதிலும் ஒரு ஆண். ஆசைப்பட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிட்டேன். இன்னிக்கு முதல் ராத்திரி. ஆனால் முடிஞ்சு போன ராத்திரி. இந்த நிமிஷம் வரை மனுஷனாக இருக்கேன். எனக்குள் இருக்கிற மனுஷத்தனம் ஓங்கியிருக்கு. ஆனால் அந்த மனுஷத் தனம் குறைந்து மிருகத்தனம் லேசாக மெதுவாக எட்டிப் பார்க்க ஆரம்பிச்சது என்றால் என்னவாகும்னு யோசிச்சுப் பாரு... நான் உன் பிரபுவிற்காக மட்டும் சொல்லலை. எனக்காவும் சேர்த்துச் சொல்றேன். நீ இங்கே இருப்பது சரியில்லை. கிளம்பு..."

"ஐயோ .. வேணாம். உங்களுக்கு என் அப்பாவைப் பற்றித் தெரியாது...."

"இல்லை திவ்யா... இனிமேல்தான் உங்கப்பா யாருன்னு நீ புரிஞ்சுக்கப் போற.... நீ புரிஞ்சுக்கிறது இருக்கட்டும். முதல்ல அவர் அவரைப் புரிஞ்சுக்கணும். செய்த தவறுகளையெல்லாம் உணரணும். மத்தவங்க மனசிற்கும், ஆசைகளுக்கும், எண்ணங்களுக்கும் மதிப்புக்கொடுக்கணும். அவங்களை – பெத்த பிசங்களானாலும் அவர்களை அடிமைகள் மாதிரி நடத்தக் கூடாது என்கிற பாடத்தை இதன் மூலம் அவர் கத்துக்கணும்..."

திவ்யா கண்களில் நீர் நிறைய அவனிடம் கை கூப்பினாள்.

"தயவு செய்து வேணாம். அதைவிட என்னை ஏதாவதொரு அனாதை இல்லத்தில் சேர்த்துவிடுங்க..."

"ஷட் அப்! முதல்ல கையைக் கீழே போடு. இப்படி அழறதை நிறுத்து எதற்கும் தைரியமற்று இப்படிக் கோழையாக அடங்கிப் போறதால்தான் உங்கப்பா மாதிரி ஆண்கள் உருவாகறாங்க... உங்கப்பாவுக்கு ஒரு நல்ல பாடம். இந்த வயசுல அவருக்கு இது வேணும். கிளம்பு...."

"இல்லை... நான் வரமாட்டேன். இங்கே இருக்கக் கூடாதுன்னு நீங்க நினைச்சால் நான் வேற எங்கேயாவது வெளியில் போயிடறேன்..."

"நோ.... அது தப்பு. அப்படியெல்லாம் போகக்கூடாது. போக உன்னை விடவும் மாட்டேன். ஒரு கௌரவமான கண்ணியமான ஆண் என்ன செய்வானோ அதைத்தான் நான் செய்ய முயற்சி பண்றேன். தயவு செய்து என்னை என் கடமையைச் செய்ய விடு திவ்யா... இப்போது நான் உன்னைக் கைகூப்பிக் கேட்டுக் கொள்கிறேன். கிளம்பு ப்ளீஸ்...."

அவன் கை கூப்பி வேண்டினதும் வேறு பதில் எதுவும் பேசாமல் அவன் கார் சாவியை எடுத்துக் கொண்டு கிளம்பினதும் அவளும் பின்னாலேயே போய் காரில் அவனுடன் ஏறி உட்கார்ந்தாள்....



## 9

"லுக் மிஸ்டர் சிவராமன். நீங்க செய்த காரியம் கொஞ்சம்கூட சரியில்லை. ஒரு தனியார் கம்பெனியில் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கிற உங்களுக்கு உங்க சொந்தப் பெண்ணோட மனசு விருப்பப்படி விட்டுக் கொடுக்கிற பெருந்தன்மை இல்லை. வரட்டுக்கௌரவமும் ரத்தத்தோடு வந்த பிடிவாதமும் தடுத்திருக்கு... அதனால் நீங்க என்ன சாதிக்க முடிஞ்சது...? மிரட்டி உருட்டி உங்க பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வச்சீங்களே... இப்போ எங்க ரெண்டு பேரையும் ஒன்றாக வாழ வைக்க முடிந்ததா....? எத்தனைப் பேர் மனசைப் புண்படுத்தி, ரணப்படுத்தி, காயப்படுத்திப் பாழ்பண்ணிட்டீங்க பார்த்தீங்களா....!"

ஓங்கி கன்னத்தில் அறைந்த மாதிரி அப்பா ஒருவினாடி ஆடிப்போனார். எதிர்பாராத சந்தர்ப்பத்தில் எதிர்பாராமல் விழுந்த அடி. அவர் வாழ்நாளில் இதுவரை யாரும் அடித்தே இராத அடி. நரேந்திரனின் வார்த்தைச் சாட்டைகளில் சுருண்டு அடங்கி ஒன்றுமில்லாமல் கைகூப்பினார் அவர்.

கண்களில் கரகரவென்று கண்ணீர் வடிய கெஞ்சத் தொடங்கினார்.

"ப்ளீஸ் மாப்பிள்ளை.... இந்த விஷயத்தை நீங்க பெரிசு படுத்தக்கூடாது. அவ சின்னப் பொண்ணு.... எது நல்லது எது கெட்டதுன்னு தெரியாமல் ஏதோ உளறிட்டா.... அதையெல்லாம் பெரிய மனசு பண்ணி நீங்க மறந்துடணும்...."

"யார் சின்னப் பொண்ணு...? எம். ஏ, படிக்கிறவளா?

அவள் ஒன்றும் குழந்தை இல்லை மிஸ்டர் சிவராமன். அவளுக்கு எது வேண்டும், எது வேண்டாம் என்பதில் தீர்மானமாக இருக்கிறாள். உங்களுக்குத்தான் புரியலை...''

''எனக்குப் புரியாமல் இல்லை. ஆனால் அதெல்லாம் நம்ம குடும்பத்துக்கு ஒத்து வராது...''

''ஏன் ஒத்து வராது....?''

''இந்த நேரத்துலே அந்தப் பேச்செல்லாம் வேண்டாமே.... அவள் தெரியாமல் செய்த தவறாக நினைச்சு நீங்கதான் மன்னிச்சு ஏற்றுக்கணும். ஏதோ நடந்தது நடந்து போச்சு. அந்தப் பையன் யாரு, என்ன ஜாதி என்கிற எதுவும் எனக்குத் தெரியாது. நான் பார்த்தது கூட இல்லை....''

''எதுவும் தெரியாமலே அவரை வேணாம்னு ஒதுக்கி விட்டீர்களா...?

''இல்லை. இந்தக் கல்யாணம் நிச்சயம் ஆகிற வரைக்கும் எனக்கு எதுவும் தெரியாது. சத்தியமாகச் சொல்றேன். இதை நீங்க நம்பணும்.''

''நான் நம்பறது இருக்கட்டும் திவ்யா உங்ககிட்டே எல்லாம் சொன்னாள் இல்லையா....?''

''சொன்னாள். இந்தக் கல்யாணம் நிச்சயமானதற்கு அப்புறம் சொன்னாள்.''

''அப்போ நிறுத்தியிருக்க வேண்டியது தானே?''

''நிச்சயமெல்லாம் ஆகி பாக்கு வெற்றிலை மாற்றினப்புறம் எப்படி நிறுத்தறது....? அப்படி ஒரு கல்யாணம் நின்னு போனால் எத்தனை அவமானம்..?''

''இதுல என்ன அவமானம் இருக்கு....? நாம் என்ன நாலு பேர் மத்தியிலா பாக்கு வெற்றிலை மாற்றிண்டோம். நமக்குள்ளதானே மாற்றிண்டோம்...? அவமானத்துக்காகப் பயந்து நீங்க இந்தக் கல்யாணத்தை நடத்தலை. உங்க



ஈகோ நடத்திற்று. உங்க பேச்சை மீறி உங்க பொண்ணு ஒரு காரியம் செய்வதா? திமிர். கர்வம் எல்லாம் சேர்ந்து இந்தக் கல்யாணத்தை நடத்தி வச்சுது...''

''ஐயோ... நீங்க இந்த மாதிரியெல்லாம் பேசக்கூடாது மாப்பிள்ளை...''

''தயவு செய்து இனிமேல் என்னை மாப்பிள்ளைன்னு கூப்பிடாதீங்க...''

''தயவு செய்து நீங்க அப்படியெல்லாம் சொல்லாதீங்க... என் பொண்ணு மேல உங்களுக்குச் சந்தேகம் வேண்டாம். அவ ரொம்ப நல்லப் பொண்ணு. வரம்பு மீறி நடந்திருக்கவே மாட்டாள். அப்படியெல்லாம் நடக்கிற தைரியம் அவளுக்குக் கிடையாது. அந்த மாதிரி தைரியம், செல்லமெல்லாம் கொடுத்து நான் வளர்க்கலை. பொண்ணாகட்டும், பையனாகட்டும்.... ரொம்ப கண்டிப்பாக வளர்த்திருக்கிறேன், கேட்டதையெல்லாம் வாங்கித் தந்ததில்லை. ஒரு இடத்துக்கு அனுப்பினதில்லை. ரொம்ப ரொம்பக் கட்டுப்பாடாக வளர்க்கணும்னு நினைச்சேன். ஆனால் நான் தோற்றுப் போயிட்டேன். என் பொண்ணே எனக்குத் துரோகம் பண்ணுவான்னு நான் நினைக்கலை....''

''கண்டிப்பாக, கட்டுப்பாடாக வளர்க்கிறதாக நினைச்சு அடிமை மாதிரி வளர்த்திருக்கீங்க. நடத்தியிருக்கீங்க இந்த வீட்ல உங்க விருப்பங்கள் மட்டுமே நிறைவேறியிருக்கு மிஸ்டர் சிவராமன், மற்ற யாா் விருப்பங்களுக்கும் நீங்க மதிப்புக் கொடுத்ததில்லை. யாரைப் பற்றியும் நினைச்சதில்லை. உங்க வீட்ல உங்களைத் தவிர வேறு யாரும் சந்தோஷமாகவும் இல்லை. ஆட்டு மந்தையில் இருக்கிற ஒரு ஆடு மாதிரிதான் திவ்யா இருந்திருக்கணும். திவ்யா மட்டுமில்லை இந்த வீட்ல உங்களைத் தவிர மற்ற மூன்று பேருமே அப்படித்தான் இருக்காங்க. அப்பாங்கிற அதிகாரம், வீட்டுத் தலைவன் என்கிற மமதை இரண்டும் சேர்ந்து உங்கள் கண்களை மறைச்சிடுத்து....''

"இல்லை... ஒரு அப்பா செய்யவேண்டிய கடமையைத் தான் நான் நிறைவேற்றணும்னு நினைச்சேன்...."

"அப்படி நினைச்சிருந்தால் இந்த மாதிரி நடந்துக்கிட்டிருக்க மாட்டீங்க. ஒரு அப்பாவின் கடமைகளில் ஒன்று பெற்ற பெண்ணின் மனசுக்குப் பிடிச்சவனைக் கல்யாணம் பண்ணி வைக்கிறது. அவ சந்தோஷமாக அவனுடன் வாழறதைப் பார்த்து சந்தோஷப் படறது. ஆனால் நீங்க அவளுடைய ஆசைக்குமாறாக வற்புறுத்தி கல்யாணம் பண்ணி வச்சிருக்கீங்க...."

"அவ ஆசைப்பட்டதையெல்லாம் நடத்தி வச்சுட முடியுமா....? எதுக்கு ஆசைப்படணும்னு இருக்கு இல்லையா...? கல்யாண விஷயத்தை அவள் எப்படித் தீர்மானிக்க முடியும்?"

"ஏன் முடியாது....? இது அவளுடைய கல்யாண விஷயம். இதை அவள் தீர்மானிக்காமல் வேற யார் தீர்மானிக்க முடியும்....? பார்க்கப்போனால் இதைத் தீர்மானிக்கிற உரிமை அவளுக்கு மட்டும்தான் இருக்கு...."

"என்ன இப்படிச் சொல்றீங்க....? எது நல்லது, எது கெட்டதுன்னு அவருக்கு எப்படித் தெரியும்...?"

"ஏன் தெரியாது....? அந்தக் காலம் மாதிரி பொண்ணுக்குப் பத்து வயசுக்கும், பனிரெண்டு வயசுக்குமா கல்யாணம் பண்றீங்க....? இல்லாவிட்டால் படிக்காமல் வீட்டுக்குள் இருக்கிற பொண்ணுக்குப் பண்றீங்களா? காலேஜ்ல எம்.ஏ. படிக்கிற பொண்ணு. இருபத்தியோரு வயசு...."

"வயசாகி இருக்கலாம். ஆனால் அறிவு வளரலையே.... அறிவு வளர்ந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்து கொண்டிருப்பாளா....?"

"இப்படி நடந்து கொண்டிருப்பாளான்றதுக்கு என்ன அர்த்தம்...?" அவள் காதலிச்சது தப்புன்றீங்களா.... இல்லை அதை என்கிட்டே சொன்னது தப்புன்றீங்களா....?"



முதல் விஷயத்தை அவள் செய்திருக்காது போனால் இரண்டாம் விஷயமே நிகழ்ந்திருக்காது இல்லையா...."

"நீங்க இப்படிப் பேசிண்டே போனால் நானும் வேறு மாதிரி பேசவேண்டி வரும். அது அவ்வளவு நன்றாக இருக்காது. படித்த, பண்புள்ள நாகரிக மனுஷன் செய்கிற வேலையாக இருக்காது. நான் படித்தவன். நல்ல பண்புகளோடும், நாகரிகத்துடனும் மிக முக்கியமான விஷயம் உங்ககிட்ட சொல்லவேண்டிய விஷயம்.

"எனக்குத் தேவையான சுதந்திரத்துடனும் வளர்க்கப்பட்டவன். அதனால் உங்களை மாதிரி முரட்டுத்தனமாக என்னால் பேச முடியாது. நடந்து கொள்ள முடியாது. மற்றவங்க உணர்ச்சிகளுக்கும், ஆசைகளுக்கும், அபிப்ராயங்களுக்கும் மதிப்புக் கொடுத்து நடந்துகொண்டு வரும் காரணத்தினால்தான் திவ்யாவின் உணர்ச்சிகளுக்கு மதிப்பு கொடுக்க முடிந்தது. அவளுடைய ஆசைகளையும், அபிப்பிராயங்களையும் புரிந்துக்க முடிந்தது. அதனால்தான் அவள் இஷ்டப்படி, அவளுடைய மனசுக்குப் பிடித்தமான இடத்தில் பிடித்த மனிதருடன் வாழணும்னு நினைக்கிறேன்...."

"என்ன.... என்ன சொல்றீங்க மாப்பிள்ளை...." என்று அதிர்ந்து போனார் அவர்."

"திவ்யாவிற்கு இன்னொரு கல்யாணமா....? இன்னிக்குத்தான் கல்யாணம் நடந்தது. அதற்

அவரை முடிக்க விடாமல் இடையில் குறுக்கிட்டு மிக அழுத்தமான குரலில் சொன்னான் நரேந்திரன்.

"லுக் மிஸ்டர் சிவராமன். இன்னிக்கு நடந்தது கல்யாணமே இல்லை. இதுக்குப் பேர் உங்க கண்டிப்பு சார். உங்க பயமுறுத்தல். உங்க கட்டளை. அதற்குத் தலையாட்டி பொம்மை மாதிரி தலையாட்டின திவ்யாவோட தைரியமில்லாத கோழைத்தனம். இவைதான் இன்று காலையில்

நடந்ததற்கு பெயரே தவிர கல்யாணமில்லை. அதனால் இப்படி ஒன்று நடந்தது என்பதை நாம் எல்லோரும் மறந்து விட்டு அவளைப் பிரபுராமுடன் சந்தோஷமாகச் சேர்த்து வைக்கலாம். அதுதான் மனுஷத்தனம்.''

''முடியாது. என்னால் முடியாது. இந்த மாதிரி ஒரு காரியத்துக்கு ஒரு போதும் நான் சம்மதிக்க மாட்டேன்.''

''அப்படின்னால் மீண்டும் மனுஷனாக நடக்க மாட்டேன்னு சொல்லாமல் சொல்றீங்களா....''

''நீங்க மனுஷன்னு சொன்னாலும் சரி. மிருகம்னு நினைச்சாலும் சரி. நீங்க சொல்ற காரியதுக்துக்கு ஒரு போதும் என்னால் சம்மதிக்க முடியாது. அதைவிட அவளைக் கொன்னு போட்டுட்டு நானும் செத்துப் போவேன்....''

''போதும் மிஸ்டர் சிவராமன். இதையே எத்தனை தரம் சொல்வீங்க....? இதைக் கேட்டுப் பயந்து உங்களுக்குத் தலையாட்ட நான் ஒன்றும் உங்கள் வீட்டுப்பெண்களில்லை வீட்டில் நீங்கள் அடைத்து வைத்திருக்கிற ஆட்டு மந்தை யில் ஒருவனில்லை.... இனி திவ்யாவைத் தொடுவதற்கோ, கைநீட்டி அடிப்பதற்கோ உங்களுக்கு உரிமை இல்லை. அந்த உரிமையை இன்று காலையிலேயே நீங்கள் இழந்து விட்டீர்கள். அதனால இனி அவளைப் பற்றின முடிவு என்னுடையதே தவிர உங்களுடைய இல்லை...''

''சரி.... நீங்கள் இவ்வளவு தூரம் பேசினதற்கப்புறம் என்னாலும் பேசாயல் இருக்க முடியாது. அவளைப்பற்றின உரிமை எனக்கில்லை. இன்னிக்குக் காலையிலேயே அதை உங்களுக்குத் தாரை வார்த்துத் தந்துவிட்டேன். இனி அவளைப் பற்றின முடிவு உங்களுடையதுதான். அதை நான் மறுக்கலே.... அதனல் எனக்கு உரிமையில்லாத ஒரு பொருளை என்னால் வீட்ல வச்சுக்க முடியாது. அதனால் என்ன முடிவு எடுத்தாலும் அவளை உங்க வீட்டுக்குக்



கூட்டிண்டு போய் எடுங்க. இங்க எடுக்க வேணாம். ஏன்னால இது என்னுடைய வீடு. இங்கே எனக்கு உரிமை யானவங்க, சொந்தமானவங்க மட்டுமே இருக்க முடியும். என் பேச்சைக் கேட்கிறவங்களுக்குத்தான் இது இடம்....''

ஒரு வினாடி அதே கோபத்தில் முகம் சிவக்கப் பார்த் தான் நரேந்திரன். பின்னர் அத்தனைக் கோபத்திலும் மெதுவாகவே பேசினான்.

''நீங்க இந்த ஜென்மத்தில் உங்க தப்பை உணரப் போறதில்லை. உங்களை மாதிரி மனிதர்கள் இருக்கிறவரை இந்த சமுதாயம், சமூகம், பெண்களின் நிலைமை எதுவும் மாறப்போறதில்லை. சீ! என்ன இரக்கமற்ற மனுஷத்தன மற்ற மனிதன்.'' என்றவன் தன் பின்னால் பயந்து ஒடுங்கித் தலைகுனிந்து நின்றிருந்த திவ்யாவிடம் சொன் னான்.

''வா திவ்யா.... இவர் வீடு இல்லை என்றால் இந்த பெட்ராஸ்ல வேறு இடமேவா இல்லை, நீ என் வீட்ல இரு. எங்கம்மா துணையோடு இரு. உன் பிரபுராம் வரும்வரை நான் ஓட்டல்ல தங்கிக்கிறேன்...'' என்றவன் மீண்டும் ஒருமுறை அவளது அப்பாவைப் பார்த்து வலது கையை உயர்த்தி சல்யூட் அடிக்கிற பாவனையில் சொன்னான்.

''குட்பை மிஸ்டர் சிவராமன். காட் ப்ளெஸ் யூ....''

## 10

அன்றைக்குப் பார்த்து ரயில் நேரம் கழித்துத்தான் வந்தது. எட்டு மணிக்கு வரவேண்டிய வண்டி ஒன்பதரைக் குத்தான் வந்தது. அது வரை பொறுமையாகப் பிளாட் பாரத்திலேயே காத்துக் கொண்டிருந்தான் நரேந்திரன். திவ்யாவுடன் கூடவே அம்மாவையும், அப்பாவையும்

அழைத்துக் கொண்டு வந்திருந்தான். நூறாவது முறையாக பிரபுராமிடம் என்ன பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்பதை மனதிற்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டான். கல்யாணமாகி நான்கு நாட்களானாலும் திவ்யாவிற்கும், தனக்குமிடையில் ஒன்றும் நடக்கவில்லை. தான் வீட்டில் கூடத் தங்காமல் ஓட்டலில் தங்குவதைச் சொன்னால் அவன் நம்ப வேண்டுமே....என்கிற கவலையெல்லாம் இருந்தது. எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று மீண்டும் நினைத்துப் பார்ப்பதே தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் பிளாட்பாரத்தில் உள்ளே நுழைகிற அறிவிப்பு கேட்டது. தூரத்தில் மின்விளக்குகள் பளிச்சிட ரயில் வருவது தெரிந்தது. எதற்கும் பதட்டப்படாமல் நிதானமாக இருக்கக் கூடிய நரேந்திரனுக்குக் கூடச் சற்று படபடப்பு ஏற்பட்டது.

'பிரபுராம் முதலில் தான் சொல்வதையெல்லாம் நம்ப வேண்டும். பின்னர் திவ்யாவை ஏற்றுக் கொள்ளவேண்டும். ஏற்றுக் கொள்வானா....?'

தெரியவில்லை. மெல்லத் திரும்பி திவ்யாவைப் பார்த்தான். அவள் முகத்திலும் பிரபுராமைப் பார்க்கப் போகிற அத்தனை ஆர்வத்திற்கிடையிலும் ஓர் குழப்பம் தெரிவதை உணர்ந்தான். ஒருவேளை தனக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகம் அவளுக்கும் ஏற்பட்டிருக்குமோ என்று தோன்றிற்று. அவன் அவ்வாறு நினைத்துக் கொண்டிருந்த போதே வண்டி வந்து நின்றது.

பெட்டி பெட்டியாக திவ்யாவோடு சேர்ந்து அவனும் பிரபுராமைத் தேடினான். கடைசியில் மாணவர்களுக்காக என்று எழுதி ஒட்டப்பட்டிருந்த கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்தவர்கள் திவ்யாவைப் பார்த்து ஆச்சரியப் பட்டனர்.

"என்ன திவ்யா....சாரை வரவேற்க வந்திருக்கியா...?" என்று கண்ணடித்துக் கேட்டனர்.

"உங்க அப்பா எப்படி ஸ்டேஷனுக்கு வரவிட்டாரா



திவ்யா...? அதுக்கும் தடை விதிச்சிருப்பாரே... 144 போட்டிருப்பாரே...'' என்றான் நந்தா....

''டேய் சும்மா அறுக்காதீங்கடா.... பதினைந்து நாட்களாக திவ்யாவும், சாரும் பார்த்துக்கலை.... முதல்ல திவ்யா சாரைப் பார்க்கட்டும்... நாம் போகலாம் நகருங்கடா....'' என்றான் ரவீந்திரன்.

இதையெல்லாம் கேட்டு நரேந்திரன் புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டிருந்தபோதே எல்லாருக்கும் கடைசியாகக் கையில் சூட்கேஸைத் தூக்கிக்கொண்டு கீழே இறங்கின பிரபுராம் ஒரு வினாடி திவ்யாவை எதிர்பார்க்காமல் ஆச்சரியப்பட்டுப் போனான். அத்தனை பிரயாணக் களைப்பிலும் அவளைப் பார்த்ததும், அவன் முகம் மலர்ந்தது. மெதுவாக அருகில் வந்து வழக்கமான சிரிப்போடும் கனிவான குரலிலும் கேட்டான்.

''என்ன திவ்யா ஆச்சரியமாக இருக்கு....? நீயா ஸ்டேஷனுக்கு வந்திருக்கே....? இரு ஒரு நிமிஷம். நிஜமாகவே நீதானான்னு கிள்ளிப் பார்க்கிறேன்...''

அவன் அவளது கை தொட்டுக் கிள்ள அவள் வலிய வரவழைத்துக் கொண்ட சிரிப்போடு கேட்டாள்.

''பிரயாணமெல்லாம் எப்படி இருந்தது பிரபு.... நன்றாக என்ஜாய் பண்ணினீங்களா...?''

''எங்கே என்ஜாய் பண்றது திவ்யா....? நீயில்லாமல் எதை அனுபவிக்க முடியும்? அதான் கடிதத்தில் எழுதியிருந்தேனே.... படிக்கலை...?''

''படிச்சேன்... நான் மட்டுமில்லை, படிக்கச் சொல்லி இன்னொருத்தர் கிட்டேயும் கொடுத்தேன்...''

''இன்னொருத்தர் கிட்டயா...? என் லெட்டரையா...? யார் அது திவ்யா...?''

''நான் தான்...'' என்று முன்னால் வந்து தானாகக்

கைநீட்டி பிரபுராமின் கையைப் பற்றிக் குலுக்கினான் நரேந்திரன்.

"என் பெயர் நரேந்திரன். கலிபோர்னியாவில் இருக்கேன். இவர்கள் என் பெற்றோர்கள். இங்கே அண்ணா நகரில் இருக்கிறார்கள்..."

"ஓ...! ப்ளீஸ் டு மீட் யு மிஸ்டர் நரேந்திரன். என் பெயர் பிரபுராம். நான்...."

"தெரியும். எல்லாம் திவ்யா சொன்னாள். அந்த மாதிரி உங்களுக்குத் தெரிய வேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன. நீங்கள் ஊரில் இல்லாதபோது நடந்து போன விஷயங்கள். அவற்றை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்... ஆனால் முதலில் எங்கள் வீட்டிற்குப் போகலாமா மிஸ்டர் பிரபுராம்....? அதில் உங்களுக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லையே...?"

ஒன்றும் புரியாதவனாக ஒரு விநாடி தயங்கின பிரபுராம் பின்னர் திவ்யாவைப் பார்த்துக் கேட்டான்.

"என்ன திவ்யா...?"

"ப்ளீஸ். நான்தான் எல்லாத்தையும் சொல்றேன்னு சொன்னேனே... தயவு செய்து என்னைச் சொல்ல விடுங்களேன்..."

"ஓ கே..." என்று பிரபுராம் தலையாட்ட, "தாங்க்யு மிஸ்டர் பிரபு. உங்க பெட்டியைக் கொடுங்க. நான் எடுத்துண்டு வரேன். இத்தனை நாள் பிரயாணத்துல ஏற்கனவே ரொம்பக் களைப்பாகத் தெரியறீங்க..."

"ஓ... நோ..." என்று மறுத்த பிரபுராம் புன்னகையுடன் சொன்னான்.

"என் பாரத்தைச் சுமக்க நான் யாரையும் விடறதில்லை. நானேதான் சுமக்கிறது..."



"ஆனால் உங்க பாரம் ஒன்றைக் கிட்டத்தட்ட ஒரு வாரமாக நாங்கள்—அதாவது நான், எங்க, அம்மா அப்பா மூன்று பேருமாகச் சுமந்துகிட்டிருக்கோம்..."

"என் பாரமா....? என்ன சொல்றீங்க? எனக்கு ஒன்றும் புரியலை...."

"வீட்டுக்கு வாங்க. விவரமாகச் சொல்றேன். எல்லாம் புரியும்."

"திவ்யா....?"

"அவளும்—ஜயம் ஸாரி... அவங்களும் வராங்க.... இந்த ஒரு வாரமும் அவங்க எங்ககூட எங்க வீட்லதான் இருக்காங்க...."

"திவ்யா....? உங்களுடனா....?! உங்க வீட்லயா ? எனக்கு ஒன்றும் புரியலை. நீங்க சொல்றதெல்லாம் ஏதோ புதிர் மாதிரி இருக்கு .." என்று பிரபுராம் திவ்யாவைப் பார்த்தான். அதற்குள் காரை நெருங்கிக் கார்க் கதவைத் திறந்து விட்டவாறு சொன்னான் நரேந்திரன்.

"எல்லாப் புதிரும் இன்னும் கொஞ்ச நேரத்துல விடுபட்டுடும் மிஸ்டர் பிரபு. அதுவரை தயவு செய்து நீங்க எங்களைப் பொறுத்துக்கணும்...."

நரேந்திரன் சொன்ன எதையும் நம்பமுடியவில்லை பிரபுராமினால். 'நிஜமாகவா.... நிஜமாகத்தானா....?' என்று அரற்றினான். திரும்பத் திரும்பக் கேட்டான். ஒரு திரைப்படத்தின் க்ளைமாக்ஸ் காட்சி மாதிரி தான் ஊரில் இல்லாத இந்தப் பதினைந்து நாட்களில் இத்தனைச் சம்பவங்களும் நடக்க முடியுமா? நடந்திருக்கிறதா....? பத்தே நாளில் கல்யாணமும், கல்யாணமான அன்று ராத்திரியே பிரிவும், அந்தப் பிரிவை நான் நம்ப வேண்டும் என்கிற காரணத்திற்காக ஓட்டலில் தங்கிக் கொண்டிருக்கிற நரேந்திரனும்.... "ஓ! எத்தனை உயர்ந்தவன்...! எவ்வளவு கண்ணியமானவன்....! மற்றவர்களின் உணர்ச்சி

களுக்கு எவ்வளவு மதிப்பு கொடுப்பவன்! அவனளவிற்குத் தன்னால் உயர முடியுமா என்று நினைத்துப் பார்த்தான். நரேந்திரனின் இடத்தில் தான் இருந்திருந்தால் என்ன செய்திருப்போம் என யோசித்துப் பார்த்தான். இத்தனைப் பரந்த மனத்தோடும், தெளிவான, தீர்க்கமான முடி வோடும் நடந்து கொண்டிருப்போமா என்று கேள்வி கேட்டுக் கொண்டான்...

ஒரு வினாடி இப்படித்தான் தானும் நடந்து கொண் டிருப்போம் என்று தோன்றியது. மறு வினாடி இவ்வளவு உயரமான எண்ணங்கள் இருந்தாலும் மீண்டும் திவ்யாவை அழைத்துக் கொண்டுபோய் அவளது அப்பாவிடம் பேசுகிற தைரியமோ, அல்லது மறுபடியும் என்னோடு சேர்த்து வைக்கத் துணிந்த அந்த நெஞ்சுத் திடமோ வந்திருக்காது எனவும் பட்டது. இவனது இத்தனைத் தெளிவான, தீர்க்க மான, திடமான சிந்தனைக்கும், தைரியத்திற்கும் சுதந்திர மாக முடிவெடுக்கும் தன்மைக்கும் இவனது அமெரிக்க மண்ணின் வாழ்க்கைகூட ஒரு காரணமாக இருக்கக் கூடுமோ...? ஒரு சராசரி வெறும் இந்தியனாக இருக்கிற பட்சத்தில் இந்த அளவு பரந்த மனப்பான்மையோடு நடந்து கொண்டிருக்க இயலுமா என்பதை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்த போதே நரேந்திரன் எழுந்து அவனருகில் போனான். அவனது கைகளைப் பற்றிக் கொண்டு மிகவும் உருக்கமான நெகிழ்ச்சியான குரலில் பேசத் துவங்கினான்.

''மிஸ்டர் பிரபுராம், உங்க திவ்யாவை உங்ககிட்டே ஒப்படைக்கணும்னுதான் நான் இத்தனை நாள் காத்துக் கிட்டிருந்தேன். அவங்க அப்பா அவங்களை ஏற்றுக்கிட்டி ருந்தால், உங்ககிட்ட ஒப்படைக்கிற பொறுப்பை பகிர்ந்துக் கிட்டிருந்தால், நான் மறுநாளே கிளம்பி கலிபோர்னியா போயிருப்பேன். திவ்யாவுக்கும் எனக்கும் கல்யாணம்னு ஒண்ணு ஆச்சே தவிர வேற ஒண்ணும் நடக்கலை. சினிமாக்களில் செட்போட்டு நடத்தப்பட்டு நடக்கிற



கல்யாணம் மாதிரிதான் இதுவும் நடந்து போச்சு. அந்த ஷாட் முடிந்த உடனே கல்யாண வேஷத்தைக் கலைக்கிற கதாநாயகன், கதாநாயகி மாதிரித்தான் நாங்களும் மாப் பிள்ளை, மணப்பெண் வேஷத்தையும், கணவன், மனைவி வேஷத்தையும் கலைச்சுட்டோம். கல்யாணம் நடந்த அந்த முதல் ராத்திரி திவ்யா என்கிட்டே உண்மை முழுசையும் மனசுவிட்டு சொன்னது தவிர என் விரல் நுனிகூட அவள் மீது படலைன்றதை நீங்க நம்பணும். நம்பி அவளை ஏத்துக்க.''

சடாரென்று நரேந்திரனின் உதட்டின் மீது கை வைத்து வாயைப் பொத்தினான் பிரபுராம். கண்ணிரண்டும் கலங்கி உதடுகள் துடிக்க மிக மெதுவாக ஆரம்பித்தான்.

''பேசாதீங்க நரேந்திரன்... தயவு செய்து இதுக்கு மேல் ஒரு வார்த்தை கூடச் சொல்லாதீங்க. சொன்னால் நான் உடைஞ்சு போவேன் நரேந்திரன். நான் நூறாகச் சிதறிப் போவேன். உங்க அளவு என் மனசு பெரிசாக இல்லாமற் போனாலும் இமயமலை அளவுக்கு உயர மில்லை என்றாலும் நீங்க நினைக்கிற மாதிரி சின்ன தில்லை. உங்களை மாதிரி உள்ளுக்குள் கங்கைநதி ஓடாமற் போனாலும் கூவமாகச் சாக்கடைத் தண்ணீர் ஓடலை... எனக்கும் மனசு இருக்கு. மனித உணர்வுகளைப் புரிஞ்சுக் கிற தன்மை இருக்கு. நீங்க விரல்நக நுனியெல்லாம் சொல்லி உங்க முன்னால் என்னை இன்னும் சின்னவனாக்கி டாதீங்க. இந்த மாதிரி ஒரு மனசா...'இந்த மாதிரி ஒரு மனிதனான்னு...' உங்க உயரத்தை எனக்குள் நான் பிரமிப் பாகப் பார்த்துக்கிட்டிருக்கிற போது...நீங்க இப்படிப் பேசலாமே...? அந்த மாதிரி சின்னத்தனமான சந்தேகங் கள் எல்லாம் எனக்குள் வருமா...? வரும்னு நீங்க நினைச் சதே எனக்கு அவமானமாக இருக்கு...''

அதைக் கேட்டு நரேந்திரனும் உணர்ச்சி வசப்பட்டுப் போனான். ஒரு வினாடி பிரபுராமின் கைகளைப் பற்றிக்

கொண்டு அப்படியே நின்றான். பின்னர் "ஸாரி மிஸ்டர் பிரபுராம். நான் பேசினதை வாபஸ் வாங்கிக்கறேன். அப்போ திவ்யாவை ஏற்றுக்கிறதில் உங்களுக்கு அனு அளவு தயக்கமோ, மாறுபட்ட கருத்தோ, அபிப்பிராயமோ இல்லை இல்லையா...?"

"என்ன பேசறீங்க நரேந்திரன். திவ்யா என் னுடையவள். என்னில் பாதி. என்னில் பாதியை என்னால் விட முடியுமா....? இத்தனை நாளாக ஒரு வாரமாக என் பாரத்தை நீங்க சுமந்ததற்கும், பாதுகாப்பாகப் பத்திர மாகக் காப்பாற்றி வச்சதற்கும் நான் எப்படி நன்றி சொல்லப் போறேன்னு தெரியலை. எந்த ஜென்மத்துல இந்த நன்றிக் கடனைத் தீர்க்கப் போறேன்னு தெரி யலை..."

அவன் சொன்னதும் நரேந்திரன் குரலில் உற்சாகமும், சந்தோஷமும், குதூகலமும் வரப் பேசினான்.

"எந்த ஜென்மத்துலயோ நான் பட்ட நன்றிக் கடனை தான் இப்போ தீர்த்திருக்கேன்னு நினைக்கிறேன். எனவே அப்படியானால் இப்பவே திவ்யாவை உங்க கூட கூட்டிட் டுப் போறீங்க இல்லையா....?"

"வித் ப்ளெஷர் மிஸ்டர் நரேந்திரன்..."

"நீங்க ஏதோ ரூம்ல இருக்கிறதா திவ்யா சொன்னாங் களே...அப்படியானால் வீடு...?"

"ஓ.. நீங்க கவலைப்படாதீங்க. பார்த்துக்கறோம். ஏதாவது புரோக்கர்கிட்ட சொன்னால் ஒரே நாளில் வீடு பார்த்துத் தருவான்...."

"இல்லை... அதுவரை இங்கே எங்க கூட தங்கிக்கிற தில் ஆட்சேபனை இல்லையானால்—"

"தாங்க்யு ஸோ மச் மிஸ்டர் நரேந்திரன்; நீங்க செய் திருக்கிற உதவிக்கே எத்தனைப் பிறவி எடுத்து திருப்பிச் செய்யப் போறேனோ தெரியலை.... உங்க விசாலமான





மனசால் மீண்டும் மீண்டும் என்னைக் கடனாளியாக்கா தீங்க..."

"ஓ.கே.... நீங்க அப்படி ஃபீல் பண்ணினால் விட்டு டுங்க... இன்னும் ஒரு விஷயம். திவ்யாவுக்கு அவங்க அப்பா கொடுத்த நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், மற்ற சீர்கள் எல்லாம் இருக்கு..."

"தயவு செய்து அவர்கிட்டயே திருப்பிக் கொடுத்து டுங்க. எனக்குத் தேவை திவ்யாதானே தவிர அவருடைய பணமோ அவர் செய்த சீரோ இல்லை. கட்டின புடவை யுடன் திவ்யாவை மட்டும் நான் அழைச்சுண்டு போறேன்...."

"ஓ....! தட்ஸ் குட்!" என்று கைகொடுத்த நரேந்திரன முதல் முறையாக திவ்யாவின பக்கம் திரும்பினான்.

"ஸோ— உனக்கு சந்தோஷம்தானே திவ்யா....? உன் பிரபுராம்கிட்ட உன்னைச் சேர்த்துட்டேன். உனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாத்திட்டேன்...."

திவ்யா பதில் பேசாமல் கண்களில் நன்றியும், கண்ணீ ரும் பெருக தெய்வ சந்நிதியில் நின்று கைகூப்புகிற பக்தி யோடு கை கூப்பினாள்.

"ஓ... இதெல்லாம் வேண்டாம். சாதாரணமாக இரு திவ்யா. உன் கூடப் படிக்கிற சிநேகிதன் மாதிரி என்னை நினைச்சுக்கோ. ஒரு நல்ல நண்பன்னு நினைச்சுக்கோ. சந்தோஷமாக இரு.... நான் அமெரிக்கா போனப்புறம் லெட்டர் போடறேன். பதில் போடு.... என்ன, போடு வாயா....?"

திவ்யா தலையாட்டினாள்.

"அம்மா திவ்யா கிளம்பறா பாரு...." என்றான்.

அவனுடைய அம்மா உள்ளே போய் ஒரு வெள்ளித் தட்டில் வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பூ, தேங்காய், பழம் இவற்றோடு ஒரு பட்டுப் புடவையும், ரவிக்கைத் துண்டும்

புதிதாகத் தங்கத்தில் செய்த திருமாங்கல்யமும் வைத்துத் தர திவ்யா நரேந்திரனின் அப்பாவையும் நிற்க வைதது நமஸ்கரித்த போது,

''ஒரு நிமிஷம் திவ்யா...'' என்ற பிரபுராமும் அவளோடு சேர்ந்து நமஸ்கரித்தான்.

''சீக்கிரம் கல்யாணம் பண்ணிண்டு இரண்டு பேரும் சந்தோஷமாகக் குடும்பம் நடத்தனும். நாங்க அதைப் பார்க்கனும்...'' என்றார் நரேந்திரனின் அப்பா ராமகிருஷ்ணன்.

அவனது அம்மா கொடுத்த தட்டை வாங்கின போது திவ்யா கேட்டாள்.

''என்னம்மா இதெல்லாம்...?''

''என்னை அம்மான்னு கூப்பிட்டாயோன்னா?' அதனால் அம்மா வீட்டு எளிய சீதனம்னு வச்சிக்கோ... தட்டோடு சேர்த்து வாங்கிக்கோ...''

மீண்டும் திவ்யா கண்கலங்க பிரபுராம் தன் சூட்கேஸை எடுத்துக் கொண்டான்.

''அப்போ, நாங்க போயிட்டு வரோம்...''

''ஒரு நிமிஷம் மிஸ்டர் பிரபுராம்—''

''இனிமே நமக்குள் எதுக்கு இந்த மிஸ்டர் எல்லாம் நரேந்திரன்?''

''இத்தனைக்கப்புறமும் இந்த மரியாதை, அந்நியத் தன்மை எல்லாம் அவசியமா...?''

''இல்லைதான்... ஐயம் ஸாரி. இனிமேல் பிரபுன்னே கூப்பிடறேன்... ஓகே... என் கார்லயே உங்களை டிராப் பண்ணிடச் சொல்றேன். டிரைவர் இருக்கார்...''

''சரி...''

''எங்க போகப் போறீங்க பிரபு...?''



''உட்லண்ட்ஸ் ஹோட்டல்ல முதல்ல ரூம் எடுத்துத் தங்கிட்டு அப்புறம் வீடு தேடலாம்னு இருக்கேன்...''

''ஓ.கே... தட்ஸ் எ ஃபைன். அப்புறம் ஒரு சின்ன வேண்டுகோள் பிரபு...''

''சொல்லுங்க நரேந்திரன். செய்யக் காத்துக் கிட்டிருக்கேன்...''

''நான் இன்னும் நாலைந்து நாளில் டிக்கெட் கிடைச்சதும் யு.எஸ் கிளம்பிடறதாக இருக்கேன். அதற்கப்புறம் அடிக்கடி எங்க அம்மா அப்பாவை வந்து பார்த்துக்கறீங்களா...?''

''என்ன பேசறீங்க நரேந்திரன். அவங்க உங்களுக்கு மட்டும் அம்மா அப்பா இல்லை. எங்களுக்கும் சேர்த்துத் தான்...'' என்றான் பிரபுராம்.

அவர்கள் இருவரையும் காரில் ஏற்றி கார் வீட்டு வாசலை விட்டு வெளியில் போய் தெருமுனையில் திரும்புகிறவரை கேட் அருகில் நின்று கையாட்டினார்கள் நரேந்திரனும் அவனது பெற்றோரும்.

கார் உட்லண்ட்ஸை நோக்கிப் போன போது திவ்யாவின் கரத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்ட பிரபுராம் சொன்னான்.

''வான் இனிது, காற்று இனிது, கடல் இனிது என்கிற மாதிரி இந்த உலகம் இன்னமும் இனிமையான மனிதர்களைக் கொண்டு இனிமையாகத்தான் இயங்குகிறது திவ்யா...''

அதை ஆமோதிக்கிறார்போல் மெல்லப் புன்னகை பூத்த திவ்யா தன் தலையை அவனது தோளில் சரித்துக் கொண்ட போது வாழ்நாளில் அந்த இருபத்தோரு வருடங்களில் முதல் முறையாக எல்லையற்ற நிம்மதியையும் அமைதியையும் சந்தோஷத்தையும் உணரத் தொடங்கினாள்.

(முற்றும்)

## ஆசிரியை இந்துமதியின் பிற நூல்கள்

என்றும் பெண்
பகல் நேர நிலா
துள்ளுவதோ இளமை
ஓடும் மேகங்களே
பூமிக்கு வந்த சூரியன்கள்
தொடுவான மனிதர்கள்
(அமுதசுரபி - சுஜாதா பரிசு பெற்றது)
வீணையடி நீ எனக்கு
பறக்கத் தயங்கும் பறவைகள்
திசை தேடும் பறவைகள்
நெஞ்சத்திலே நீ
சக்தி 90
முகம் இல்லா மனிதர்கள்
என்று புதிதாய்ப் பிறந்தோம்
பறப்பதற்கு முன் கொஞ்சம்
ஏன், எப்படி?
கன்னத்தில் முத்தமிட்டால்
குருத்து
மாயமான்
அசோகவனம்
ஒரு நிமிடம் தா
நெருப்பு மலர்

CONNEMARA PUBLIC LIBRARY
3 1 MAR 2004
CHENNAI-600 008